
# கல்கி

KALKI 25.7.99 ரூ. 4.50

நவாஸ் ஷெரீஃப்

## தோல்வியின் நாயகன்!



# ஆரோக்கியமான தூக்கத்திற்கு அருமருந்து!



DP Foam வழங்கும் PUF மெத்தைகள், களைத்து வரும் முதுகளுக்கு மிருதுவான மருந்து. நாளெல்லாம் உழைத்த சோர்வு தீர உறங்க சுகமான படுக்கைகள். DP Foam மெத்தைகள் மற்ற Foam மெத்தைகளைவிட அடர்த்தியாக இருப்பதால் முதுகிற்கு இதமான பாதுகாப்பு தருகின்றன. நீண்டகாலம் உழைக்கின்றன. பருத்தி மெத்தைகளில் ஆவது போல் தூசி படாது. கழுவலாம். சுலபமாக மடித்தும் வைக்கலாம்.

குடும்பத்தில் அனைவரும் நிம்மதியாக தூங்கி புத்துணர்ச்சியுடன் விழித்தெழ, உங்கள் மெத்தைகள் DP Foam ஆக இருக்கட்டும்.

DP Foam ஸ்வீட் ட்ரீம்ஸ் மெத்தைகள், கான்டூர் தலையணைகள், அதிஅடர்த்தி மெத்தைகள், கன்வெர்ட்டபுட் மெத்தைகள், சேரி கட், ஸ்போர்ட் லீட்ஸ் மற்றும் போல்ஸ்டர்கள், சென்னையிலும் பாண்டியிலும் உள்ள எங்கள் கம்பெனி கடைகளில் மட்டுமே கிடைக்கும்.

**DP FOAM**

**Sweet Dreams**
**Mattresses**


துடிப்பான துவக்கத்திற்கு, நிம்மதியான இரவுகள்.

EX-FACTORY RETAIL OUTLETS

- சென்னை: 180, லஸ் சர்ச் சாலை, கடை எண் 29, T. N. H. B. ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், லஸ் கார்னர், மைலாப்பூர், சென்னை-4. (காமதேனு தியேட்டர் அருகில்) போன்: 498 2663.
- பாண்டிச்சேரி: 13, ரங்கப்பிள்ளை தெரு, பாண்டிச்சேரி-605001 போன்: 221095

FIDELIS -DP FOAM-355

## கமலுக்கு எதிர்ப்பு!



# மௌனம் கலையட்டும்!

**4.7.99** இதழில் வெளியான கமல்ஹாசனின் பேட்டி கண்டேன். சர்ச்சை அவரது பொழுதுபோக்காகிவிட்டது. மருதநாயகம் படத்தைப் பிரச்னைக்குரிய படமாக ஆக்கிவிட்டதைப் போல், ஹே ராம் படத்தையும் பிரச்னைக்குரிய படமாக ஆக்கிவிட்டு, பட்டிமன்றத்திற்கான தலைப்பையும் தந்து விடுகிறார் கமல்ஹாசன்.

மருதநாயகம் துரோகியா? தியாகியா?

காந்தியை 'மகாத்மா' என்று அழைக்கலாமா? கூடாதா?

'என்னால காந்தியை மகாத்மாவா பார்க்க முடியலை' என்று கமல்ஹாசன் தொடர்ந்து கூறிவருவது வேதனைக்குரியதாகும். மகாத்மா என்பதற்கு எந்தெந்த வகைகளிலெல்லாம் காந்தி தகுதியற்றவர் என்று கமல்ஹாசன் விளக்கம் கூறாதது ஏன்?

"காந்தியை மகாத்மாவாப் பார்ப்பதில் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன" என்று கமல்ஹாசன் கூறியிருப்பதன் உள்நோக்கம் யாது? எந்தெந்த வகைகளில் இடைஞ்சல்கள் உள்ளன என்று தெளிவாகக் கூற முடியுமா? கேள்விகளைத் தொடுத்துக் கொண்டே போவது மட்டும் பதில்களாகி விடமுடியாது. தேசப்பிதா மகாத்மா காந்திக்கு இவ்வளவு பெரிய அவமரியாதையா?

மகாத்மா காந்தியை இழிவுபடுத்தியதோடு நின்றுவிடவில்லை; மகாகவி பாரதியாரையும் இழிவுபடுத்தத் தயங்கவில்லை கமல்ஹாசன்!

"நான் பாரதியாரையே வெறும் கவிஞராகத்தான் பார்க்கிறேன். மகாகவியாக்கி விடுவதன் மூலம் இன்னொருவர் நல்ல கவிஞராக வராமல் தடுக்கப்பட்டு விடுகிறார்" என்று கமல்ஹாசன் கூறும் காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

மகாகவி பாரதியாரை விடத் திறமையாளவர் எவராயிருந்தாலும் அவரை 'மகாகவி' என்று அழைக்கத் தடையேதும் இல்லையே! பாரதியாரை விட மிகச் சிறந்த கவிஞர் எவரேனும் அவ்வாறு தடுக்கப்பட்டுள்ளாரா? திறமையாளவர்களைக் காலந்தோறும் உயர்த்தி வருவதுதான் உலக நியதியாக உள்ளது.

தற்போது கமல்ஹாசன் காலத்தில் வாழ்ந்து வரும் புகழ்பெற்ற நடிகரான ரஜினிகாந்தை 'சூப்பர் ஸ்டார்' என்று ரசிகர்கள் போற்றுகின்றனர். அத்தகு உயர்ந்த நன்மதிப்பைப் பெற்ற ரஜினிகாந்தை, "நான் வெறும் ரஜினிகாந்தாகத்தான் பார்க்கிறேன். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தாகப் பார்க்கவில்லை" என்று கமல்ஹாசன் கூறத் தயாரா?


காந்தி எண்ணத்தாலும், சொல்லாலும், தன்னலம் கருதாமல் பொதுநலத்துக்காக, ஓர் உயர்ந்த லட்சியத்திற்காகப் பாடுபட்டார். மக்களோடு மக்களாக வாழ்ந்து காட்டியவர். தேசத்துக்காகத் தன்னுடைய உயிரையும் ஈந்தவர். இதுவே காந்தியின் வாழ்க்கைத் தத்துவமாயிற்று. அந்த வாழ்க்கையே காந்தியை உலகம் போற்றும் மகாத்மா ஆக்கிற்று.

'நான் இப்போது எது சொன்னாலும் இவர் எப்படி இதுபோல சொல்லலாம் என்று பிரச்னை கிளப்ப சில மகராசன்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே என்பதில் மௌனம்தான்' என்று கமல்ஹாசன் கூறுவது கண்டிக்கத்தக்கதாகும்.

கமல்ஹாசன் எது சொன்னாலும் எதிர்ப்பது நோக்கமல்ல. உண்மைக்குப் புறம்பாக யார் சொன்னாலும் எதிர்த்துக் குரல் கொடுப்பது எங்கள் கடமை. உண்மை வரலாறுகளை மறைக்க யாராலும் முடியாது. கமல்ஹாசன் மௌனத்தைக் கலைத்துவிட்டு உண்மையான வரலாற்றை வெளியிட முன்வர வேண்டும்.

— ந. இராசையா

மாவீரன் பூலித்தேவன் வரலாற்று ஆராய்ச்சி மையம், அயன்கொல்லங்கொண்டான்.




# புழுதி துடைத்த பூக்கள்.....

**வி**.வி.ஐ.பி வீட்டுக் கல்யாணம் போல பிரும்மாண்டமான முறையில் அண்ணா அறிவாலய வளாகத்தில் நடைபெற்றது கவிஞர் வைரமுத்துவின் 'பெய்யெனப் பெய்யும் மழை' கவிதை நூல் வெளியீட்டு விழா. தலைமை கலைஞர். (வைரமுத்துவின் இருபத்து ஒன்பதாவது நூல் இது. கலைஞர் வெளியிடும் எட்டாவது நூல்).

- அரங்கிலும், மாடியிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது. புத்தக வெளியீட்டு விழாவுக்கு இவ்வளவு கூட்டமா என்று பிரமிப்பு ஏற்பட்டது.
- மேடையின் பின்னணியில், பெய்யும் மழையில் சந்தோஷமாய் நனையும் சிறுமிகளின் ஓவியம் வெகு அழகு.
- தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட நித்யஸ்ரீயை அழைத்த பொன்மணி வைரமுத்து, பாட்டி பெயர் பட்டம்மாள், பேத்தியோ பாட்டம்மாள் என்ற போது லேசாய் வெட்கப்பட்டார் நித்யஸ்ரீ.
- புத்தகத்திலிருந்து ஐந்து கவிதைகளைத்

---

## ஒரே கேள்வி!



**சமீபத்தில் நீங்கள் என்ன கனவு கண்டீர்கள்?**

காஷ்மீர் அமைதியாக இருப்பது மாதிரி கனவு கண்டேன்.

— சார்லி

**உங்களுக்குப் பிடித்த இசையமைப்பாளர் யார்?**

எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா, ரஹ்மான், தேவா நாலு பேரையுமே பிடிக்கும். ஒவ்வொருத்தர்ட்டயும் ஒரு தனித்தன்மையும், ஒரு தனித்திறமையும் இருக்கு.

— கோவை சரளா



# அழுக்கைத் துடைத்த வெளிச்சங்கள்!

தேர்ந்தெடுத்து, அரங்கில் வாசித்து, அரங்கேற்றினார் கவிஞர். (சிவாஜி போலக் குரலில் ஏற்ற இறக்கங்களுடன் படித்து, கவிதை வரிகளுக்கு உயிரூட்டியதாகக் குறிப்பிட்டார் கலைஞர்).

● ஒரு நாள் பாட்டெழுதப் பொருள் தேடி வைரமுத்து யோசித்த வேளையில், அவர் சட்டை மீது எறும்பு ஒன்று ஊர்ந்து செல்ல, அதை எறும்புக்கும் வலிக்காமல் பிடித்து அகற்றினாராம் பொன்மணி வைரமுத்து! கவிஞருக்கு கவிதைக்கரு கிடைத்து விட்டது. அன்றிரவே மகனுடன் இன்டர்நெட்டினுள் புகுந்து, எறும்பு பற்றி அநேக தகவல்களைச் சேகரித்து, அற்புதமான ஒரு கவிதை எழுதி விட்டாராம். 'எறும்பை எடுத்து விட்டவரே' சொன்ன தகவல் இது.

● வலம்புரி ஜான் பேசும்போது, "கலைஞருக்குத் தேர்தலில் வெற்றி மழை பெய்யப் போவது நிச்சயம்" என்றவர், "நான் இப்படிச் சொல்லுவதற்காக (என் கட்சியில்) என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்" என்றார் நகைச்சுவையாக.

● வலம்புரி ஜான் புகழுக்கும் பாராட்டுக்கும் சொன்ன வித்தியாசம் இது: "புகழ் என்பது கொண்டை ஊசியால் காது குடைவது. பாராட்டு, மயிலிறகால் காதுகுடைவது!" (புல்லரிக்கலை?)

● "பேசத்தெரிந்தவர்களுக்கு எழுத வராது; எழுதத் தெரிந்தவர்களுக்குப் பேச வராது; கலைஞர் இரண்டிலும் வல்லவர்" என்று கூறிய பாலகுமாரன், தனது நீண்ட பேச்சை எழுதி எடுத்து வந்து வாசித்தார். ஏனோ, கூட்டத்தினருக்குக் கேட்கப் பொறுமையில்லை.

● வைரமுத்துவின் கையெழுத்துப் பிரதியை ஏலம்விட, அதை முப்பதாயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுத்தார் கோவை ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் அதிபர் கிருஷ்ணன்! அந்தப் பணம் கார்கில் நிவாரண நிதிக்குத் தரப்பட்டது.

● சொந்தப் பணம், வந்தப்பணம் எல்லாமாய்ச் சேர்த்து, ஒரு லட்சத்து எண்பதாயிரத்துச் சொச்சத்தை விழாவில் முதல்வரிடம் வழங்கினார்கள்.

● கோவையைச் சேர்ந்த ஒரு டஜன் மாணவ மாணவிகள், மாலை நேரங்களில் கோவை வீதிகளில் ஷூ பாலிஷ் போட்டு, நிதி திரட்டியதை நெகிழ்வுடன் 'புழுதி துடைத்த பூக்கள், அழுக்கைத் துடைத்த வெளிச்சங்கள்' என்று குறிப்பிட்டார் பொன்மணி.

● சென்ற வருடம் கவியரசுப் பட்டம் துறந்த வைரமுத்துவுக்கு, விழாவுக்கு மறுநாள் பிறந்தநாள். கலைஞர் அளித்த பிறந்தநாள் பரிசு – கவிப்பேரரசுப் பட்டம்.

● பாலு ஜுவல்லர்ஸ் ஜயப்பன் கோட்டு சூட்டில் சிரித்த முகத்துடன், விழாவில் நடமாடிக் கொண்டிருந்தார்!

தொகுப்பு : **பாரதி**
படம் : **ரவிசங்கரன்**

---

**தேர்தலில் நிற்கச் சொன்னால் நிற்பீர்களா?**

முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் உத்தரவு கொடுத்தால் தேர்தலில் நிற்பேன்.



நம் எல்லோருக்கும் தமிழில் உள்ள பல உள்ளார்ந்த விஷயங்களை சொல்லிக் கொடுத்த தலைவர் அவர். அவர் சொன்னால் நிற்பேன்.

**– குமரிமுத்து**

**ஒரு கிலோ தக்காளி என்ன விலை விற்கிறது தெரியுமா?**

தெரியாது.

**– வெண்ணிற ஆடை மூர்த்தி**



(கேள்விகளும் பதில்களும் தொடர்ந்து ஆங்காங்கே)

தொகுப்பு : **பாலு**
படங்கள் : **எல். மூர்த்தி**



• வாழ்த்துக்கள்!

# 'பாக்'குடன் தூதரக உறவு இனி தேவையா?

● செ. சல்மான் பாரீஸ், பாம்பன்.

***? போரில் வெற்றி பெறுவதற்காகச் சிலர் யாகம் நடத்துகிறார்களே. இது நமது வீரர்களை அவமானப்படுத்துவது போல் இல்லையா?***

! போரின் வெற்றிக்காகவும் போரில் ஈடுபடும் வீரர்கள் நலனுக்காகவும் யாகம் செய்து இறைவனைப் பிரார்த்திப்பது என்பது நமது நாட்டில் இதிகாச காலத்திலிருந்து நடைமுறைப் பழக்கம். இது போர் வீரர்களை எந்த விதத்திலும் அவமதிப்பதாகாது. அவர்களை வாழ்த்துவதாகவே கொள்ள வேண்டும்.

● கே.ஆர். ரவீந்திரன், சென்னை - 1.

***? எந்தக் கொம்பனாலும் தி.மு.கவை அசைக்க முடியாது என ஸ்டாலின் பேசியுள்ளது பற்றி?***

! தன்னம்பிக்கை தேவைதான். அது அகந்தையாகவும் அகந்தையின் விளைவான அலட்சியமாகவும் மாறிவிடக் கூடாது.

● கே. விநாயகமூர்த்தி, சென்னை - 54.

***? பத்திரிகை, வானொலி செய்திகளில் கார்கில் போரில் இந்திய வீரர்கள் மரணமடைந்தால் அதை வீர மரணம் என்றும் பாகிஸ்தான் வீரர்கள் மரணமடைந்தால் 'கொல்லப்பட்டனர்' என்றும் கூறுகிறார்களே. இரு தரப்பிலும் 'வீர மரணம்' என்றல்லவா செய்தி வெளியிட வேண்டும்?***

! அதர்மத்தைச் சார்ந்த ஆக்கிரமிப்பாளர், போரில் சாகத்தான் முடியும்; ஆக்கிரமிப்பை எதிர்ப்பவன் பக்கம் தர்மம் இருப்பதால் அவன் வீர மரணம் அடைகிறான். இந்த அடிப்படை வித்தியாசத்தை நீங்கள் உணர வேண்டாமா, நண்பரே!

● ஆர். பார்த்திபன், அரூர்.

***? தமிழ்நாட்டு அமைச்சர்களில் செயல்பாடு மிக்க சுறுசுறுப்பானவர் யார்?***

! முதலில் இருப்பவர்.

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

***? பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் இந்திய அணி விளையாடக் கூடாது என்று கபில் தேவ் கூறியிருப்பது பற்றி?***



• எச்சரிக்கை தேவை

! சமாதான காலத்திலேயே பாக். அணியுடன் நமது அணி மோதும் போது உணர்ச்சிவசப்படும் ரசிகர்கள் மிகுந்த நாடு இது. எனவே கபில்தேவின் கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவே இருக்கிறது. அசம்பாவிதங்களைத் தவிர்க்க தாற்காலிகமாக இந்த யோசனையைக் கடைப்பிடிக்கலாம். ஆனால் பொதுவாக விளையாட்டில் அரசியலைக் கலப்பது நல்லதல்ல என்பதை ஆட்டக்காரர்கள், ரசிகர்கள் இரு தரப்பினரும் உணர வேண்டும்.

● எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

***? பாகிஸ்தானுடன் தூதரக உறவு இனியும் தேவைதானா?***

! இனிமேல்தான் 'ஜரூராக'த் தேவை. விழுந்த சுருக்கங்களை நேர்ப்படுத்தி, புதிய திசைகளைச் சுட்டிக்காட்டி உறவுப் பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். இரு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்துக்கு இணைந்து பாடுபட்டால் காஷ்மீர் பிரச்னை மறக்கப்பட வழி உண்டு.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

***? சாலை விபத்துகள் காரணமாக ஏற்படும் மரணங்கள் விஷயத்தில் இந்தியா மூன்றா***

# நீங்கள் கேட்டவை — தராசு




• அமைச்சர்களுள்...



• சரி யென்றாலும்....



• இடமில்லை!



• கார்கில் மதிப்பெண்கள்

*வது இடம் வகிப்பது குறித்து?*

! வாகனங்கள் எண்ணிக்கை இங்கு மிகவும் குறைவு என்பதை நோக்க, இது சோகமான உண்மை. இங்கு அடிப்படையான சாலை விதிகள் மதிக்கப்படுவதில்லை. போதிக்கப் படுவதும் இல்லை. ஓட்டுனர்கள் அவ்வப் போது கண் மற்றும் உடல் மருத்துவப் பரி சோதனைகளுக்கு உள்ளாவதில்லை. இதை விடவும் கொடுமை, பலர் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது.

● **கலை அரசு, கோவை - 42.**

*? இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டையை நிறுத்திவிட்டு அமைதியாக வாழும்படி யோசனை கூறும் அமெரிக்கா, சீனா, பிரான்ஸ் போன்ற நாடுகள் பாகிஸ் தானுக்கு ஆயுத சப்ளை செய்வது ஏன்?*

! வியாபாரமும் ஆக வேண்டும்; நல்ல பெயரும் எடுக்க வேண்டும். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை!

● **எஸ்.டி. மலை, கோவை - 9.**

*? பி.ஜே.பி அரசு கார்கில் விஷயத்தில் நேர் மையாகவும் உண்மையாகவும் வெற்றிகரமா கவுமே செயல்பட்டுள்ளதை மறுக்கிறீர்களா?*

! ஆரம்பத்திலேயே ஊடுருவலைக் கண் காணிக்காமல் அசட்டையாக இருந்தது எந்த அளவுக்கு உண்மையோ, அதே அளவுக்குப் பிறகு விழித்துக் கொண்டு சரியாகவும் வெற்றிகரமாகவும் செயல்பட்டது நிஜம்தான்.

● **கே. ராஜேந்திரன் நாயுடு, மருதநாடு அஞ்சல்.**

*? நிம்மதியை நாம் தேட வேண்டுமா? அது தானாக வருமா?*

! எங்கெல்லாமோ தேடுவதை நிறுத்திவிட்டு நமக்குள்ளேயே தேடினால் தானாகக் கிடைக்கும்.

● **கே.வி. சூர்யா, நல்லத்துக்குடி.**

*? 'கார்கில்' விஷயத்தில் இந்தியர்கள் அனைவரும் பிரதமர் வாஜ்பாய் சரியாகத் தான் செயல்படுகிறார் என்று கூறும்போது அரசியல்வாதிகள் மட்டும் குழப்பிக் கொண்டிருக்கிறார்களே?*

! தேர்தல் சமயமல்லவா. எல்லோரும் அதைத் தான் வாக்குகள் பெறப் பயன்படுத்துவார்கள். ஆனால் அட்வான்டேஜ் பி.ஜே.பி என்பதில் சந்தேகம் இல்லை!

● **எஸ். அப்துல் மஜீது, நாவினிப்பட்டி.**

*? இம்முறை ஒரு வோட்டிற்கு ரூபாய் இருநூறு வீதம் அரசியல் கட்சிகள் கொடுக் கும் என்று பரவலாகப் பேசப்படுவது குறித்துத் தராசின் கருத்து?*

! 'இவ்வளவுதானா ஒரு வோட்டுக்கு மதிப்பு' என்று நிராகரித்து முழு மதிப்பைப் பெறக் கூடிய வகையில் வாக்களிக்கலாமே.

● **நாஞ்சில் சு. நாகராஜன், பரமக்குடி.**

*? அ.தி.மு.கவில் லஞ்சத்துக்கு இடமே இல்லை என்று சேடப்பட்டியார் கூறியிருக் கிறாரே?*

! வாங்கி வாங்கி இடம் நிரம்பிவிட்டதாலோ!

● **சாந்தி ஆறுமுகம், திருச்சி - 22** ❑

*? பாரதிய ஜனதாவையும் அதனுடன் கூட் டணி அமைத்துள்ள கட்சிகளையும் 'மத வாதக் கூட்டணி' என்று கூக்குரலிடும் எதிர்க்கட்சிகள் 'முஸ்லிம் லீக்' 'கிறிஸ்துவ ஜனநாயக முன்னணி' போன்றவற்றுடன் தேர்தல் கூட்டணி வைத்துக் கொள்வது சரியா?*

! இத்தகைய முரண்பாடுகள் மதவாத அரசிய லின் தவிர்க்க முடியாத விளைவுகள். அத னால்தான் மதவாதத்தை அரசியலில் அனு மதிக்கவே கூடாது என்பது. மதத்தை அடிப் படையாகக் கொண்ட அமைப்புகள் தேர்த லுக்கு நிற்கக் கூடாது என்று சட்டம் இயற்றி னால் போதும். பூனைக்கு யார் மணி கட்டுவது?

● **பி. நடராஜன், அன்னூர்.**

*? மனிதனால் சாதிக்க முடியாதது எது?*

! மரணத்தை ஜூகிப்பதும் ஒத்திப் போடு வதும்.

---

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
**சாந்தி ஆறுமுகம்**
5/17, வ.உ.சி. நகர், துவாக்குடி மலை (வடக்கு)
திருச்சி – 620 622.

---

வி.ஐ.பியைத் தெரிஞ்சுக்கங்க

**பா**ட்டாளி மக்கள் கட்சி என்றவுடன் நம் ஞாபகத்துக்கு வருபவர் டாக்டர் ராமதாஸ். அதற்கு அடுத்தபடியாக தலித் எழில் மலை. ராமதாஸ், பா.ம.க.வின் நிறுவனர் தானே தவிர தலைவர் அல்ல! அப்படியென்றால் பா.ம.க.வின் தலைவர்?

பா.ம.க.வின் தமிழக சட்டமன்ற உறுப்பினரான கோவிந்தபாடி கந்தசாமி மணிதான் பா.ம.க.வின் தலைவர்!

"டாக்டர் ஐயாதான் இயக்கத்துக்கு உயிர் நாடி. எங்கள் உணர்வுகளுடன் கலந்தவர் அவர். நான் இயக்கத்துக்குத் தலைவராக இருந்தாலும் ஐயாவின் சுண்டுவிரல் அசைப்புக்கு ஏற்றபடிதான் இயக்கம் நடைபோடும்" என்று உணர்ச்சியுடன் குறிப்பிடுகிறார் ஜி.கே. மணி.

காவிரி பெரும் ஆரவாரத்துடன் ஒகேனக்கல்லில் டைவ் அடித்து, மேட்டூரில் வந்து ரிலாக்ஸ்டாக செட்டில் ஆகும் வழியில் சேலம், தர்மபுரி மாவட்டங்களில் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராமங்களும், நிறைய சின்னச் சின்ன டவுன்களும் உள்ளன. கோவிந்தப்பாடி அப்படிப்பட்ட கிராமங்களில் ஒன்று. ஓரளவுக்கு சொல்லிக் கொள்ளும்படி நிலவசதி கொண்டவர் கந்தசாமி. இவருக்கு மூன்று மகன்கள்; இரண்டு மகள்கள். மூத்த மகன்தான் மணி. கொளத்தூரில் உள்ள கிறிஸ்துவ மிஷனரி பள்ளியில் படித்து முடித்துவுடன் ஆசிரியர் பயிற்சிப் படிப்பு.

"ஆசிரியர் பயிற்சி முடித்தவுடன் எதாவது பள்ளியில் வேலைக்குச் சென்றிருக்கலாம்; ஆனால் அப்படிப் போய் முடங்கிவிட எனக்கு இஷ்டமில்லை. குறிப்பாக, எங்கள் பகுதியில் அதிகப் பள்ளிக்கூடங்கள் இல்லாத நிலை. இதன் காரணமாகப் பல வீடுகளில் சிறுவர்களுக்கு ஆர்வம் இருந்தும், தூரத்தில் இருக்கும் பள்ளிகளுக்கு அனுப்ப வசதியில்லை. அந்தச் சமயத்தில்தான் பக்கத்தில் உள்ள சின்னத் தண்டா என்ற கிராமத்துக்குத் திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண மடத்திலிருந்து சுவாமி சித்பவானந்தா அவர்கள் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். சுவாமிஜி வந்த நோக்கம், பின் தங்கிய பகுதியில் பகவான் ராமகிருஷ்ணர் பெயரில் கல்வி நிலையங்களைத் துவங்க முடியுமா என்று பார்ப்பதற்குத்தான்! சுவாமிஜியுடன் இணைந்து நாமே பள்ளியைத் துவங்கினால் என்ன? என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. என் தந்தையும் தன்னால் இயன்ற உதவிகள் செய்வதாகச் சொன்னார். ராமகிருஷ்ணர் குருகுலம் உயர்நிலைப் பள்ளி, சாரதா அனாதை மாணவர் இல்லம், ராமகிருஷ்ணர் குருகுலம் மாணவர் விடுதி ஆகியவை துவக்கப்பட்டன. அடுத்தப் பத்து வருட காலம் என் உழைப்பு முழுவதும் அந்தக் கல்வி நிலையங்களுடனே செலவழிந்தது. நிர்வாகியாக மட்டுமல்லாமல்



ஆசிரியராகவும் பணி புரிந்தேன். திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண மடத்தின் துறவிகளான சித்பவானந்தா, நித்யானந்தா ஆகியோருடன் நல்ல தொடர்பு ஏற்பட்டது. இன்று மனக் கட்டுப்பாடுடன், ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த துறவிகளுடன் உண்டான தொடர்புதான்! நான் கற்றுக் கொண்ட ஒழுக்கமும் பண்பும்தான், டாக்டர் ஐயாவால் அடையாளம் காணப்பட்டு இன்று அரசியலில் உயரக்

# மணியின் பெயரால் மன்றங்கள்!

கைகொடுத்திருக்கின்றன" என்று சொல்கிறார் மணி.

கல்வி நிலையங்களை வெற்றிகரமாக நடத்தி வந்த மணி, மிக விரைவில் அந்த ஏரியாவில் பாப்புலராகி விட்டார். 1986ல் பஞ்சாயத்து தேர்தல் வந்தபோது, மக்கள் ஏகமனதாக அவரைக் கொளத்தூர் பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கு நிற்கச் சொன்னார்கள். சுயேச்சையாகக் களத்தில் இறங்கினார். அட்டகாசமான வெற்றி!

"யூனியன் தலைவராக இருந்தபோது என்னோட முன்னுரிமை, கல்விக்கும் குடி தண்ணீர் வசதிக்கும்தான்! எங்கள் பகுதியில் பார்த்தீர்கள் என்றால் கைக்கெட்டிய தொலைவில் காவிரி போய்க் கொண்டிருக்கும். ஆனால் கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காது. இந்த நிலையை மாற்றுவதற்குப் பாடுபட்டேன்" என்கிறார் மணி.

மணியைத் தங்கள் கட்சிக்குள் வளைத்துப் போட்டால் அந்தப் பகுதியில் கட்சிக்கு செல்வாக்கு கூடும் என்று எல்லா கட்சிகளின் மாவட்டத் தலைவர்களும் முனைந்தனர். ஆனால் மணியைக் கவர்ந்தவர் டாக்டர் ராமதாஸ்.

"வன்னிய மக்களுக்காகப் போராடுபவர் என்ற காரணம் ஒன்று மட்டுமல்ல. அம்பேத்கார், தந்தை பெரியார் ஆகியோர் வலியுறுத்தி வந்த சமூக நீதியை இட ஒதுக்கீட்டால் மட்டுமே பெற்றுத் தர முடியும் என்ற ஒரே லட்சியத்தோடு, உள்ளார்ந்த ஈடுபாட்டோடு உழைப்பவர் ஐயா. எனவே பல கட்சிகளில் இருந்து அழைப்பு வந்தாலும், டாக்டர் ஐயாவுடன் என்னை இணைத்துக் கொண்டேன்" என்கிறார் மணி.

**1991**ல் மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் பா.ம.க. சார்பில் முதன் முதலாகத் தேர்தலில் போட்டியிட்டார். கிட்டத்தட்ட வெற்றி பெறும் சூழ்நிலை. ராஜீவ் காந்தியின் மரணம் காரணமாக வெற்றி கைநழுவிப் போயிற்று. ஆனால் மணி கவலைப்படவில்லை. மாவட்டத்தில் கட்சியைப் பலப்படுத்தினார். கட்சி நடத்திய பல போராட்டங்களில் கலந்து கொண்டார். சேலம், தர்மபுரி சிறைச்சாலைகள் பழக்கப்பட்டுப் போயின.

"மணியின் தன்னலமற்ற பொதுச் சேவையால் கவரப்பட்ட உள்ளூர் இளைஞர்கள், மணியின் பெயரால் மன்றங்கள் கூடத் திறந்து விட்டார்கள்!" என்கிறார்கள் இவரது நண்பர்கள். 1996ல் ஒகேனக்கல்லை உள்ளடக்கிய பென்னாகரம் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார் மணி. கடந்த மூன்று வருட காலத்தில் சாலை வசதி, பேருந்து வசதி என்று பல வசதிகளைச் செய்து கொடுத்து, மக்கள் மனத்தில் இன்னமும் உயர்ந்து நிற்கிறார் மணி.

"என் தொகுதிக்கு வேண்டிய எந்த வசதியென்றாலும் நான் எதிர் அணியில் நின்ற காலத்திலும், செய்து கொடுத்தது தி.மு.க. அரசு. முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் நிறையவே நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்" என்கிறார் மணி.

நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குக் குடிநீர் வசதியைப் பெற்றுத்தர ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் ஜப்பானின் நிதி உதவியுடன் துவங்கியது. ஆனால் பொக்ரானில் அணுகுண்டு வைத்ததால் ஜப்பானிய உதவி நிறுத்தப்பட்டது.

"இது பற்றி சட்டசபையில் நான் பேசினேன். முதல்வர் உலக வங்கி மூலம் நிதியுதவி பெற்று திட்டத்தைத் தொடர்ந்து நடத்தி நிறைவேற்றலாம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.இதுதான் என் இப்போதைய கவலை" என்கிறார்.

— **ஸ்ரீநிவாசன்**

படம் : **சௌந்தர்ராஜன்**

# மீசை புராணம்!

மாடுகளுக்குள் எலெக்ஷன் உண்டா? எம்.எல்.ஏ உண்டா?

உண்டு என்கிறார்கள் தேனி அருகேயுள்ள 'வயல்பட்டி' கிராமத்தினர்!

அதற்காக ஐந்து வருடத்துக்கொருமுறை தலைவர் காளைத்யைத் தேர்ந்தெடுப் பதில்லை; 'தம்பிரான்காளை' (அதான் தலைவர்!)



• அலங்காரமுடன் மாட்டுத் தொழுவ முகப்பு!

இறந்து விட்டால் மட்டும் மறு தேர்தல்!

சமீபத்தில் வயல்பட்டி 'தம்பிரான் காளை' இறந்து விட்டதினால் புதிய தம்பி ரான்காளையைத் தேர்ந்தெடுக்கும் விழா நடந்தது. இதைத் தேர்ந்தெடுக்கும் விதமே மிக வித்தியாசமானது!

மதுரை-தேனி மாவட்டங்களில் உள்ள அறுபதுக்கும் மேற்பட்ட ஊர்களில் உள்ள ஒன்பது 'கம்பளத்தார்கள்' சுமார் ஏழாயிரம் பேர் கூடுவர்.

உருமி மேளம் முழங்க-வெங்கலக் கும் பாவில் வெற்றிலைபாக்கு-எலுமிச்சம் பழத்தை வைத்து, நூற்றுக் கணக்கான மாடுகள் சூழுமியுள்ள தொழுவத்திற்குள் ஐந்து வயதுச் சிறுவனிடம் கொடுத்து அனுப்புவர்.

எந்தக் 'காளை' மாட்டுக்கு அருள்வந்து உடல் புல்லரித்து சிறுவன் வைத்திருக்கும் கும்பாவை முகர்ந்து பார்க்கிறதோ- அந்த மாடுதான் தம்பிரான் காளையாகத் தேர்வு செய்யப்படும்! 'பட்டக்கார' தம்பிரான்காளை தேர்ந்தவுடன் நான்கு நாட்கள் திருவிழா கொண்டாடுவர்!

சமீபத்தில் கோலாகலமாக இங்கே நடந்த விழாவில் முதல் நாள் உருமி மேளத்துடன் காளையை அலங்கரித்து ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

இரண்டாம் நாள் பெண்கள் கொழுக்கட் டைகளைக் கூடைகளில் வைத்து ஊர் வலமாக வந்தனர். மூன்றாம் நாள் தீச் சட்டி எடுத்தல்-பால் குடம் எடுத்தல் போன்றவை நடைபெற்றன. நான்காம் நாள், தொழுவத்தில் மீசை போடாம லிருக்கும் மாடுகளுக்கு மீசை போடப் பட்டன!

மாடுகளுக்கு மீசையா? இதற் கும் ஒரு காரணக் கதை உண்டு!

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வருச நாட்டு மலைப் பகுதியில் நடந்ததாகச் சொல் லப்படுவது இது:

பூசாரி சின்னம நாயக்கர், நேர்த்திக் கடனுக்காக விடப் படும் மாடுகளை மேய்த்து வந்தார்.

கரடி போன்று தலை முடியும் மீசையும் வளர்த்து வந்த சின்னம நாயக்கரை மீசா லவுலு சின்னம நாயக்கர் என்று மக்கள் அழைக்கத் தொடங்கினர்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட மாடுகளில் பால் தரும் பசு மாடுகள் பாதிக்கு மேலிருந்தன. நூற்றுக் கணக்கான லிட்டர் பால், பாறை களிலும்-சுனை நீரிலும் வீணாயின.

இவ்விஷயத்தைக் கேள்விப்பட்ட கண்ட மனூர் ஜமீந்தார், 'அம்மாடுகளை நம் அரண் மனைக்கு ஓட்டி வந்தால்- அதிகமான பால் பெறலாம்; பல வகைகளிலும் பயனுள்ளதாக்க லாம்' என்று எண்ணினார்.

மாடுகளை ஓட்டி வர படையொன்றி னையும் அனுப்பினார். வீரர்கள், மாடுகள் மேயும் தடத்தினைக் கண்டு சென்றனர். ஆனால் மாடுகளைப் பார்க்க முடியவில்லை!

திணறிப் போன படை வீரர்கள் மாடு களைப் பிடிக்க முடியாமல் வெறுமனே அரண்மனைக்குத் திரும்பி வந்து, ஜமீந் தாரிடம் விஷயத்தைச் சொன்னார்கள்.

படை வீரர்கள் சொன்னதை நம்பாமல் தானே படைக்குத் தலைமை தாங்கிச் சென்றார் ஜமீன்.

படை வீரர்கள் சொன்னது சரியாக இருக்கவே- மலைப் பகுதியிலிருந்த ஆதிவாசிகளை அடித்து உதைத்து மிரட்டி விவரத்தைக் கேட்டார்.

அடி, உதைக்குப் பயந்த ஆதிவாசிகள், 'வடக்குப் பக்கம் தடம் விழுந்திருந்தால் மாடுகள் தெற்குப் பக்கம் போயிருக்கும், தெற்குப் பக்கம் தடம் விழுந்திருந்தால் மாடுகள் வடக்குப் பக்கம் போயிருக்கும்' என்ற ரகசியத்தைச் சொல்லி விட்டனர்.

அப்படிச் சென்றும் ஜமீந்தாரால் மாடுகளைப் பிடிக்க முடியவில்லை!

எரிச்சலடைந்த ஜமீன்தாரர், "மாடுகளைப் பிடித்துக் கொடு. இல்லா விட்டால் அரண்மனைக்கு மாடுகளை ஓட்டி வா!" என்று மீசலாவுலு சின்னம நாயக்கரிடம் கட்டளையிட்டார்.

கட்டளைக்குக் கட்டுப்படாத சின்னம நாயக்கர் "உங்களுக்கு தைரியமிருந்தால் மாடுகளைப்(சிக்கினால்) பிடித்துக் கொள்ளுங்கள். நான் பிடித்துத் தரவும் மாட்டேன்; அரண்மனைக்கு ஓட்டி வரவும் மாட்டேன்!" என்று துணிவுடன் கூறினார்.

கோபம் தலைக்கேறிய ஜமீந்தார், "படை வீரர்களே! தீயை மூட்டி இந்தத் திமிர்பிடித்த பேயை அதில் வீசி விடுங்கள்" என்று உத்தரவிட்டார்!

ஜமீன் உத்தரவுப்படி கொழுந்து விட்டெரிந்த தீயிலே மீசலாவுலு சின்னம நாயக்கரைத் தூக்கி எறிந்தனர்.



• 'தம்பிரான்காளை'யுடன் கிராமத்தினர்

**க**ண்ணிமைக்கும் நேரத்தில் எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நடந்தது!

யாருக்கும் கையில் சிக்காதிருந்த அத்திக் கொம்பு புல்லக்காளையும், மயிலைக் காளையும் தீக்குள் பாய்ந்து கொம்புகளால் சின்னம நாயக்கரைத் 'தீ'க்கு வெளியே தூக்கி எறிய, மற்ற காளைகளெல்லாம் படை வீரர்களைக் கொம்பால் குத்தி விரட்டிவிட்டன!

பூசாரி சின்னம நாயக்கர், ஜமீந்தாரை நோக்கி "ஒரு பாவமும் அறியாத என்னைத் தீயிலே போட்டு வாட்டிட்டே! ஆனால் என் உயிர், உன் எல்லையிலே போகாது! என்னை மாதிரி நீயும் யாருக்கும் தெரியாமல் மலைக் காட்டுப் பக்கம் சாவாய்!" என்று சாபமிட்டு விட்டு இரவோடு இரவாகக் 'கொடுவிலார் பட்டி' ஊருக்கும் வயல்பட்டிக்கும் இடையில் உள்ள 'கல்லூத்து' எல்லையைக் கடந்தபின் உயிர் துறந்தார்!

பூசாரியின் சம்பந்தகாரர் வயல்பட்டி சென்னப்ப நாயக்கர் பூசாரிக்கு இறுதிச் சடங்குகள் செய்து அடக்கம் செய்தார்.

மாடுகள் கவனிப்பாரற்று, மேய்க்க ஆளில்லாமல் இருந்ததினால் தானாகவே போடி-கோம்பை-தேவாரம்-கம்பம் போன்ற ஊர்ப் பகுதிகளுக்குச் சென்று விட்டன.

**மூ**ன்றாண்டுகளுக்குப் பின் சின்னம நாயக்கரின் மகள் வழிப் பேரன் சாமிநாயக்கர் தாத்தாவைத் தேடி எழுமலையிலிருந்து வந்தார்.

தாத்தாவையும் மாடுகளையும் பற்றி சென்னப்ப நாயக்கரிடம் கேட்டார்.

நடந்த விவரங்களை விலாவாரியாகச் சென்னப்ப நாயக்கர் சொன்னார்.

"தாத்தா மேய்த்த மாடுகளை நான் ஓட்டிச் சென்று மேய்க்கவேண்டும்"என்றவர், மாடுகள் போன திசையைக் காட்டச் சொன்னார். சென்னப்ப நாயக்கர் காட்டிய திசையை

நோக்கிப் புறப்பட்டார்.

மூன்றாண்டு தேடுதலுக்குப் பிறகு கம்பம்-கம்பராயர் கோவில் தெருவை அடைந்தார்.

பசி மயக்கத்துடன் சென்ற சாமிநாயக்கருக்கு எர்றம நாயக்கர் என்பவர் கேப்பைக் கழியும்-அகத்திக் கீரையையும் உணவாகக் கொடுத்தார்.

அகத்திக் கீரையைச் சாப்பிட்ட சாமி நாயக்கர், கேப்பைக் கழியை உண்டும்-உண்ணாமலும் எழுந்தார்.

"உட்கார்ந்து சாப்பிடுங்க! ஏன் எந்திருச்சிட்டிங்க?" என்று எர்றம நாயக்கர் கேட்டதற்கு,

"எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்."

"என்ன உண்மை?"

"எங்க தாத்தா வளர்த்த மாடுகள் உங்க தொழுவத்திலே இருக்குது இல்லையா?"

"எதைக் கண்டு இப்படிக் கேக்கறீங்க?"


"இந்த அகத்திக் கீரையின் ருசி, எங்க தாத்தா வளர்த்த மாட்டுச் சாணத்தில் விளைந்தது! அதைக் கண்டுதான் நான் கேட்கிறேன்..."

"நீங்க சொல்றபடி உங்க தாத்தா வளர்த்த மாடுகளாயிருந்தா நம்ம குலவழக்கப்படி கம்பளியில் உட்கார்ந்து, புல்லாங்குழல் ஊதி அழையுங்கள். மாடுகள் வந்தால் தாராளமா ஓட்டிப் போங்க! எந்த வித ஆட்சேபணையும் சொல்ல மாட்டேன்" என்று எர்றம நாயக்கரும் உறுதியளித்தார்.

கம்பளி மீது உட்கார்ந்த சாமி நாயக்கர், புல்லாங்குழலை எடுத்தார்.

## ஒரே கேள்வி!

**உங்களுக்குப் பிடித்த பேச்சாளர் யார்?**



**கலைஞர்தான். நான் ஆறாவது, ஏழாவது படிக்கும்போது சைதை தேரடில அவர் பேசுவார். நானும் என் ஃப்ரெண்ட்ஸும் அவர் 7.30 மணிக்குப் பேச வரார்னா, ஆறு மணிக்கே போய் உட்கார்ந்துடுவோம். அப்படி ஒரு ஆர்வம் அவர் பேச்சுல. ஒண்ணுமே தெரியாதவங்களைக் கூட ஈர்க்கற சக்தி அவர் பேச்சுல இருக்கு.**

**— 'தலைவாசல்' விஜய்**

புல்லாங்குழல் ஊதுமுன் தாத்தா சின்னம நாயக்கரை வணங்கிவிட்டு மாடுகளை நோக்கி, "ஆவுலுலண்டா! மீறு மீசலாவுலு பூசாரி சின்னம நாயக்கரு ஹாங்கின ஆவுலகாவுண்டே நீனு ஊத.... புல்லாங்குழ்லு வித்து வினி... மீறு நா றக்கடா... ராவலா... ராவலா... ராவலா..." (மாடுகளா! நீங்க மீசலாவுலு பூசாரி சின்னம நாயக்கர் வளர்த்த மாடுகளாயிருந்தால் நான் வாசிக்கும் புல்லாங்குழல் ஓசை கேட்டு, நீங்கள் என்னருகே வர வேண்டும்) இவ்விதம் தெலுங்கிலே சொல்லிவிட்டு புல்லாங்குழலை ஊதினார்.

குழலோசை கேட்ட எல்லா மாடுகளும் தலையாட்டிக் கொண்டே சாமி நாயக்கர் அருகே வந்தன.

சாமி நாயக்கர் சொன்னது உண்மைதான் என எர்றம நாயக்கர் நம்பினார். எந்தவித ஆட்சேபணையோ மறுப்போ தெரிவிக்காமல் மனமுவந்து மாடுகளை ஓட்டிப் போகுமாறு சொன்னார்!

வயல்பட்டி ஊருக்கு அருகே மாடுகள் வந்தவுடன் கிழக்குப் பக்கம்-கண்டமனூர் ஜமீன் எல்லையில் மாடுகள் காலெடுத்து வைக்க மறுத்தன. அதனால் வயல்பட்டி சென்னப்ப நாயக்கரிடம் மாடுகளை ஒப்படைத்தார். 'தம்பிரான்காளை'யைத் தேர்ந்தெடுத்து தாத்தா பெயரிலே 'மீசலாவுலு பூசாரி சின்னம நாயக்கர் நினைவாக எல்லா மாடுகளுக்கும் மீசைபோட்டு விழா கொண்டாடுங்கள்' என சொல்லிவிட்டு தமது ஊரான எழுமலைக்குச் சென்று விட்டார் சாமிநாயக்கர்!

சென்னப்ப நாயக்கர் வகையறாவான (ஒன்பதாவது தலைமுறை) கே.எஸ். குபேந்திரன் தலைமையில் இவ்வாண்டு 'மீசலாவுலு தம்பிரான்காளை' பட்டயக்காரத் திருவிழா கொண்டாடப்பட்டது.

**ம**ற்றபடி மாட்டுப் பொங்கலன்று தம்பிரான்காளை தலைமையிலான மாடுகளுக்குப் பொங்கல் வைத்து தொழுவத்திலிருந்து விரட்டப்பட்ட பின்புதான் ஊரினர் பொங்கல் வைத்தலும், மாடுகளை விரட்டி விடுதலும் நிகழ்த்துவர்!

சில மாதங்களுக்கு முன்பு தம்பிரான் காளை இறந்ததினால் ஊரில் யாரும் மாட்டுப் பொங்கல் கொண்டாடவில்லை என்றனர் வயல்பட்டிக்காரர்களான தாதி நாயக்கர், குபேந்தி பாண்டியன் ஆகியோர்.

**— கே.ஆர்.என்.**

படங்கள்: **தேனி அருணா**

# பிடிக்காத சினிமாவைப் பார்க்க முடியுமா?

முல்லா நஸ்ருதீன் கதை ஒன்று சொல்லட்டுமா? ஒருநாள் முல்லாவைப் பார்க்க வந்த ஒரு நண்பர், அவர் சோகமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து விட்டு, "ஏன் சோகமாக இருக்கிறாய்?" என்று கேட்டார். "என் மாமா, தன் சொத்து எல்லாவற்றையும், எனக்கு எழுதி வைத்து விட்டு, போன மாதம் இறந்து போனார்! அதை நினைத்தேன். சோகமாகி விட்டேன்'' என்று கண்ணீர் விட ஆரம்பித்தார் முல்லா.

"உன் மாமாவுக்கு எண்பது வயது! இயற்கையான மரணம்தானே! அவரது சொத்து வேறு உனக்கு வந்திருக்கிறது! இனியாவது துக்கத்தை மறந்து சந்தோஷமாக இரு!'' என்று நண்பர் முல்லாவுக்கு ஆறுதல் சொல்ல, முல்லாவோ, ''தன் லட்ச ரூபாய் சொத்துக்களை என் பெயருக்கு எழுதி வைத்து விட்டு என் சித்தப்பா சமீபத்தில் செத்துப் போனார்!'' என்று கண் கலங்க ஆரம்பித்தார்.



"அவரும் எண்பது வயதைக் கடந்தவர். அவர் நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்து விட்டார்! சொத்தை சந்தோஷமாக அனுபவிப்பதை விட்டு சோகப்படுகிறாயே!" என்றார் நண்பர்.

முல்லா, ''என் தாத்தாவும் செத்துப் போய் விட்டார். ரெண்டு லட்சம் எனக்கு வந்தது" என்று சொல்லி அழவே ஆரம்பித்து விட்டார்.

வெறுத்துப் போய் விட்டார் நண்பர். "இவ்வளவு சொத்து வந்தும், இன்னமும் ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? என்று எனக்குப் புரியவேயில்லை!" என்றார்.

முல்லா, "பண வசதி படைத்த என் மாமா, சித்தப்பா, தாத்தா எல்லாருமே செத்துப் போய் விட்டார்கள். இனிமேல், என் பேரில் சொத்து எழுதி வைக்க வசதியான சொந்தக்காரர்கள் யாருமே இல்லையே!" என்று சொல்லிவிட்டு, மறுபடி அழத் தொடங்கினார்.

இந்தக் கதையை ஏன் சொல்லுகிறேன் என்றால், சந்தோஷத்துக்கும், மனத் திருப்திக்கும் நாம் எல்லைக்கோடு போட்டுக் கொள்வதில்லை. இதனால், எல்லைக் கோடு விரிந்து கொண்டே போகிறதே யொழிய, சந்தோஷம் கிடைப்பதில்லை.

பணம் என்பது வாழ்க்கைக்கு மிக அவசியமானது. பணத்தின் மீது ஆசைப்படாதீர்கள் என்று நான் அறிவுரை சொல்ல மாட்டேன். செய்யும் வேலையை, முழு ஈடுபாட்டுடன் சந்தோஷமாகச் செய்யுங்கள். பணம் சம்பாதிக்க ஆசைப் படுங்கள். ஆனால், அந்த ஆசை, பேராசையாக மாறி விடாமல் கவனமாக இருங்கள்.

ஆசை என்கிற பாத்திரத்தில், நாணயங்களைப் போட்டுக் கொண்டே இருங்கள். கொஞ்ச நேரத்திலேயே பாத்திரம் நிரம்பி வழியும். அதுபோலத்தான் மகிழ்ச்சியும். அதே பாத்திரத்தில், பேராசை என்ற ஓட்டை இருந்தால், என்ன ஆகும்? போடுகிற நாணயங்கள் எல்லாம் கீழே போய்க் கொண்டே இருக்குமேயொழிய, பாத்திரம் நிரம்பாது. மகிழ்ச்சி ஏற்படாது.

பணமும், தங்கமும், வைரமும் நிறைய இருந்தால் மட்டும் சந்தோஷம் வந்து விடாது. ஒரு பெரும் பணக்காரன். அவனுக்கு சந்தோஷம் இல்லை. சந்தோஷத்தைத் தேடி, மது, மங்கை, போதைப் பொருட்களை நாடினான். பல ஊர்களுக்கும் போனான். யாரோ துறவறத்தை மேற்கொண்டால் சந்தோஷம் நிச்சயம் என்று கூறியதைக் கேட்டு, அதையும் முயற்சித்துப் பார்த்து விட விரும்பினான்.

தன்னிடமிருந்த பணம், தங்கம், வைரம் எல்லாவற்றையும் ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு, ஒரு சுவாமிஜியிடம் சென்றான். மூட்டையை அவர் காலடியில் சமர்ப்பித்து விட்டு, "இந்த சொத்தெல்லாம் எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டியதெல்லாம் அமைதியும், மன சந்தோஷமும்தான்" என்றான்.

சட்டென்று, எதிரே இருந்த மூட்டையை அப்படியே சுருட்டி எடுத்துக் கொண்ட சுவாமிஜி, வேகமாய் ஓட ஆரம்பித்தார். பணக்காரனுக்கு பெரும் அதிர்ச்சி! சுவாமிஜியைத் துரத்திக் கொண்டு ஓடினான். ஆனால் சுவாமிஜியை அவனால் நெருங்க முடியவில்லை. கடைசியில், செல்வந்தன் களைத்துப் போன சமயம் சுவாமிஜி ஓடுவதை நிறுத்தினார். செல்வந்தனிடமிருந்து எடுத்த மூட்டையை அவனிடமே திருப்பிக் கொடுத்தார். அவனுக்கு சுவாமிஜி மூட்டையை எடுத்துக் கொண்டு ஏன் ஓடினார் என்றும் புரியவில்லை; எதற்காகத் தன்னிடமே திருப்பிக் கொடுத்து விட்டார் என்றும் புரியவில்லை. ஆனால், தன் பணமும், நகைகளும் தன்னிடமே திரும்பி வந்து விட்டதே என்று ஒரே சந்தோஷம்!

அப்போது அந்த சுவாமிஜி, பணக்காரனைப் பார்த்துச் சொன்னார் : "இங்கே வந்தபோது கூட உன்னிடம்தான் இந்தப் பணமும், தங்கமும் இருந்தன. ஆனால் அப்போது உன்னிடம் சந்தோஷம் இல்லை. இப்போதும் அவை உன்னிடம் தான் இருக்கின்றன. ஆனால் உன் மனதில் எவ்வளவு சந்தோஷம் இருக்கிறது? இதிலிருந்து உனக்கு என்ன தெரிகிறது? சந்தோஷம் என்பது நமக்கு வெளியிலே இல்லை. நமக்கு உள்ளே - நம்முடைய மனதில்தான் இருக்கிறது. பணம்தான் சந்தோஷம் என்று சொல்லிவிட முடியாது. மனம்தான் சந்தோஷம்."

'லைஃப்' என்ற பெயரில், நான் ஒர்க்ஷாப்கள் நடத்தி வருகிறேன். அதில் கலந்து கொள்கிறவர்கள், பயிற்சியின் போதோ, அதையடுத்தோ என்னிடம் பேச விரும்புவார்கள். ஒரு தடவை, அப்படி ஒரு நிகழ்ச்சியின் போது ஒரு இளைஞர், "நானும் எனது நண்பர் ஒருவருமாய் கூட்டாக ஒரு பிசினஸ் ஆரம்பித்தோம். சீக்கிரமே பிஸினஸ் பிக்-அப் ஆகி, நல்ல லாபம் கிடைத்தது. நான் அரசு உத்தியோகத்தில் இருந்ததால், கம்பெனியின் செக் புத்தகத்தில் கையெழுத்திடுவது உட்படப் பல முக்கிய உரிமைகளையும் அவரிடம் விட்டிருந்தேன். ஒரு கட்டத்தில், என்னை உதாசீனப்படுத்த ஆரம்பித்தான். தட்டிக் கேட்டபோது, கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினான். என் மனைவியின் நகை நட்டுகளைக் கூட விற்று, முதலீடு திரட்டி நான் ஆரம்பித்த கம்பெனியில் எனக்கே இப்படி ஒரு நிலைமையா என்று துடித்துப் போனேன். அந்த கம்பெனியைத் தலைமுழுகி விட்டு, சொந்தமாக இன்னொரு கம்பெனி ஆரம்பித்தேன். அது இப்போது நல்லபடியாய் நடக்கிறது. ஆனாலும் நண்பன் செய்த துரோகம் நெஞ்சை விட்டு அகல மறுக்கிறது" என்று சொன்னார்.

அவரிடம் நான், அவருக்குத் துளியும் பிடிக்காத, எரிச்சலூட்டும் ஒரு சினிமாவின் வீடியோ கேஸட்டை வாங்கி வந்து, ஒரு ஞாயிற்றுக்கிழமை முழுக்க திரும்பத் திரும்ப போட்டுப் பார்க்கும்படிச் சொன்னேன்.

"ஐயையோ! அது முடியாத காரியம்!" என்றார்.

"நண்பர் செய்த துரோகம் கூட, பிடிக்காத சினிமா போலத்தானே! அதை மட்டும் ஏன் அடிக்கடி மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? மறந்து விடுங்கள்! காயம் தானாகவே மறைந்து விடும். உங்கள் காயத்துக்குக் காரணம் பணம் (நஷ்டம்) இல்லை. மனம்தான்!"

**சுவாமி சுகபோதானந்தா**

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

## மும்பை மசாலா

### 'தில்' இருக்குதா திலீப்புக்கு?

முன்பு 'ஃபயரை' ஆதரித்ததற்காக, திலீப் குமார் வீட்டு வாசலில் 'ஜட்டி மோர்ச்சா' (இங்கே அப்படித்தான் குறிப்பிடுகிறார்கள்) நடத்தினர் சிவசேனைக்காரர்கள். இப்போது ஒரு மாறுதலுக்கு, முழுவதுமாக உடையணிந்து 'அவார்டைத் திருப்பு' மோர்ச்சா நடத்தினார்கள், 'பாரதீய வித்யார்த்தி சேனா' என்ற இளைஞரணித் தொண்டர்கள். "நீ உண்மையான இந்தியனாக இருந்தால், எதிரிகளிடமிருந்து பெற்ற 'நிஷான்-இ-பாகிஸ்தான்' அவார்டைத் திருப்பிக் கொடு" எனக் கூக்குரலிட்டார்கள். அவரோ, 'நான் இங்கிருப்பவர்களைக் கலந்தாலோசித்த பின்தானே பரிசையே பெற்றேன்? திடீரென்று லாகூர் ஒப்பந்தத்தின் மை காயுமுன்னே இப்படிப் பரிசைத் திருப்பச் சொன்னால் எப்படி? கலையிலும் விளையாட்டிலும் அரசியலைப் புகுத்தாதீர்கள்' என்று சொல்லிவிட்டு, கார்கில் நிதிக்கு ஒரு லட்சம் அனுப்பிய கையோடு, தில்லி பறந்து வாஜ்பேயியிடம் பரிசைக் 'கொடுக்கவா? எடுக்கவா?' என்ற கேள்வியை வைத்திருக்கிறார். ஏற்கெனவே கார்கில், தேர்தல் என ஆயிரத்தெட்டு பிரச்னைகளுடன் போராடிக் கொண்டிருக்கும் பிரதமர், 'நீயாயிற்று, உன் பரிசாயிற்று; உன் இஷ்டப்படி செய்' என்று சொல்லிவிட்டார். முடிவில் திலீப் குமார், 'நான் இந்தியன்தான்; முஸ்லீம் என்பதால் அந்நியப்படுத்தாதீர்கள்' எனறு அறிவித்துவிட்டுப் பரிசைத் திருப்ப முடியாது எனக் கூறிவிட்டார். 'மயிலே மயிலே என்றால் இறகு போடாது; போடவைக்கிறோம்' என்கின்றனர் சிவசேனைக்காரர்கள்!

### யோகா யோகம்

புனேவிலுள்ள ஐயங்கார் யோகா இன்ஸ்டிட்யூட்டுக்கு திடீரென்று யோகமடித்தது - முதுகுவலி ட்ரீட்மெண்டுக்காக கிரிக்கெட் ஸ்டார் டெண்டுல்கர் அங்கே சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்தார். ஆனால் இந்த விவிஐபிக்குக் கிடைத்த ஒரே ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட் - அவர் காரை உள்ளே கொண்டு நிறுத்த அனுமதிக்கப்பட்டதுதான்! சென்ற வாரம் வந்திருந்த பிரதமர் வாஜ்பேயிக்கே அளிக்கப்படாத இந்தச் சலுகை இவருக்குக் கிடைத்ததற்குக் காரணம், இவர் வருகை அறிந்து 'கேட்'டிலேயே தவம் கிடந்த நூற்றுக்கணக்கான ரசிகக் கண்மணிகள்தான்.



• "அவார்டைத் திருப்பு!"

# யோகா கிளாசில் சச்சின்!

மற்றபடி வேறெந்த விசேஷ கவனிப்புகளுமில்லை. சாதாரணர்களுடன் சேர்ந்து, சாதாரணனாகப் பயின்று, யோகா கற்றதில், அசாதாரணமான முன்னேற்றமிருக்கிறதாம். மறுபடியும் வருவேன் என்று சொல்லிச் சென்றிருக்கிறாராம். முன்பு இதுபோல சாதாவாக இங்கே வந்து போய்க் கொண்டிருந்த கிரிக்கெட் 'தாதா'க்கள் கபில் தேவும், கிரண் மோரேவும்! ஆனால் சச்சின் என்னவோ புனாவுக்குச் சென்றது சகோதரியைப் பார்க்க. யோகா கற்றது, 'ஃபிட்னஸு'க்காக'. முதுகுக்கொன்றுமில்லை என்கிறாரே?

### காயத்துக்கு மருந்து

அமிதாப்பின் ABCL ஒரு வழியாக 'ஸிக் கம்பெனி' என்று Board of Industrial and Financial Reconstruction' அறிவித்து விட்டது. 60.52 கோடி பெருமானமுள்ள கம்பெனியின் நிகர நஷ்டம் 68.51 கோடிகள்! அறிவிப்பு வந்த சில வினாடிகளிலேயே பச்சன், செமை அடி வாங்கியிருக்கும் தோஞ்சான் கம்பெனியை சீக்கிரமே தூக்கி நிறுத்தி விடலாமென்றிருக்கிறார். தற்சமயம்... கார்கிலில் அடிபட்டிருக்கும் வீரர்களுக்கென்று, நிதி திரட்டிக் கொண்டிருக்கிறார்! 'அடியைப் பிடிடா அமிதாப் பச்சா' என்கிறார்கள்!

### க்விஸ் டைம்

லோக்கல் ஸ்போர்ட்ஸ் க்ளப்பில் நடந்த க்விஸ் காண்டெஸ்டில் கேட்கப்பட்ட கேள்வி இது... கவாஸ்கரின் ஐம்பதாவது பிறந்த நாளை ஒட்டி நடைபெற்றது.

கே. : ப்ரொஃபஷனல் மானேஜ்மெண்ட் க்ரூப், ஒரு ஜயண்ட் ஸைஸ் பாட்டில் ஓபனர் வடிவிலிருந்த க்ரீட்டிங் கார்டைப் பரிசளித்தது எதற்காக?

ப. : ஜஸ்ட் ஹாப்பி பர்த்டே சொல்வதற்காக... அவர் நிறைய ஷாம்பெய்ன் பாட்டில்களைத் திறந்து வெற்றிகளைக் கொண்டாட வேண்டும் என்பதற்காக! இந்த பதில்களெல்லாம் பிசுபிசுக்க, வெற்றி பெற்ற பதில் : அவர்தான் மிகச் சிறந்த 'ஓபனர்' என கௌரவிப்பதற்காக!

— ஜெயஸ்ரீ ராஜ்

## இசை, நடனம், இலக்கியம், நாடகம்
### இணையும் அரிய நிகழ்ச்சி

# காற்றினிலே வரும் கீதம்

அமரர் கல்கியின் கவிதை உள்ளத்தை எடுத்துக் காட்டும் விதமாக அமைக்கப்பட்டுள்ள கலைப் படைப்பு ‘காற்றினிலே வரும் கீதம்’.

பங்கேற்போர் :

அனுராதா கண்ணன், திருப்பூர் கிருஷ்ணன்,
அனுராதா சுரேஷ் கிருஷ்ணமூர்த்தி, பாம்பே ஜெய்ஸ்ரீ, டி.எம். கிருஷ்ணா,
எஸ்.பி. ராம், சங்கீதா சிவகுமார், சஞ்ஜய் சுப்ரமணியன்,
எஸ். சௌமியா, விஜய் சிவா, ஆர்.கே. ஸ்ரீராம்குமார்,
கே.டி. சிவகணேசன், டி. சசிதர், கே. அருண் பிரகாஷ்,
சாய் சங்கர், ஸ்ரீநிவாசன், அனில் குமார்

மற்றும் கலாக்ஷேத்ரா மாணவர்கள்
நடன அமைப்பு : கிருஷ்ணவேணி லக்ஷ்மணன்
தயாரிப்பு உதவி : ஏ. ஜனார்தனன்
எழுதி இயக்கியவர் : கௌரி ராம்நாராயண்


தலைமை :

**லால்குடி ஜெயராமன்**

நாள் : 24.7.99 சனிக்கிழமை
நேரம் : மாலை 6.30 மணி
இடம் : பரத கலாக்ஷேத்ரா அரங்கம், சென்னை - 600 041.

அனைவரும் வருக!  நிகழ்ச்சிக்குப்பின் மாநகரப் பேருந்து வசதி உண்டு.






1999 ஜூலை 25
பிரமாதி ஆடி 9
மலர் : 57
இதழ் : 52

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

## கார்கில் போரும் தேர்தல் பீரங்கிகளும்!

கார்கிலை மீட்டுத் தந்து நாட்டின் இறையாண்மையைக் காத்த நம் ராணுவ வீரர்களுக்கு மனம் நிறை வாழ்த்துக்கள்.

வரவிருக்கும் தேர்தலில் அதிகம் அடிபடப்போகும் வார்த்தை 'கார்கில்' என்பதில் துளியும் சந்தேகமில்லை.

'கார்கில் போரை வெற்றிகரமாக நடத்தி முடித்தோம்' என ஆளுங்கட்சியினரும்,

'கார்கிலில் போர் வரக் காரணமாய் அமைந்தது பி.ஜே.பியின் அலட்சியமே' என்று எதிர்க்கட்சியினரும் கார்கிலைப் பிரசார ஆயுதமாக்கி வோட்டுப் பிடிக்க முயற்சி செய்வார்கள்.

கார்கிலில் இந்திய அரசு எடுத்த நடவடிக்கைக்கு சர்வதேச அளவில் அங்கீகாரம் கிடைத்ததென்பதும் நவாஸ் ஷெரீஃப் ராணுவத்தைப் பின்வாங்கச் செய்ய வேண்டியிருந்தது என்பதும் பி.ஜே.பி. அரசுக்குக் கிடைத்த வெற்றிகள்தான். ஆனால் அவை முழு வெற்றிகள் அல்ல!

பாகிஸ்தான் ராணுவம் பின்வாங்குவதை அறிவித்த கையோடு எல்லைப் பகுதியில் இஸ்லாமிய தீவிரவாதிகள், எல்லைப் பாதுகாப்புப் படையினரைக் கொன்றும் பிணைக்




கைதிகளாகப் பிடித்துச் சென்றும் அட்டூழியம் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் அரசு பின்வாங்குவதாக பகிரங்கமாக அறிவித்தாலும் ஊடுருவியுள்ள தீவிரவாதிகளை வெளியேறுமாறு வெளிப்படையாகக் கேட்டுக் கொண்டாலும் திரை மறைவில் வேறு நாடகங்கள் அரங்கேறும் என்பதும் எல்லைப் பகுதியில் அபாயங்கள் தொடரும் என்பதும் உறுதி.

இதனால்தான் நமது வெளியுறவுத் துறை லாஹூர் பேச்சு வார்த்தைகளை விட்ட இடத்தில் தொடர்வதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளது:

1) பாகிஸ்தான் வெளியேற வேண்டும்;

2) கட்டுப்பாடு கோட்டை பாக் அரசு அங்கீகரித்து ஏற்க வேண்டும்.


3) இந்தோ-பாக் எல்லையில் பாக் தீவிரவாதிகள் நடமாட்டம் அடியோடு இல்லாமல் போக வேண்டும். இவர்களுக்கு இனி பாக் ஆதரவு இல்லை என்று அறிவிக்கப்பட வேண்டும்.

இந்த நிபந்தனைகளை பாகிஸ்தான் ஏற்காத நிலையில் லாஹூர் பேச்சுவார்த்தைகள் தொடரப் போவதில்லை; இந்தோ-பாக் உறவுகள் முன்னேறப் போவதில்லை; எல்லையில் அபாயம் குறையப்போவதில்லை.

இந்த விஷயங்களைத்தான் எதிரணியினர் சரமாரியாக எடுத்துச் சொல்லி பா.ஜ.கவுக்கு எதிராக வோட்டுக் கேட்பார்கள்.

போதாக் குறைக்கு, பா.ஜ.க. ஆட்சியின் கவனக் குறைவினால்தான் பாக் ஊடுருவலே நடைபெற்றது என்பது திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டப்படும்.

ஆட்சியின் ஸ்திரமற்ற தன்மைதான் பாகிஸ்தானுக்கு ஊடுருவும் துணிவைத் தந்தது என்பதை மிகச் சுலபமாக மறைத்து விடுவார்கள்.




எதிர்க்கட்சிகளின் இத்தனை ஸ்கட் தாக்குதல்களுக்கும் பதிலாக பி.ஜே.பியிடம் இருப்பது ஒரே ஒரு ஆயுதம்தான்- 'கார்கில் வெற்றி' என்ற முனை மழுங்கிய ஆயுதம்!

அதனைக் கொண்டு எதிர்க்கட்சியினரின் பாணங்களைத் தடுக்க முயன்றால் விபரீதமே விளையும்.

ஊடுருவல் நடக்க அனுமதிக்காமல் விழிப்புடன் இருந்திருந்தால் வெற்றி என்ற பெயரில் இத்தனை உயிர்களை இழந்திருப்போமா? யுத்தம் என்ற பெயரில் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்குமா? கார்கிலில் காவு கொடுக்கப்பட்ட, மக்கள் பணமும் உயிர்களின் மதிப்பும் கொஞ்ச நஞ்சமல்லவே-அத்தனைக்கும் பி.ஜே.பியின் அலட்சியம்தானே காரணம்! ஆகவே அக்கட்சியை நிராகரித்து எங்களை ஆதரியுங்கள் என்று எதிரணியினர் திருப்பித் தாக்கு வார்கள்.

இத்தகைய தாக்குதல்களுக்கு பி.ஜே.பியிடம் வலுவான பதில்கள் இருக்க வேண்டும். இல்லாது போனால், அக்கட்சியின் தேர்தல் பிரசாரங்கள் எடுபடாமல் போய்விட வாய்ப்பு இருக்கிறது.

கார்கில் வெற்றி, பி.ஜே.பியின் வெற்றி அல்ல; நமது ராணுவத்தின் வெற்றி என்பதே எதிரணியினரின் பிரசாரமாக அமையும். 'ஊடுருவல் நடக்க பி.ஜே.பி. அனுமதித்ததால் அது மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது' என்று கூறப்படும்.

இதற்கெல்லாம் தமது எதிர்ப் பிரசார வியூகத்தை பி.ஜே.பி. மிக மிக கவனமாகத் திட்டமிட்டு அமைத்தாக வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். அதை ஆச்சர்யக்குறியாக மாற்றும் ஆற்றல் பி.ஜே.பிக்கு இருக்கிறதா?

“பாகிஸ்தான் பிரதமர், இப்போதைக்குத் தமது ராணுவத் தலைமையை அடக்கி வைத்து விட்டார். ஆனாலும் இது நீண்ட நாளைக்கு நீடிக்க முடியாது. விரைவிலேயே பாகிஸ்தானின் குடியாட்சி நிலைகுலையும். ராணுவத் தலைமை விரைவிலேயே நவாஸ் ஷெரீஃபைத் தூக்கியெறியும். அப்போது ஏற்படுகிற அபாயகரமான விளைவுகள், இந்தியத் துணைக் கண்டமே கண்டறியாத அளவுக்கு அணு ஆயுத யுத்தத்தில் முடியலாம்!”

–இதுதான், கார்கில் போருக்குப் பிறகு புது தில்லியில் விவாதிக்கப்படும் விஷயமாக இருக்கிறது. காரணம், பாகிஸ்தான் போன்ற மதச்சார்புள்ள நாடுகளில் மூன்று அதிகார மையங்கள் செயல்படுகின்றன. ஒன்று: குடியாட்சி என்கிற சிவில் அரசியல் அமைப்பு. இரண்டாவது: ராணுவத் தலைமை. மூன்றாவது: மதவாத அமைப்புகள். இவைதான் மதச்சார்பு நாடுகளில் உள்ள மூன்று அதிகார மையங்கள்.

பாகிஸ்தானைப் பொறுத்த வரை ராணுவமும் மதவாதிகளும் கைகோத்துக் கொண்டு சிவில் அரசியல் அமைப்பை நிலைகுலையச் செய்வதில் துடிப்பாக இருக்கின்றனர் என்பது உலகறிந்த ரகசியம்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் நவாஸ் ஷெரீஃப் வென்றிருக்கிறார். இது தாற்காலிகமான வெற்றிதான் என்கிற நிலையில் இந்தியா என்ன செய்ய வேண்டும்?

“லாகூர் தீர்மானங்களின் அடிப்படையில், இரு தேசப்பாதுகாப்புக்கும் உத்தரவாதம் என்கிற ஷரத்தின் கீழ் இந்தியா இப்போதே பேச்சுவார்த்தைகளைத் தொடங்கிவிட வேண்டும். 'ரவுடிதேசம்' என்று சர்வதேச சட்டப்படி பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிற வடகொரியாவுடன் பாகிஸ்தான் உறவு வைத்திருக்கிறது. இந்த உறவு, தென்கொரியா, ஜப்பான், அமெரிக்கா போன்ற தேசங்களைக் கவலை கொள்ள வைத்திருக்கிறது. இதை இந்தியா முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!” என்று நமக்களித்த பேட்டியில் சொன்னார் கே. சுப்ரமணியம். இவர் பாதுகாப்புக் கவுன்சில் உறுப்பினரும் தேசிய பாதுகாப்பு கல்வித் துறையின் முன்னாள் உறுப்பினருமாவார்.

“பாகிஸ்தான் என்பது உடைந்து கொண்டிருக்கும் ஒரு தேசம்! இது மட்டுமல்ல, தான்தோன்றித்தனமான ராணுவம் மற்றும் மதவாதிகளின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும் தேசமும் கூட! இதை உணர்ந்து கொண்டதால்தான் அமெரிக்காவும் மற்ற மேல்திசை நாடுகளும் நியாயத்தின் அடிப்படையில் இந்தியச் சார்பு நிலையை எடுத்தன!” என்கிறார் சுப்ரமணியம்.

'மதவாதிகளின் அரசியல் முகம்தான் நவாஸ்ஷெரீஃப்' என்று பேநஸீர் புட்டோ விமர்சிப்பதை சுப்ரமணியமும் ஆமோதிக்கிறார். 'இது உண்மையாக இருப்பதால்தான் இப்படிப்பட்டதொரு பகிரங்கமான 'ராணுவ (தீவிரவாதிகள்)வாபஸ்' நிலையை ஷெரீஃபால் எடுக்க முடிந்திருக்கிறது. இல்லையென்றால் ராணுவத்துக்கெதிரான ஒரு 'வாபஸ்' நிலையை அவரால் எடுத்திருக்க முடியாது!” என்கிறார்.

“நவாஸ் ஷெரீஃபின் வெற்றி என்பது தாற்காலிகமான விஷயம்



• நவாஸ் ஷெரீஃப்

தான் என்பதால், இந்தியா ஷெரீஃபை மட்டுமே நம்பியிருந்து விடக் கூடாது. மீண்டும் தலையெடுக்கப் போகும் ராணுவம் மற்றும் மதவாதத் தலைமைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு நாம் செயல்பட வேண்டும்!'' என்கிறார் டெலிகிராஃப் பத்திரிகையின் வெளியுறவு ஆசிரியர் கே.பி. நாயர்.

நவாஸ் ஷெரீஃப் வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சக வியாபாரிகளுடன் போட்டி போட்டுக் கொண்டு வியாபாரத்தில் முன்னேறும் தமது பரம்பரைத் திறமையையே தமது அரசியலிலும் பயன்படுத்திக் கொண்டிருப்பவர். இன்னும் சொல்லப் போனால் தர்ம, நியாயங்களெல்லாம் தமது வெற்றிக்குப் பயன்

# தோல்வியின் நாயகன்!

படாது என்றால் அவற்றை உடனடியாக உதறியெறியவும் தயங்காத 'வியாபார குணம்' கொண்டவர் ஷெரீஃப்.

நஷ்டமடைந்து கொண்டிருக்கும் ஒரு கம்பெனி, தனது நஷ்டத்தையே லாபமாகக் காட்டி, தனது பங்குகளின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதென்பது இன்றைய வியாபார உலகில் சர்வசாதாரணமாக நடந்து வரும் ஒரு விஷயம். இதைத்தான் நவாஸ் ஷெரீஃபும் செய்து கொண்டிருக்கிறார். திறமையாகவும் செய்து கொண்டிருக்கிறார். ஆனாலும் பாகிஸ்தானின் உண்மை நிலை பிறருக்குத் தெரியாமலில்லை.

அவர்கள் எப்படி ஆயுதம் வாங்குகிறார்கள் என்பதற்கு 'ராணுவ வாபஸ்' பற்றி நவாஸ் ஷெரீஃப் தமது மக்களுக்கு ஆற்றிய உரையே சாட்சி. "நமது குழந்தைகளின் எதிர்காலத்தை விற்று ராணுவத் தளவாடங்களை வாங்குவதா? அணு ஆயுதங்களைத் தயாரிப்பதா? நமது மக்களின் கைகளிலிருக்கும் உணவைப் பறித்துத் துப்பாக்கிகளை வாங்கிக் கொண்டிருப்பது எத்தனை காலத்துக்கு?" என்று உணர்ச்சி பூர்வமாகப் பேசினார்.

இதுதான் பாகிஸ்தானின் இன்றைய பொருளாதார நிலை. சர்வதேச ஸ்தாபனங்களிலிருந்து பெறும் நிதியுதவிகளையெல்லாம் ராணுவத் தளவாடங்களை வாங்குவதற்கும் தீவிரவாதிகளுக்குப் பயிற்சியளித்து, அவர்களை பயங்கரவாதத்துக்குப் பயன்படுத்துவதற்குமே செலவிட்டு வந்திருக்கிறது!

"மனிதவளமேம்பாட்டில் தென்னாசியாவிலேயே மிகவும் பின்தங்கியிருக்கும் நாடு பாகிஸ்தான்தான்!" என்கிறார் பொருளாதார நிபுணர் ஜெயஸ்ரீ ஸென்குப்தா.

மனித வளத்துக்குச் செலவிட வேண்டிய பணமெல்லாம் ஆயுதங்களுக்கே செலவிடப்பட்டதால் வந்த வினை இது. இதை பாகிஸ்தான் மக்களும் உணர்ந்துதான் இருக்கிறார்கள். அவர்கள் விரும்புவது யுத்தத்தையல்ல; தங்களது மேம்பாடான வாழ்க்கையையே. இதைப் பெருமளவு பாக். மக்கள் உணரும்போது ராணுவமும் மதவாதிகளும் மக்கள் எழுச்சியால் சரிந்து போவார்கள்!" என்கிறார்.

நமது பொருளாதார நிபுணர் மட்டுமே இப்படியொரு கருத்தைச் சொல்லவில்லை. பாக். பட்ஜெட்டில் பாதிக்குமேல் வெளிநாட்டுக் கடன்களுக்கும் ராணுவத் தளவாடங்களுக்குமே செலவிடப்படுவது பற்றி அந்த நாட்டிலேயே எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. "ராணுவத்துக்குச் செலவழிக்கப்படும் தண்டத் தொகை வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்குப் போய்ச் சேர வேண்டிய நியாயமான தொகை!" என்கிறார் பாகிஸ்தானின் பொருளாதார நிபுணர் மஹ்பூப்-உல்-ஹக்.

பாகிஸ்தானில் மகளிர் கல்வி என்பது மிகவும் பின்தங்கிய நிலை. பல மாநிலங்களில் நூற்றுக்கு இரண்டு பெண்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். பாகிஸ்தானில் கல்வியறிவு பெற்ற பெண்கள் 24 சதவிகிதத்தினர்தான்! தொழிற்கல்வியும் மிகவும் சரிந்து கொண்டிருக்கிறது. லாகூரிலும் கராச்சியிலும் வெறும் நாநூறு குடும்பங்களே 'பணக்காரர்கள்' என்று சொல்லக் கூடிய அளவில் இருக்கின்றன.

இப்படிப்பட்டதொரு நிலையில்தான் கார்கில் பிரச்னையில் தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதாக நவாஸ் ஷெரீஃப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறார். 'இந்தியப் படைகளைக் கதிகலங்க அடித்ததுடன் காஷ்மீர்ப் பிரச்னையையும் சர்வதேசப்படுத்தி விட்டோம். இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும்!' என்று தமது தோல்வியை வார்த்தை ஜாலங்களின் மூலம் வெற்றி போல் காட்டிக் கொண்டிருக்கிறார்!

— தில்லி வெங்கட்

நவாஸ்(அட்டை)வண்ணப்படம் உதவி: **தினமலர்**

# கொள்ளைபோகும் பூமிதான நிலங்கள்!



• விநோபா நகர்வாசிகள்


**பூ**மிதான இயக்கம் என்பது, நிலமில்லாத ஏழை எளியவர்களுக்கு நிலம் தானம் கொடுக்க வினோபாஜி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட திட்டம். அதன் மூலம் பெறப்பட்ட நிலங்களை ஒருவர் விற்பதோ வாங்குவதோ, அடமானம் வைப்பதோ தவறு என்கிறது பூமிதான வாரியம்.

கோவை கருமத்தம்பட்டி பக்கம் பூமிதான வாரியம் மூலம் நானூற்றி நாற்பத்து மூன்று பேருக்காக தானம் தரப்பட்ட இருபத்தி மூன்று ஏக்கர் நிலம், பல்வேறு குளறுபடிகளுக்கு ஆட்பட்டு, நடராஜன் என்பவரால் அதன் பேரில் வங்கிக் கடன் போடப்பட்டுள்ளதாகவும், வாரிய சட்ட திட்ட வரம்புகளுக்கு மீறி பல பேருடைய நிலங்கள் அவரால் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், விவரம் தெரியாமல் பூதான நிலத்தை வாங்கிக் கொண்டு பலநூறு பேர் சட்ட சிக்கல்களில் அவஸ்தைப்படுவதாகவும் அடுக்கடுக்காய்த் தகவல்கள். விசாரித்தோம்.

**கோ**வை மாவட்டம் அவினாசிக்கு மேற்கே எட்டு கி.மீ. தூரத்தில் வலது புறம் திரும்பினால் ஒரு பர்லாங் தூரக் காட்டுப் பகுதியில் உள்ளது வினோபாபாவே நகர். மொத்தம் சுமார் ஐம்பது, அறுபது குடியிருப்புகள். பல ஏக்கர் பரப்பளவுக்குக் காலி இடம். தவிர அஸ்திவாரத்தோடும், மேற்கூரையில்லாதும், பூச்சு வேலை செய்யப்படாமலும் முப்பது நாற்பது வீடுகள்.

'இது பூமிதான நிலம். ஏழை நெசவாளர்களுக்கென ஒதுக்கப்பட்டது. இங்கே வீட்டு மனைப் பிரிவுகளை வாங்குவதும், விற்பதும் சட்டப்படி குற்றம்' என்கிற பூமி தான இயக்குனரின் எச்சரிக்கைப் பலகை ஒரு புதருக்குள் கிடக்க, எடுத்த எடுப்பில் எதிர்ப்பட்ட ஒரு பெண்ணிடம் விவரம் கேட்டதுதான் தாமதம். பொறிந்து தள்ளி விட்டார்.

"நடராஜன்கிட்ட இடத்துக்கு மட்டும் ஐயாயிரம் ரூபா கொடுத்துட்டுத்தான் வந்தோம். லட்சம் ரூபா போட்டு வீட்டையும் கட்டி விட்டோம். இந்த இடத்து மேல வீடு கட்டினதா காட்டி நடராஜன் பாங்க் லோன் வாங்கியிருக்கிற விஷயம் பின்னாடி தான் தெரிஞ்சது. இடம் இருக்கிறது வேறொருத்தன் பேருல! பேங்க் லோன் (ட்யூ) கட்டச் சொல்லி நோட்டீஸ் வந்ததும்தான் துடிச்சுப் போயிட்டோம்.



• புதரில் கிடக்கும் எச்சரிக்கைப் பலகை

நேரா நடராஜன்கிட்ட சண்டைக்கே போயிட்டோம். 'கவலைப் படாதீங்க. இந்த லோனை சங்கம் கட்டும். உங்களுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. நான் பார்த்துக்கறேன்'னு சமாதானம் சொன்னார். எங்களுக்கு ஒண்ணும் புரியலை. பாங்க்லயிருந்து


தோட்டீஸ் வரும் போதெல்லாம் குழப்ப மாகவும் பயமாகவும் தான் இருக்கு!"


அவர் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே ஏராள தலைகள் கூடிவிட்டன.

"நான் மட்டும் மொத்தம் இருபதாயிரம் கொடுத்திருக்கேன் சார். இந்த வீடும் என்னோடது அல்ல. அதோ 'அந்த பேஸ்' மட்டும்தான் எங்களுக்குக் 'கிரயம்'. அதுல வீடு கட்டித் தர்றேன். அதுவரைக்கும் இதுல இருன்னு நடராஜன் தான் பணத்தை வாங்கிட்டு குடிவச்சார். குடிவச்ச நாலாம் நாளே இந்த வீட்டுக்காரன் எங்கிருந்தோ சண்டைக்கு வந்துட்டான். நானும் அவனும் கை கலக்காத குறை. நடராஜன் வந்து அவனைத் திட்டி, பேசினபடி பணம் கொடுக்கலைன்னு சொல்லி அவன்கிட்ட கிரயப் பத்திரம் வாங்கி, ஏகப்பட்ட கதை சார். இதுல குடிவச்சும் வருஷம் ரெண்டாச்சு. பேஸ் மட்டத்துல வீடு கட்டித் தந்த பாடுமில்லை. காசைத் திருப்பித் தந்த பாடுமில்லை. பாங்க்ட்டூதான் கேட்டுக் கேட்டு ஆள் வருது!"



• நடராஜன்





• அரைகுறையாய் கட்டப்பட்ட கட்டடங்கள்

"நடராஜன் பணம் வாங்கினார்; இடம் தரவில்லை" "நடராஜன் பணம் வாங்கினார்; வீடு கட்டித் தரவில்லை" இப்படித் திரும்பின பக்கமெல்லாம் ஒரே நடராஜன் புராணமே!

யாரிந்த நடராஜன்? விசாரித்தபோது பெரிய புராணமே நீண்டது!

தம் அரசியல் செல்வாக்கைப் பயன் படுத்தி 'கோவை மாவட்ட நெசவாளர் சங்க' உறுப்பினர்கள் 443 பெயரைக் காட்டி, பூமிதான வாரியத்திடமிருந்து 23 ஏக்கர் நிலத்தை தானமாகப் பெற்றாராம் அதன் தலைவர் நடராஜ். இது 1991ல் நடந்தது. சங்கத்தின் பெயரால் அந்த நிலத்தைப் பெற்றவர், தலா மூன்று சென்ட் வீதம் தலைக்கு மூவாயிரம் ரூபாய் வசூல் செய்து இடத்தை பூமிதான வாரியம் இட்டுக் கொடுத்த பெயர் பட்டியல்படி-அந்தப் பட்டியல் ஜெராக்ஸ் பிரதியையே 443 பேருக்கும் பட்டா என விநியோகித் திருக்கிறார்! அப்போதே ஆரம்பித்து விட்டது குளறுபடி. பணம் கொடுக்க வசதியில்லாதவர்கள், பணம் கொடுத்து அந்த இடத்தை வாங்கப் பிரியமில்லாதவர்கள் விலகிப் போக, உடனே வேறு நபர்களைத் தம் சங்கத்தில் உறுப்பினராக்கி பட்டாக்களை (ஜெராக்ஸ் பிரதிகளை) நீட்டியிருக்கிறார். அந்தப் பட்டியலில் அவர்கள் பெயர் இல்லாத பட்சத்தில் பணம் எப்படிக் கொடுப்பார்கள்? எனவே பட்டியலில் இடத்திற்குப் பணம் தராது இடம் பெற்ற நபர்களை அழைத்து எழுதி வாங்கி (தனது நிலத்தைச் சங்கத்திற்கோ- சங்கத் தலைவர் குறிப்பிடும் நபருக்கோ தானம் அளிப்பது போல்) வாங்கும் நபர்களுக்குப் பத்திரப் பதிவும் செய்து கொடுத்திருக்கிறார்.

அத்தோடு விட்டிருந்தால் கூடப் பரவாயில்லை. நிலம் பெற்ற கையோடு, நெசவாளர் சங்கத்தின் பெயரால் அந்த நிலத்தில் வீடுகள் கட்டிக் கொள்ள வங்கிக் கடன் பெற்றிருக்கிறார். (அதுவும் அவரின் அரசியல் சாமர்த்தியம் என்கிறார்கள்.) வீடுகள் கட்டும் பணியில் நடராஜனிடம் சங்கத்தாருக்கு ஏக அதிருப்தி! விதவிதமான புகார்கள் படிக்கிறார்கள்.

"எல்லாப் பணமும் நடராஜன் சுருட்டிக்

கிட்டார் என்றுதான் சொல்லுவோம். இவர் சுத்தமானவராய் இருந்தால் கட்டட காண்ட்ராக்டர் ஏன் கோர்ட்டுக்குப் போக வேண்டும்? நாங்கள் ஏன் இப்படி முச்சந்தியில் நின்று புலம்ப வேண்டும்? இன்னும் இவரை இந்த அரசாங்கம் விட்டு வைத்திருக்கிறதே. அதைச் சொல்ல வேண்டும்.''

''1992-ல் கட்டடம் கட்டிக் கொண்டிருக்கும் போதே கடன் தவணைத் தொகை மாதம் 162 ரூபாய் கட்டச் சொன்னார் நடராஜன். அதையும் கட்டியே வந்தோம். சங்க ரசீதும் போட்டுக் கொடுத்தார். 1994வரை பல பேருடைய பணம் வங்கிக்கே போய்ச் சேரவில்லை. அதனால் நாங்கள் பணம் கட்டவில்லை. அதைக் காரணம் காட்டி வீட்டை விற்று விடுவேன் என அவரே வந்து மிரட்டினார். கூடவே கவுன்சிலர், அரசியல் தலைகளையும் கூட்டி வருகிறார்.''

''இதுவரைக்கும் நாங்க கொடுத்த பணத்தில் ஒரே ஒரு லட்சம் டெபாசிட்டும், வாங்கின கடனுக்கு வட்டி மட்டுமே கட்டி வந்திருக்கிறார். மீதி லட்சக்கணக்கான பணம் எங்கே? ஒண்ணுமே புரியலை. ஆளுங்கட்சி அமைச்சரோட சப்போர்ட் வேற இருக்கறதா கேள்வி. நாங்க யார்கிட்டப் போய் முறையிடுவோம்? பாங்க் லோன் நாங்களே கட்டறோம்னு போனோம். சங்கத் தலைவர் நடராஜன் தான் கட்டணும்னு வங்கியே திருப்பி யனுப்புது.''

திரும்பின பக்கமெல்லாம் குமுறலே பீறிடுகிறது. கலெக்டருக்கும், முதல்வருக்கும் ஏகப்பட்ட பெட்டிஷன் அனுப்பி விட்டனராம் இப்பகுதி மக்கள். எந்த பதிலும் இல்லையாம். ஒருமுறை இப்பகுதிக்கு வந்த சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் லட்சுமணன்(த.மா.கா.) இவர்கள் பிரச்னையைக் கேட்டு ரொம்பவும் குழம்பி, 'இப்படிப்பட்ட பிரச்னையைக் கேட்டதுமில்லை பார்த்ததுமில்லை' என்று சொல்லி விட்டுப் போனாராம்.

நடராஜன் என்னதான் சொல்லுகிறார்? நேரில் சென்று பார்த்தோம். அவரும் எக்கச்சக்கமாய் புள்ளி விவரங்களை நீட்டி நீட்டி நிறைந்த லெட்ஜர்கள், கோர்ட் ஆவணங்கள், வங்கி ரசீதுகளுடனேயே பேசினார்.

''பூமிதான நிலங்கள் விற்கப்பட்டது என்பதை நான் ஏற்றுக் கொள்ளவே மாட்டேன். நிலம் அப்படியேதான் உள்ளது. அதன் மீது கட்டப்பட்ட கட்டடங்களுக்குத்தான் செலவுத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் எந்த இடத்திலும் நான் வன்முறையைக் கையாண்டதில்லை. அரசியல் சக்திகளை வைத்து மிரட்டியதுமில்லை. சங்கம் மூலம் பெறப்பட்ட நிலம், சங்கம் மூலமாகவே பெறப்பட்ட வங்கிக் கடனினால் கட்டப்பட்ட கட்டடம். கடன் கட்ட முடியாதவர்கள், வைத்துப் பராமரிக்க முடியாதவர்களிடமிருந்து வாங்கி வேறொரு சங்க உறுப்பினருக்குக் கைமாற்றித் தானே ஆக வேண்டும்? அதற்கு ஈடான தொகை வசூலித்துத்தானே ஆக வேண்டும்? வங்கிக் கடன் பெற்று அங்கே கட்டடம் கட்டிக் கொள்ள பூமிதான் வாரியத்திடம் (No objection) தடையில்லாச் சான்று வாங்கித்தான் செய்துள்ளோம்.

''கட்டடம் கட்டும்போது மாறி மாறி வந்த எஸ்டிமேட், வரவு செலவுக் கணக்குகள், உறுப்பினர் விவரம் அனைத்துமே ரசீதுபடி சங்க நோட் புக்கில் இருக்கிறது. ஒவ்வொரு செயல்பாட்டுக்கும் தீர்மானங்கள் பை-லாவுல இருக்கு. முறைப்படி பதிவு செய்யப்பட்ட சங்கம். வங்கிக் கடன் கொடுக்க யார் தடை போட முடியும்? எங்க சங்க உறுப்பினர்கள் பணத்தை ஒரு பைசா நான் மிஸ் யூஸ் பண்ணியிருக்கிறதா யாராவது ஒருத்தர் நிரூபிக்கட்டும். நான் யார் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கறேன். இப்பவும் இதற்காக பல லட்சம் ரூபா (16,00,000/-) வங்கிக் கடன் இருக்கு. அதை சங்கமே வசூலித்துக் கட்டறதாத்தான் அக்ரிமெண்ட். இவங்களோட பொறுப்பற்ற தன்மையினால் எங்களால் நிர்வாகம் செய்ய முடியல. அதனால் நேரிடையாக சங்க உறுப்பினர்களே தவணைத் தொகை கட்ட வந்தா ஏற்றுக் கொள்ளச் சொல்லி வங்கி அதிகாரிக்குக் கடிதம் அனுப்பி விட்டோம்.''

– இப்படி உணர்ச்சி பொங்க பேசிக் கொண்டே போனார் நடராஜன். இவர்களது பிரச்னை இப்போதைக்குத் தீர்வதாக இல்லை.

வினோபா நிலம் விற்பனைக்கு வருமானால் யாரும் வாங்கிடாதிருப்பது நலம்!

— கட்டுரை, படங்கள்: **கேயெஸ்வி**

# திருமணம்



"ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகையின் சென்னை கிளையில் பணியாற்றி ஓய்வு பெற்ற **திரு எம்.எஸ். வெங்கட்ராமன், திருமதி கற்பகம் வெங்கட்ராமன்** தம்பதியரின் குமாரன் சிரஞ்சீவி **வி. சங்கருக்கும்,** ஓய்வு பெற்ற வணிக வரித்துறை உதவி கமிஷனர் சேலம் **திரு எஸ். ராஜகோபாலன், திருமதி நாகலெக்ஷ்மி தம்பதியரின்** குமாரி சௌபாக்கியவதி **ஸ்வர்ணலதாவிற்கும்** சென்னை காஞ்சி ஹோட்டலில் 24.6.99 அன்று **திருமணம்** சிறப்பாக நடந்தது. **தமிழக முதல்வர், சென்னை .மாநகர மேயர்** உட்பட பலர் வாழ்த்து செய்திகள் அனுப்பி இருந்தனர். பல பிரமுகர்கள் மணமக்களை நேரில் வாழ்த்தினர்.

**வாழ்க மணமக்கள்!**



• மூப்பனார் பேசுகிறார்

தமிழக அரசியல் களத்தில் முன்னரே முடிவாகத் தெரிந்து போயிற்று. இரண்டு வெவ்வேறு அணிகள். அந்த இரண்டு வேங்கைக் கூட்டணிகளுக்கிடையே த.மா.கா. ஒரு புள்ளிமானா அல்லது இதுவும் ஒரு வேங்கையா என நாடிபிடித்துப் பார்த்து அறிந்து கொள்ள மதுரை மாநாட்டுக்கு வந்திருந்த தொண்டர்களை அணுகினோம்.

சென்னையிலிருந்து வந்திருக்கும் ஆறுமுகம் ஆணியடித்தாற்போலச் சொல்கிறார் :

"அபார வெற்றி, அபார தோல்வி இதெல்லாம் அரசியல்ல சகஜம்ங்க. தேர்தல்ல ஜெயிச்சாலும் தோத்தாலும் எங்க தலைவர் எடுத்த முடிவுதாங்க சரி. இப்ப எங்களோட 'தனித்தன்மை' என்னன்னு தெரிஞ்சிடும் இல்லீங்களா?"

கோவை மாவட்ட த.மா.கா. சிறுபான்மைப் பிரிவுத் தலைவர் நசிர் உசேன் கருத்து வேறுவிதம்.

"மதவாத பி.ஜே.பிக்கு இருக்க இடம் பிடித்துக் கொடுத்தது அ.தி.மு.க. இப்பொழுது பி.ஜே.பிக்குப் படுக்கப் பாய் விரித்துள்ளது தி.மு.க. தமிழ்நாட்டில் மதவாதத்தை எப்பொழுதும் எதிர்த்து நிற்கும் ஒரே கட்சி த.மா.கா. இந்தத் தடவை முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிக அளவில் முஸ்லீம்களின் வாக்குகள் எங்கள் கட்சிக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் வளமாக இருக்கின்றது!"

கோவை இரா. அன்புமுத்து த.மா.கா. தலைமை நிலைய மாநிலப் பேச்சாளர். அவர் கூறுகிறார் : "இன்றைக்கு அரசியலில் நேர்மையான – நாணயமான தலைவர் மூப்பனார் ஒருவர்தான் சார். உள்ளாட்சி அமைப்புகள்ல நாங்க சிறப்பா பணி செஞ்சிருக்கோம். எங்களோட சாதனை, அரசியல் நேர்மை – மதவாத எதிர்ப்பு – ஊழல் ஒழிப்பு. இதுதான் சார் எங்களோட வலுவான பிரசார ஆயுதம்."

மதுரை கிழக்கு வட்டார த.மா.கா. தலைவர் ஒத்தக்கடை கே. ஜெயப்பிரகாஷ், "லட்சியம்தான் எங்களுக்கு முக்கியம். தமிழகத்தில் திராவிடக் கட்சிகளைத் தவிர்த்து விட்டு த.மா.கா. தனித்து நின்றால்தான் காமராஜர் ஆட்சியைக் கொண்டு வர முடியும். தேர்தலில் வெற்றி – தோல்வி என்பது வேறு விஷயம்."

தமிழ்நாடு ஹோட்டலுக்குச் சென்றோம்: அங்கே வரவேற்பு அறையில் திராவிட தெலுகர் முன்னேற்றக் கழகம் (இப்பொழுது புதிதாய் உதயமானது!) கட்சியில் நிறுவனத் தலைவர் ஜி. காமாட்சி தம் கட்சியின் பொறுப்பாளர்களுடன் அமர்ந்திருந்தார். த.மா.கா. தலைமையேற்கும் அணிக்குத் தமது கட்சியின் ஆதரவை வெளிப்படுத்தவே இங்கு வந்துள்ளதாக அவர் நம்மிடம் தெரிவித்தார்!

## மூப்பனார்

செயற்குழுக் கூட்டம் முடிந்து வெளிவரும்போது மூப்பனார், "செயற்குழு முடிவுகளைப் பொதுக் கூட்டத்துல சொல்றேன். அங்க வந்துடுங்க" என்று பத்திரிகையாளர்களைப் பார்த்துச் சொன்னார், மிகுந்த நெரிசலுக்கு இடையே.

தமுக்கம் மைதானம் ததும்பி வழிந்தது. சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் தலைமை.

'அது என்ன காமராஜர் ஆட்சி?'

# வைத்த முற்றுப்புள்ளி!

என்பதற்கு விளக்கம் தந்தார் என்.எஸ்.வி. சித்தன். 'புதிய கம்பெனிகள், தொழிற்சாலைகள் அனுமதி வேண்டி கால்கடுக்க நிற்க வேண்டியதில்லை. அனுமதி கேட்டு காலையில் கடிதம். மாலையில் அனுமதி உத்தரவு. காமராஜர் காலத்தில் கரும்பாலைகளும், சிமின்ட்டாலைகளும் - அவ்வளவு ஏன் திருச்சி பாய்லர் ஆலை கூட அந்த வகையில் தமிழகத்துக்காகப் பெறப்பட்டதுதான்."

தம் உரையில், "ஒண்ணுமே புரியலை உலகத்துலே... என்னமோ நடக்குது... மர்மமா இருக்குது..." எனும் திரைப்பாடலை இன்றைய அரசியலுக்குக் கோடிட்டுக் காட்டிய ஜெயந்தி நடராஜன், "அந்த மர்மத்திலும் மதவாத - ஊழல் எதிர்ப்புச் சக்தியாக த.மா.கா. தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்கிறது'' என்றார்.

ஆளுயர ரோஜாப்பூ மாலையைத் தொண்டர்கள் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு மேடைக்கு வந்தனர். ''அதான் மாலையெல்லாம் எனக்கு வேணாம்னு முந்தியே சொன்னேன்ல" என்று செல்லமாகக் கடிந்து கொண்டார் மூப்பனார். அந்த மாலையை கார்கில் மலைப் பகுதியில் வீர மரணமடைந்த நமது ராணுவ வீரர்களுக்கு மானசீகமாக மேடையில் வைத்து ஒரு நிமிட அஞ்சலி செலுத்தினார்.

பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மேடையேறி வந்தவர் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் (அப்துல்சமது பிரிவு) தலைவர் கமாலுதீன். மூப்பனாருக்குப் பொன்னாடை அளித்துத் தமது கட்சி ஆதரவைத் தெரிவித்தார்.

மிகவும் ஆர்வமாய்த் தொண்டர்கள் உற்சாகத்துடன் கேட்டது முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்தின் பேச்சைத்தான்.

"மத்திய அரசின் கவனக்குறைவால் ஏற்பட்டதே இந்த கார்கில் யுத்தம். நமது கார்கில் யுத்த வீரர்களைப் போல த.மா.கா. தொண்டர்கள் கடுமையாய் உழைத்து அரும்பாடுபட்டு இந்தத் தேர்தலில் நமது வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்ய வேண்டும். பெருமளவில் கூடியிருக்கும் இந்த இளைஞர் பட்டாளம் காமராஜரின் நூற்றாண்டு விழாவின் போது தமிழகத்தில் காமராஜர் ஆட்சி அமையக் காரணமாய் இருக்கும் என நம்புகிறேன்" என்றார் ப. சிதம்பரம்.

காங்கிரஸ் கூட்டம் என்றால் ஐம்பது வயதுக்கு மேல் கதர்ச்சட்டை கதர் வேட்டிகளையே கண்டிருந்த கண்களுக்கு ஒரு மாற்றம். பெருமளவில் கூட்டத்தில் இளைஞர் படை... (ரஜினி உபயம்!)




• கூடிய கூட்டம்

அதனையும் தம் உரையில் நன்றியுடன் சுட்டிக் காட்டினார் மூப்பனார்.

"தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் அந்த இரண்டு கூட்டணிகளும் நமக்கு ஏற்புடையவை அல்ல. ஒன்று மதவாதம். இன்னொன்று ஊழல்மயம். நம்முடையது மூன்றாவது அணி என்று சொல்கிறார்கள். நம்முடையது மூன்றாவது அணி அல்ல. அந்த இரண்டிற்கும் இது மாற்று அணி! 1996ல் அருமை நண்பர் ரஜினி அவர்கள் நமக்குத் துணை நின்றார். அதை நாம் இன்னமும் மறக்கவில்லை. 2001-ல் தமிழகத்தில் எளிமையான - நேர்மையான - திறமைமிகுந்த மற்றும் தொலைநோக்குடைய காமராஜர் ஆட்சி அமைய இப்பொழுதிருந்தே தொண்டர்கள் செயல்பட வேண்டும்!" என்று மிகப் பெரிய மௌனத்தைக் கலைத்து முற்றுப் புள்ளி வைத்தார்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

படங்கள் : சௌந்தர்ராஜன்



# தூரிகையும் துயர் துடைக்கிறது

**'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே**
**பாரத நாடு பழம் பெரும் நாடு நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்'**

இன்று வந்ததொரு சோதனை. தேசபக்தியைப் போற்றிட, வீரர்களின் உயிர்காத்திட அணிதிரண்டு வாருங்கள். ஓவியர் **பத்மவாசனின்** சீரிய முயற்சிக்கு உயர்வளியுங்கள்.

கார்கில் மலையுச்சியில், கடும்பனி மூட்டத்தில், கரடு முரடான பாதைகளில் தங்கள் உயிரையே துச்சமென மதித்துப் போராடி எதிரிகளைப் புறமுதுகிட்டோடச் செய்து, நம் தாய் நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்யும் வீரர்களின் குடும்ப நல நிதிக்காக –

கல்கியின் **பொன்னியின் செல்வன்** தொடர் புகழ் **பத்மவாசன்** நடத்தும் **ஓவியக் கண்காட்சி** திருமயிலை, ரங்கா வீதியில் அமைந்துள்ள நந்தலாலா கலாசார மையத்தில் 22.7.1999 துவங்கி, 23, 24, 25, 26.7.1999 முடிய ஐந்து தினங்கள் நடைபெற உள்ளது. ஓவியங்களைக் கண்குளிரப் பார்ப்பதுடன் விலைக்கும் பெற்று – வீரர்களின் நல நிதிக்கு உதவ விரைந்து வாருங்கள். தூரிகையும் துயர் துடைக்க நினைக்கிறது. தோள் கொடுக்க வாருங்கள்.

கல்கி இதழில் வரும் பொன்னியின் செல்வன் ஓவியங்களைப் பார்த்து, ரசித்துப் பத்மவாசனின் ரசிகர்களாகப் பல்கிப் பெருகியுள்ள ரசிகப் பெருமக்களே – நீங்கள் இந்தக் கண்காட்சியில் கலந்து, ஓவியங்களை ரசிப்பதுடன் விலை கொடுத்தும் வாங்கி பொன்னாகப் பொருளாக, பணமாக ஈந்து கார்கில் நிதிக்கு உங்களால் ஆன ஆதரவைத் தாருங்கள்.

நேரில் வரமுடியாத ரசிகர்களுக்கு பத்மவாசனின் வெங்கடாசலபதி, பத்மாவதி தாயார், அறுபடைவீடு, (தனித் தனிப் படங்கள்) பிள்ளையார்பட்டி விநாயகர், வரலக்ஷ்மி இவற்றுள் ஏதாவது ஒன்றின் வண்ண ஓவியப் பிரதி அஞ்சலில் அடையாள விலையாக ரூபாய் 100/- கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். என்ன படம் என்பதைக் குறிப்பிட்டு அனுப்பவும். படம் வீடு வந்து சேரும். (அடையாள விலைக்கு மேலாக உங்கள் எண்ணம் போல் அனுப்பலாம்).

பக்தியில் உயர் பக்தியான தேசபக்தி பற்றி தினமும் மாலை 7 மணியளவில் சிறப்புரையாளர்கள் நம்மையெல்லாம் ஒருநிலைப் படுத்துவார்கள். வெற்றி பாரத நாட்டுக்கே!

**நுழைவுக் கட்டணம் ரூபாய் 10/-**

**நந்தலாலா சேவா சமிதி டிரஸ்ட்**
**117, Dr. ரங்கா தெரு,**
**மைலாப்பூர், சென்னை - 600 004.**

**நந்தலாலா சேவா சமிதி**
**பத்மவாசன்**

**நேரம் : காலை 8.30 முதல் 1.00 வரை; மாலை 3.00 முதல் 9.00 வரை**



# கணிதமேதை விவசாயி!

பள்ளியில் படித்தது எட்டாம் வகுப்பு. கையில் பிடித்தது ஏர்க்கலப்பை. எனினும் கணிதமேதை ராமானுஜம் விட்டுப் போன கணக்கு வால்யூம்களை அக்கு வேறு, ஆணி வேறாய் அலசி, கால்குலேட்டருக்குள் அடங்காத கம்ப்யூட்டர் கணக்குகளையெல்லாம் தம் மனக் கணக்காகவே சொல்லி விடுகிறார் இந்த எழுபத்தி எட்டு வயது மனிதர். கோவை தொண்டாமுத்தூர் சென்று 'கணிதமேதை ரங்கசாமி வீடு எங்கேயுள்ளது' என யாரிடம் கேட்டாலும் வழி சொல்லி விடுகின்றனர்.

"ராமானுஜர் கண்டுபிடித்தது மொத்தம் பத்தாயிரத்து எண்பது காரணிகள். நான் மூனு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து ஐநூற்றி அறுபது காரணிகள் கண்டுபிடித்திருக்கிறேன். $A^1+B^2+C^3 = 1$ என்பது ராமானுஜர் கணக்கு. நான் கண்டுபிடித்தது $A^1+B^2+C^3+D^4 \ldots J^{10} = 1$ என்பது. இது போன்று இருபதுக்கும் குறையாத கடினக் கணக்குகளை கலபமாக்கும் நிறைய ஃபார்முலாக்களைக் கையில் வைத்துள்ளேன். அது பற்றி தமிழ்நாட்டில் அனைத்துப் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளிலும் விரிவுரை ஆற்றி உள்ளேன். பெரிய அதிகாரிகளும் கணித இயல் நிபுணர்களும் என் கணக்குகளைக் கேட்டுப் பிரமித்தும் போயிருக்கின்றனர்."

"சாதாரண விவசாயி. படிப்பும் குறைச்சல். உங்களுக்கு எப்படி வந்தது கணக்கில் ஆர்வம்?"

"படிக்கும்போது என் ஆசிரியர் ராமசாமி ஐயர் நான் போடும் மனக்கணக்குகளைப் பார்த்து பிரமித்து, ராமானுஜர் கணக்குகளை அறிமுகப்படுத்தி வைத்தார். அதையே பிடித்துக்கொண்டு வளர்ந்த என்னை, அதே ஆசிரியர் பாராட்டி, 'நீ ராமானுஜர் கணக்கையும் போடுவாய். இன்னும் அவர் விட்டதையும் போடுவாய்' என்றார். அதிலிருந்து படிப்பை விட்டுவிட்டு விவசாயத்தைக் கவனித்தபோதுகூட, எனக்குள் ஓடியது கணக்குகள்தான். எனக்கிருந்த ஒரே ஒரு மகன் இறந்ததுல ரொம்ப அதிர்ச்சியாயிட்டேன். அதை மறக்க தினமும் உட்கார்ந்து பேப்பர் - பென்சிலை வைத்து நிறைய கணக்குகள் போட ஆரம்பித்தேன். துக்கம் கொஞ்சம் குறைய, இதையே பிடித்துக் கொண்டேன். இப்படியே வளர்ந்த ஆர்வம், 1989-ல் விஜயவாடாவில் - அகில இந்திய கணிதவியலார் மாநாட்டில் கொண்டு போய்



''எங்க மானேஜர் ரொம்பவும் ஈகோ பேர்வழி!''

''என்ன பண்றார்?''

''லிப்ட்ல போறப்ப கூட யாருக்கும் லிப்ட் தர மாட்டேங்கறார்!''



''ஏன்யா, ஏட்டு! ரவுடி சுபாலி இதுக்கு முந்தி கடை எதுவும் வச்சிருந்தானா?''

''எதுக்காகக் கேட்கறீங்க இன்ஸ்பெக்டர் ஐயா?''

''வீட்டு வாசல்ல 'இன்று திருட்டு நாளை மாமூல்'னு போர்டு வச்சிருக்கான்யா?''

– அம்பை தேவா



''ஓட்டல் முதலாளியைப் பார்த்து அந்த போலீஸ்காரர் முட்டிக்கு முட்டி தட்டி உள்ள தள்ளிடுவேன்னு மிரட்டிகிட்டிருக்காரே. அப்படி என்ன தப்பு பண்ணினாரு அவரு...?''

''சாப்பிட்டதுக்குப் பணம் கேட்டாராம்!''

– ஸ்ரீதர்

நிறுத்தியது. அங்கே போய், துணிச்சலாக 'நீங்கள் போடாத கணக்கைப் போடுவேன்' எனத் தெரிவித்தேன். அவர்களும் சந்தேகத்துடன்தான் என்னைப் பார்த்தனர். கிராமத்தான் தோற்றம். வெகுளித்தனமான பேச்சு எல்லாம் கண்டு ஏளனமாய் நினைத்தவர்கள், நான் கணக்குகளைப் போட்டுக் காட்ட ஆரம்பித்ததும் அரண்டு போய், பெரிய பெரிய கணிதவியலாளர்களே அங்கத்தினராய் உள்ள அச்சங்கத்தில் என்னை உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டனர். அதோடு, ஒருவருக்குப் பத்து நிமிஷமே அனுமதி உள்ள அந்த அரங்கில் எனக்கு மட்டும் ஒரு மணி நேரம் கணக்குப் போட அனுமதி கொடுத்தார்கள். புதுசு புதுசாய்க் கணக்குகள் போட, அவர்களுக்கே ஆச்சர்யம்."

அப்போது துவங்கி இப்போது வரை ஏராளமான கணிதவியலார் மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளார், மனிதர். பல்வேறு பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் விரிவுரையாற்றும்போது மாணவர்கள் இவர் சொல்லும் விடைகளைச் சரி பார்க்க கம்ப்யூட்டரையே கொண்டு வந்து வைத்துக் கொள்கின்றனராம். இவரிடம் ஒரு சில கேள்விகள் கேட்டு விடையைக் கம்ப்யூட்டரில் கொண்டு வருவதற்குள் பதில் சொல்லி விடுவதாகக் கூறுகிறார். அப்படி உள்ளூர வைத்துள்ள அந்த ஃபார்முலாதான் என்ன? என்று கேட்டாலோ சொல்ல மறுத்து அதற்குக் காரணமும் கூறுகிறார்.

"இப்படித்தான் நேஷனல் இன்ஜினியரிங் கல்லூரி கணிதவியல் நிபுணர் ஒருவர் என்னிடம் நைஸாகப் பேசி நாலஞ்சு கணக்குகளை வாங்கி அதன்மூலமா உலகக் கணிதவியலார் மாநாட்டுக்குப் போயிட்டார். அங்கே கொண்டு போய் அதை முன் வைக்க, வந்தவர்கள் ஃபார்முலா கேட்டதும் திணறிப் போய் ஓடி வந்துட்டார்! அதன் பிறகு அவர் வந்து ஃபார்முலா கேட்கவும் தான் விஷயம் தெரிஞ்சு உஷாராயிட்டேன். யார்கிட்டவும் எந்த ஃபார்முலாவும் கொடுக்கறதாயில்லை. என்ன ஆனாலும் சாகறதுக்குள்ளே இது மக்களுக்குப் போகிற மாதிரி புத்தகங்கள் போட்டுடணும்னு வைராக்கியம் வச்சிருக்கேன்" என்கிறார். ●

சந்திப்பு, படம்: **ரோகிணி**

# கண்களின் காதலர்!



• சிவராம்ஜி

**க**ண்தானத்தில், அவருக்கு மிகுந்த ஈடுபாடு. ஆயிரக் கணக்கானவர்களுக்குக் கண்தானம் பற்றி எடுத்துச் சொல்லி, அதற்கான விண்ணப் பத்தில் கையெழுத்து வாங்கிக் கொடுப்பது வழக்கம். "ஆனால், இதனால் பெரிய பய னொன்றுமில்லை! கண்தானம் செய்ய விரும்பியவரின் விருப்பத்தைப் பெரும்பாலான குடும் பத்தினர் நிறைவேற்றுவதில்லையே!" என்று கண் மருத் துவர் பத்ரிநாத் அவரிடம் வருத்தப்பட்டார்.

அது முதல் ஒரு புதிய அணுகுமுறையை மேற் கொண்டார் அவர். ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண் டால், குழந்தைகள் உட்பட அனைவரையும் கண் தானம் செய்ய ஒப்புதல் வாங்க ஆரம்பித்தார். பல்லா யிரம் குடும்பங்களை இப்படி ஒப்புக் கொள்ள வைத் திருக்கிறார். அந்த வீடுகளில், 'நாங்கள் அனைவரும் கண் தானம் செய்ய முன் வந்திருக்கிறோம்' என்ற வாசகம் பிரேம் போட்டு, மாட்டப்பட்டிருக்கும்.

இந்தப் புதிய ஏற்பாட்டினால், கண் தானம் செய்ய விரும்பியவர் மரணமடைந்தவுடன், கண் வங்கிக்கு உடனடியாக தகவல் வர, அந்தக் கண்களால், பலர் கண்ணொளி பெற்றனர்.

கண் தானம் பற்றிய ஒவ்வொரு மீட்டிங்கிலும் 'அவரது' சேவை யைப் பெருமையுடன் குறிப்பிடுவார் டாக்டர் பத்ரிநாத்.

அவர் பெயர் சிவராம்ஜி. முழுப் பெயர் சிவராம் ஜுகலேகர். மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர். எம்.எஸ்ஸி (பிஸிக்ஸ்)யில் பல்கலைக் கழகத்தில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் பெற்றவர்.

ஏராளமானவர்களுக்குக் கண்ணொளி பெறக் காரணமாயிருந்த சிவராம்ஜி (வயது 82) ஆர்.எஸ்.எஸ். பிரசாரகராக ஐம்பது ஆண்டுக்கு முன் சென்னை வந்து செட்டில் ஆனவர். அண்மையில் காலமான இவரது கண்கள் மட்டுமில்லை, உடலே ராமச்சந்திரா மருத்துவ மனைக்கு தானமாகக் கொடுக்கப் பட்டது!


— சி. எம்.

## ஒரே கேள்வி!

**உங்களுக்குப் பிடிக்காத விஷயம் எது?**

திரமையானவர்கள் திறமை யானவர்களை சப்போர்ட் பண்ணு வது பிடித்த விஷயம். திறமையே இல்லாதவர்களை திறமையான வர்கள் கூட சப்போர்ட் பண்ணு வது பிடிக்காத விஷயம். தற் போது தமிழ் சினிமா உலகில் எனக்குப் பிடிக்காத விஷயம்தான் நடந்து கொண்டிருக்கிறது.

– சின்னி ஜெயந்த்



# தேசம் முழுவதும்

# திருவிழா!



உச்சகட்டமாக

# அமரர் கல்கி நூற்றாண்டு மலர்

## இதன் மூலம் காலம் முழுவதும் 'கல்கி' உங்களுடன்!

தவிர ஓர் இனிய பரிசு

எம்.எஸ்ஸின் தேன் குரலில்
அமரர் கல்கியின் தெவிட்டாத பாடல்கள்!
கேஸட் பரிசு!

**தயாராகுங்கள், ஒரு சிலிர்ப்பூட்டும் அனுபவத்துக்கு!**

**க**ரகத்தைத் தலையில் வைத்தபடி தரையில் இருக்கும் சோடாவை வாயினால் கவ்விக் குடிப்பது, கரகம் தலையில் இருக்கும் போதே வாயினால் தனக்குதானே மாலை யிட்டுக் கொள்வது என சர்க்கஸ் மாதிரி சாகசம் செய்யும் கரகாட்டக்காரர்கள் கிரா மப்புறத்திலேயே அரிதாகி வரும் நிலையில், கல்லூரி மாணவர்கள் இக்கலையை வளர்க்கப் புறப்பட்டுள்ளனர் என்றால் ஆச்சர்யமாயில்லை?

ஏணி வைத்து ஏறி நின்று ஐவராட்டம், சோடா பாட்டில்களை கீழே நிறுத்தி மேலே மணைப் பலகையிட்டு ஒருவராட்டம் என கரகாட்டத்தை விதவிதமான சாகசம் ததும்ப நிகழ்த்திக் காட்டுகின்றனர் கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி மாணவர்களும் - மாணவியரும்.

அன்பு, கல்பனா, ஹேமலதா, ஆனந்தன், ஆர்த்தி, அமுதவேணி, நரேந்திர கண்ணன், சுமதி ஆகிய எட்டுப் பேர் கொண்டது இந்த கலைக் குழு! பாரதியார் யுனிவர்சிட்டி கலை விழாவில் முதல் பரிசு ஈட்டியதோடு, தென்னிந்திய அளவில் நிகழ்ந்த பல்கலைக் கழகங்களுக்கான இளைஞர் விழாவில் (ஹைதராபாத்தில்) முதன்மையாக வந்து பல்வேறு மாநிலங்களிலும் வரவேற்புப் பெற் றுள்ளனர்! கல்லூரிக் கலைவிழாக்களிலும் 'தூள்' கிளப்பிக் கொண்டிருக்கின்றனராம்.

இதில் அன்பு, ஹேமலதாவுக்கு மட்டும் கல்லூரிக்கு வரும் முன்பு பரதம் தெரிந் திருக்கிறது. மீதியெல்லோரும் நாட்டியத்தில் அமெச்சூர்தானாம்! பிறகு எப்படி பயிற்சி எடுத்துக் கொண்டார்கள்?

"எங்கள் கல்லூரிச் செயலர் ஏற்பாடு செய்தது. அதற்குமுன் கல்லூரி விழாக்களில் பரதம் மட்டுமே செய்து வந்த எங்களை அழைத்து, மதுரையிலிருந்து பயிற்சியாளர் கள் சுரேஷ் - நாகராஜனைக் கொண்டு பயிற்றுவித்தார். இதனைக் கற்றுக் கொள்ள முப்பது நாட்களுக்கு மேல் ஆனது!" என்றார் இக்கலைக் குழுவில் அங்கம் வகிக்கும் மாணவர் அன்பு.

கரணம் தப்பினால் மரணம். சோடா பாட்டில்கள் மீது, ஏணி மீதெல்லாம் எப் படிப் பாலன்ஸ் பண்ணுகிறார்கள்?

"பலமுறை பாலன்ஸ் தப்பி விழுந்து அடி பட்டுமிருக்கிறோம். அதற்காக இதைக் கை விட்டு விடுவோமா? இந்தக் கலை இப்போ தெல்லாம் எங்கள் உணர்வுகளுடன் கலந்து விட்டது. பாலன்ஸ் தப்பாமல் இருக்க முதலில் தெய்வ நம்பிக்கை வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தும் தன்மை இயல் பிலேயே இருக்க வேண்டும். இவையெல்லாம் எங்கள் குருநாதர் கற்றுக் கொடுத்தது. எந்த ஆட்டத்திலும் காலில் செருப்புப் போடக் கூடாது என்பது எங்களுக்குள் ஊடுருவி யிருக்கும் கட்டளை. அப் படியே செய்கிறோம்.




• கரகக் குழு

**கி**ராமப்புறக் கரகாட்டக்காரர் கலையை ரொம்பவே கொச்சைப்படுத்தி விடுகிறார்கள். 'ட்ரஸ்ஸை' ரொம்பக் கேவலமான விதத்தில் உடுத்துவது, காசுக்காக வேண்டி - கொஞ்ச நேர சிரிப்பு மூட்ட வேண்டி ஏதேதோ ஆபாச வசனங்களைப் பேசி கலைக்கே களங்கம் கற்பித்து விடுவதில்

## ஒரே கேள்வி!

### கார்கில் நிதிக்கு எவ்வளவு நன்கொடை கொடுத்தீர்கள்?



சமீபத்தில் புரட்சிக்கலைஞர் விஜயகாந்த் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், சினிமா கலைஞர்கள் அனைவரும், ஜூலை 11-ம் தேதி மதுரையில் கார்கில் நிதிக்காக நடத்தப்படும் கலை நிகழ்ச்சியிலும், ஜூலை 18-ம் தேதி சென்னையில் நடக்கும் நட்சத்திரக் கிரிக்கெட்டிலும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இரண்டு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டேன்.

— சுவலட்சுமி

---

# கரகாட்டத்தில் கலக்கும் கல்லூரி மாணவர்கள்!

இவர்களுக்கு ஏக வருத்தம். எனவே இவர்கள் யாரும் அரைக்கால் பாவாடை அணியவேயில்லையாம். கண்டாங்கி சேலைதான். கண்டபடி வசனம் பேசாமல் நையாண்டி மேளம்தான் போடுவது என குறிக்கோளாய் உள்ளனர். கல்லூரியில் கோலாட்டம், கும்மியாட்டம் கத்துக்க பலரும் முன் வந்தார்களாம். ஆனால் கரகாட்டம் கற்றுக் கொள்ள யாருமே வராத நிலையில் 'நாங்கள் வந்தோம்' என்கின்றனர் சில மாணவர்கள்.

இக்கலையைக் கல்லூரிக்குக் கொண்டு வர யோசனை வந்தது எப்படி? என்று கல்லூரி முன்னாள் முதல்வரும், தற்போதைய செயலாளருமான டாக்டர் மா. ஆறுச்சாமியிடம் கேட்டோம்.



• டாக்டர் ஆறுச்சாமி

"மாணவர்கள் மத்தியில் இதற்கு ஆரம்பத்திலிருந்தே நல்ல வரவேற்புதான்! கரகாட்டம் என்றில்லை, நாட்டுப்புறக் கலைகளுக்கே உயிர் கொடுக்க வேண்டித்தான் கல்லூரியில் ஒயில் கும்மி, கோலாட்டம், கும்மியாட்டம், வடக்கத்திய தாண்டியா நடனம், பஞ்சாபி, ராஜஸ்தானி கலைகளைக் கூட கொண்டு வந்தோம். எலக்ட்ரானிக் மீடியா வந்த பிறகு நம் கலைகள் அழியக் கூடிய சூழலில், ஆபாச நடனங்களும், அரை குறை ஆடைகளில் ஃபாஷன் பரேடுகளும் பெருகிப் போனதை தவிர்க்கவும் இது நன்றாகவே பயன்படுகிறது. இது என் ரொம்ப காலக் கனவு. இப்போதுதான் ஆரம்பித்துத் தீவிரப்படுத்தியுள்ளோம். செலவு அனைத்தையுமே கல்லூரி நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது. என்.எஸ்.எஸ். முகாம் செல்லுமிடங்களில் ஜனங்களிடமும் இதனைக் கொண்டு சென்றிருக்கிறோம்."

என்.எஸ்.எஸ். முகாம்களில் மட்டும் வருவதில் மட்டும் மாணவர்களுக்குத் திருப்தியில்லையாம். விரைவில் கல்லூரி முடித்ததும் ஒரு டீம் சேர்த்து கிராமங்களிலும், நகரங்களிலும் முறைப்படி சென்று கரகாட்டம் ஆடிக் கலக்கப் போகிறார்களாம். 'இப்போது போனால் படிப்பு கெட்டு விடுமே' என்பது அவர்கள் ஆதங்கம். சரிதான்; ஜமாய்க்கட்டும்.

கட்டுரை, படங்கள் : **கேயெஸ்வி**

வழக்கம்போல் காரை நிறுத்திவிட்டு அலுவலகத்துக்குள் போனான். வாசலிலேயே செக்ரட்டரி நிறுத்தி, "எரிக் உன்னைப் பார்க்க வேண்டுமாம். உடனே, போ" என்றாள். அப்படியென்ன தலைபோகிற அவசரம் என்று நினைத்தபடி உள்ளே போனான்.

எரிக் ரூமிற்குள் நுழைந்தான். ஆச்சரியமாக அந்த நிறுவனத்தின் தலைவர், இன்னொரு முதலீட்டாளர் மற்றும் எரிக் அனைவரும் ஒன்றாக அமர்ந்திருந்தார்கள். எரிக் முகத்தில் வழக்கமான புன்னகையில்லை. என்னடா இவர்களெல்லாம் இருக்கும்போது நம்மை எதற்குக் கூப்பிட்டிருக்கிறான் என்று நினைத்தபடி உட்கார்ந்தான்.

"நேற்று இரவு அலுவலகத்திற்கு வந்தீர்களா?"

"ஆமாம்" என்றான் சத்யா.

"எத்தனை மணிக்கு?"

ஓவர் டைம் ஷீட்டில் பொய்யெழுதியது ஞாப



பிருதிவிராஜ்

கம் வந்தது. அதே பொய்யைத் திருப்பிச் சொன்னான்.

"ஏழு மணியிலிருந்து ஒன்பது மணி வரை வேலை பார்த்தேன்."

"அந்த நேரத்தில் வேறு யாரும் அலுவலகத்திலிருந்தார்களா?"

"இல்லை" என்று சத்யா சொல்லி முடிக்கவும் பக்கத்தில் இருந்த டேப்ரிக்கார்டரை அணைத்தான் எரிக். சத்யா அப்போதுதான் இவன் பேசியதை பதிவு செய்திருக்கிறார்களென்று உணர்ந்தான்.

"நேற்று இரவு புளோரிடா புராஜெக்டோட அனைத்து புரோக்ராம்களையும் காப்பி பண்ணியிருக்கிறீர்கள்."

சத்யா அதிர்ந்தான்.



"என்னது காப்பியா! இல்லை. இல்லவே இல்லை" என்றான்.

எரிக் அவன் டிராயரிலிருந்து ஒரு ஷீட்டை எடுத்துப் போட்டான். வின்டோஸ் என்.டி.யின் இவென்ட் லாக். அதாவது கம்ப்யூட்டரில் என்ன நடந்தது என்பதைப் பதிவு செய்து வைத்திருக்கும் சமாசாரம். அதில் நேற்று இரவு எட்டு மணி பத்து நிமிடத்திலிருந்து ஒன்பது மணி வரை புனோரிடா புராஜெக்டை காப்பி எடுத்திப்பது பதிவாகியிருந்தது.

"ஐயோ! நான் இதைப் பண்ணவேயில்லை. நான் எதுக்காக காப்பி எடுக்கணும்?"

"கஸ்டமரிடம் விற்பதற்குத்தான். அவர்கள் என்னிடம் நேரடியாகக் கேட்டார்கள். என் மூலமாக முடியவில்லையென்றவுடன், உங்கள் மூலமாக சாதித்து விட்டார்கள்."

"ஐயோ! நான் இந்த மாதிரியெல்லாம் பண்ணக்கூடியவனே அல்ல."

# பணம் பொய் குற்றம்!

## 2

"அப்படித்தான் நானும் இவ்வளவு நாள் நம்பிக் கொண்டிருந்தேன்."

சத்யாவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. பேசாமல் உண்மையைச் சொல்லிவிடலாம் என்று நினைத்தான். ஓவர்டைம் ஷீட்டில் பொய்யெழுதியதற்கு இவ்வளவு பெரிய பழியா?

"உண்மையில் நேற்று இரவு எட்டு மணிக்கே அலுவலகத்தை விட்டுப் போய் விட்டேன்."

உடனே எரிக் ஓவர்டைம் ஷீட்டை எடுத்துப் போட்டான். அதில் சத்யா ஒன்பது மணி வரை வேலை பார்த்ததாக எழுதி கையெழுத்துப் போட்டிருந்தான்.

"சாரி! இது பொய். ஓவர்டைம் அதிகம் கிடைக்க வேண்டுமென்பதற்காகப் பொய் சொன்னேன்" என்று சத்யா தயங்கியபடி சொன்னான். எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நிச்சயமாக இதை வேறு யாரோ பண்ணியிருக்க வேண்டும். நான் பண்ணின ஒரே தப்பு ஓவர்டைம் ஷீட்டில் பொய்யெழுதியதுதான்" என்றான்.

எரிக் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தான். "ஓவர்டைம் ஷீட்ல பொய்யெழுதக் கூடாதுன்னு தெரியுமில்லியா?"

"தெரியும். தப்புதான்."

"அது வேற பிரச்னை. அப்ப புரொக்ராம்களை காப்பி எடுத்தது யாரு?"

"தெரியலை" என்றான் சத்யா.

"எதற்கு இந்தக் குழப்பம். செக்யூரிட்டி சிஸ்டம் கம்பெனியைக் கூப்பிட்டுக் கேட்டால் தெரிந்து விட்டுப் போகிறது" என்று முதன்முதலாக வாயைத் திறந்தார் முதலீட்டாளர்.

"செக்யூரிட்டி கம்பெனிக்கு ஃபோன் பண்ணி நேற்று இரவு எட்டுமணிக்கு மேல் யாருடைய நம்பர் இருக்கிறது என்று கேளுங்கள்" என்றார்.

சத்யாவிற்கு 'அப்பாடா. பிழைத்தோம்' என்றிருந்தது. ஓவர்டைம் ஷீட்டில் பொய்யெழுதிய பிரச்னையை சமாளித்துக் கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால் அவன் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை.

செக்யூரிட்டி கம்பெனி அடுத்த பத்தாவது நிமிடம் நம்பரை அனுப்பிவிட்டது. அந்த நம்பர் சத்யாவினுடையது.

"வெரி கிளியர் கேஸ்" என்றான் எரிக்.

"நான் என்ன சொல்றேன்னா..."

"என்ன சொல்லணுமோ அதை போலீஸிடம் சொல்லுங்க."

"போலீஸா?"

"மில்லியன் டாலர் சாப்ட்வேர் திருட்டிற்கு போலீஸ்தான் வரும்."

சத்யா பேச்சடைத்து நின்றான். அடுத்த

பத்தாவது நிமிடத்தில் போலீஸ் வந்தது. சத்யாவிடம் ரொம்ப சாதாரணமான கேள்விகள் கேட்டார்கள். சத்யா போலீஸை முதன்முதலாகச் சந்திக்கிறான். கல்லூரியில் படிக்கும்போது இலங்கைத் தமிழர் பிரச்னைக்காகக் கூட்டத்தோடு கூட்டமாகக் கைதான ஞாபகம். மற்றபடி போலீஸுடன் பரிச்சயமில்லை. ஆனால் இவர்கள் தமிழ் சினிமாவில் காட்டுவது போல் முரட்டுத்தனமாக நடக்கவில்லை.

"எரிக் கொடுத்திருக்கிற புகார் மற்றும் அதற்கான ஆதாரங்களின் அடிப்படையில் உங்களைக் கைது செய்கிறோம். நீங்கள் உங்களோட வக்கிலிடம் வேண்டுமென்றால் பேசலாம்."

சத்யா உறைந்து நின்றான். நாடு விட்டு நாடு வந்திருப்பது உறைத்தது. யாரையும் தெரியாது. சௌகரியமான வாழ்க்கை, வாரந்தோறும் சம்பளம், ஷாப்பிங், அவ்வப்போது டூர்... என்று ஜாலியாக நாட்கள் போய் விட்டது. யாருடனும் அவ்வளவு பழக்கமில்லை. யாரைக் கூப்பிடுவது?

கற்பகத்தை நினைத்தபோது பயமாகயிருந்தது. அவளிடம் பேசலாமா வேண்டாமா? பேசித்தானாக வேண்டும். மதிய உணவு வேளையின் போது ஃபோன் பண்ணிவிடுவாள். அவ்வளவு டென்ஷனிலும், கற்பகம் எப்படி எடுத்துக் கொள்வாள் என்றுதான் கவலையாக இருந்தது. கற்பகத்திற்கு ஃபோன் பண்ணினான்.

"ஹலோ!"

"ஹலோ! கற்பகம் நான்தான்."

"நல்லவேளை நீங்க பேசினீங்க. மறக்கறதுக்கு முன்னாடி நான் சொல்லிடறேன். ஆபிஸ்லேர்ந்து வரும்போது 'தர்சனா ஸ்டோர்ஸ்'ல புளி வாங்கிட்டு வந்திடுங்க."

"ஓ காட். முதல்ல விஷயத்தைக் கேளு. என்னைக் கைது பண்ணியிருக்காங்க."

"இந்த மாதிரி கதையெல்லாம் ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதி சொல்லுங்க" என்று சொல்லிச் சிரித்தாள்.

"கொஞ்சம் குறுக்க பேசாமல் நான் சொல்வதைக் கேட்கிறாயா?" என்றான் சத்யா.

"என்ன விஷயம் சொல்லுங்க."

"ஒரு சாப்ட்வேர் திருட்டு சம்பந்தமாக என்னைக் கைது பண்ணியிருக்காங்க" என்று சொல்லி விஷயம் முழுவதையும் சொன்னான்.

"எப்ப விடுவாங்க. எப்ப வருவீங்க?" என்று அழ ஆரம்பித்தாள்.

"அழாதே! எனக்கே ஒண்ணும் தெரியலை. இப்ப போலீஸோட போகிறேன். இனிமேல் உன்னோட பேச முடியுமான்னு வேற தெரியலை. சில விஷயங்கள் மட்டும் சொல்லிடறேன். நீ எங்க போகணுமென்றாலும் டாக்சி எடுத்துக்கோ. பேங்க் மெஷின்ல பணம் எடுத்துக்கோ. தெரிந்த நண்பர்களிடம் உதவி வேண்டுமெனில் தயங்காமல் கேள். எப்படியாவது சமாளிச்சுக்கோ" என்று சொல்லி ஃபோனை வைத்தான். அடுத்த முனையில் அவள் அழுது கொண்டேயிருந்தது மனதைப் பிசைந்தது.

நீதிபதி ஒரு பெண்மணி. விஷயம் முழுவதையும் கேட்டாள். சத்யா பக்கம் திரும்பி, "நீங்க என்ன சொல்றீங்க?" என்றாள். "எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் சாப்ட்வேர் திருடற ஆசாமி இல்லை. வீட்டுல உபயோகிக்கிற சாப்ட்வேர்ஸ் கூட லைசென்ஸோட வாங்கினது."

போலீஸ் தரப்பில் சாட்சியங்கள் போடப்பட்டது.

"இதெல்லாம் தவறான சூழ்நிலையில் தயாரிக்கப்பட்ட தகவல்கள்."

"இந்த ஆதாரங்கள் உண்மையா? பொய்யா? என்று கோர்ட்தான் முடிவு பண்ண வேண்டும். இப்ப நாங்க உங்களிடம் கஸ்டடியில் வைக்கத்தான் அனுமதி கேட்கிறோம்."

"ஏன் இவரை பெயில்ல விடக் கூடாது."

"இவர் ஒரு வெளிநாட்டு பிரஜை. இங்கு எந்தப் பிடிமானமும் கிடையாது. இங்கிருந்து யு.எஸ்.க்குள் போவதற்கு மூன்று மணி நேரம் தான் ஆகும். இந்த நிலையில் மில்லியன் டாலர் சாப்ட்வேர் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள இவரை வெளியே விட்டால், இவர் தப்பிவிட வாய்ப்பிருக்கிறது."

போலீஸ் லாயர் பேசிக் கொண்டே போனார். சத்யா தன் விதியை நொந்து கொண்டான். "உங்களுக்கு அட்டர்னி இருக்கிறாரா?"

இல்லையென்று தலையசைத்தான். பதினைந்து நாள் ரிமாண்டில் வைக்கவும், குடும்பத்தினரும், அட்டர்னியும் வந்து சந்திக்கலாமென்றும் அட்டர்னியில்லையென்றால் அரசாங்கமே அட்டர்னி ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் உத்தரவிட்டுவிட்டு அந்தப் பெண்மணி எழுந்து போனாள். சத்யா சோகமாய் நின்றான்.

**போ**லீஸ்"டன் போய்க் கொண்டிருக்கும்போது சத்யாவிற்குச் சடாரென்று ஞாபகம் வந்தது. அடடா ஊருக்குச் சொல்ல வேண்டாமென்று சொல்லவில்லையே. கற்பகத்திற்கு எல்லாம் ஊருக்குச் சொல்ல வேண்டும். இனி எப்போது அவளிடம் பேச முடியுமோ? தெரியவில்லை. அதற்குள் அவள் ஊருக்குப் பேசாமல் இருக்க வேண்டும்.

**ச**த்யா யோசித்துக் கொண்டிருந்த போது, கற்பகம் ஃபோனை எடுத்தாள். அழுது முடித்திருந்தாள். என்ன செய்வது என்று தெரியவில்லை. தெரிந்த நண்பர்கள் யாரிடமாவது பேசிப் பார்க்கலாமென்று தோன்றியது. கூப்பிட ஆரம்பித்தாள்.

"உங்களுக்கு யாராவது லாயரைத் தெரியுமா?"

"ஐயோ! எங்களுக்கு எந்த லாயரையும் தெரியாது. பார்வதிகிட்ட பேசிப் பாரேன். அவ புருஷனுக்கு இந்த மாதிரியான விவகாரங்களில் அனுபவமுண்டு."

ஃபோன் வைக்கப்பட்டு விட்டது.

'இந்த மாதிரியான விவகாரங்கள்' என்று சொல்லியது கற்பகத்தை கஷ்டப்படுத்தியது. பார்வதிக்குப் பேசினாள். முழு விவரமும் சொன்னாள். பார்வதி ரொம்ப நேரம் பேசினாள். முடிவாக யாரையும் தெரியாது என்று சொல்லி விட்டாள். பிரயோஜனமில்லையென்று ஃபோனை வைத்து விட்டாள்.

யாரோ ஃபோன் அடித்தார்கள். எடுத்தாள். எதிர்முனையில் அசட்டுமாமி. அதன் உண்மையான பெயரே கற்பகத்திற்குத் தெரியாது. எல்லோரும் அதை அசட்டுமாமி என்று பேசிக் கொள்வார்கள்.

"கற்பகம், விஷயம் கேள்விப்பட்டேன். நேக்கு படபடன்னு வந்துடுத்து. என்ன நடந்தது?"

பார்வதி உதவி செய்யாவிட்டாலும் ஊருக்கெல்லாம் விஷயத்தைச் சொல்லி விட்டாள்.

"சாப்ட்வேர் திருட்டுல இவாளைப் புடிச்சுட்டா மாமி."

"அது என்னவோ போ. வக்கில் வேணும்னு கேட்டியாமே! எங்கப்பா நல்ல வக்கில். ஆனா அவர் திருநெல்வேலியிலன்னா இருக்கார்."

"அவர் வந்து இங்க வாதாட முடியாது."

"உன் நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராதுடி. தைரியமாயிரு. தனியாகயிருக்க பயமாயிருந்தா எங்காத்துக்கு வந்துடு. அவர் வந்தவுடனே இரண்டாயிரம் டாலர் கொடுத்து விடறேன். செலவுக்கு வச்சுக்கோ."

தான் இனி அழுவதில்லையென்று முடிவு செய்தாள்.

**மீ**ண்டும் தொலைபேசி மணியடித்தது. ஐயோ யாரோ துக்கம் விசாரிக்கக் கூப்பிடுகிறார்கள் என்று நினைத்தபடி "ஹலோ" என்றாள்.

"ஏடி கற்பகம், நான் அம்மா பேசறேன்."

ஊரிலிருந்து அம்மா பேசினாள்.

"அம்மா என்ன திடீர்னு ஃபோன்?"

"நல்ல செய்திதான். அப்பாவுக்குப் பதவி உயர்வு கிடைச்சிருக்கு."

அம்மா ஏதேதோ பேசினாள். கற்பகம் கேட்கக் கூடிய நிலையில் இல்லை.

"கற்பகம், என்ன டல்லா பேசற. அங்க யாருக்கும் ஹெல்த் ப்ராப்ளமில்லையே. எல்லோரும் சௌக்கியம்தானே! பிரச்சனை எதுவுமில்லையே!"

கற்பகம் ஒரு நிமிடம் தயங்கினாள். பின் "நான் தூக்கக் கலக்கத்திலிருந்தேன். மற்றபடி ஒரு பிரச்சனையுமில்லை. நாங்க எல்லோரும் ரொம்ப நல்லாயிருக்கோம்" என்றாள்.


(தொடரும்)

## ஒரே கேள்வி!

**உங்களுக்குப் பிடித்த கவிஞர் யார்?**

"பாரதியார்தான்! கண்ணதாசன், வைரமுத்து, வாலி என்று பல கவிஞர்களை எனக்குப் பிடிக்கும். இருந்தாலும், தமிழ்க் கவிதைக்கு உயிர் தந்த முன்னோடி பாரதிதான்! எல்லோருக்கும் புரிகிறமாதிரி தமிழில் முதன் முதலில் கவிதை எழுதியவர் அவர்தான்.

— கிரேஸி மோகன்






## இருபத்தாறாம் அத்தியாயம்

# அநிருத்தரின் பிரார்த்தனை

முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் வீற்றிருந்த பல்லக்கு நிலா முற்றத்தில் கூடியிருந்த ஜனக் கூட்டத்தைப் பிளந்து வழி ஏற்படுத்திக்கொண்டு வந்தது. இரு பக்கமும் விலகி நின்ற மக்கள் முதன் மந்திரியிடம் தங்களுடைய மரியாதையைத் தெரிவித்துக்கொண்டார்கள். பலர் இளவரசரைப் பற்றிய தங்கள் கவலையையும் வெளியிட்டார்கள். முதன்மந்திரியும் கவலை தங்கிய முகத்துடனேதான் தோன்றினார். ஆனாலும் இரு கைகளையும் தூக்கி ஜனங்களுக்கு ஆறுதலும் ஆசியும் கூறும் பாவனையில் சமிக்ஞை செய்துகொண்டு சென்றார். அரண்மனைக் கட்டடத்தின் முகப்பை அடைந்ததும் பல்லக்கு கீழே இறக்கப்பட்டது. முதன்மந்திரி வெளி வந்து முதலில் மேலே நோக்கினார். பெரிய ராணியும் இளவரசியும் அங்கே நிற்பதைப் பார்த்து வணக்கம் செலுத்தினார். பிறகு, துவந்த யுத்தம் நடந்த இடத்தை நோக்கினார். இவ்வளவு நேரமும் தங்களைச் சுற்றி நடப்பது ஒன்றையும் தெரிந்து கொள்ளாமல் வந்தியத்தேவனும் பினாகபாணியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆழ்வார்க்கடியான்




**அமரர் கல்கி**

இதற்குள் இறங்கி வந்து முதன்மந்திரியின் காதருகில் ஏதோ சொன்னான். அவர் தம் முன் வந்த சேவகர்களைப் பார்த்து, "அரண்மனை முற்றத்தில் கலகம் செய்யும் இந்த முரடர்களை உடனே சிறைப் படுத்துங்கள்!" என்று கட்டளையிட்டார். சேவகர்களுடன் ஆழ்வார்க்கடியானும் கூட்டத்தைப் பிளந்துகொண்டு சென்றான். சண்டை போட்ட இருவரையும் சேவகர்கள் கைப்பற்றி அவர்களுடைய கைகளை வாரினால் பிணைத்தார்கள். ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனை நோக்கி ஜாடை செய்யவே அவன் தன்னைச் சிறைப்படுத்தும்போது சும்மாயிருந்தான்.

அநிருத்தர் மேல் மாடத்துக்குச் சென்றார். அங்கு நின்றபடி ஜனங்களைப் பார்த்து "உங்களுடைய கவலையையும் கோபத்தையும் நான் அறிவேன். சக்கரவர்த்தியும் ராணிமார்களும் உங்களைப் போலவே துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய கவலையை அதிகப்படுத்தும்படியான காரியம் எதுவும் நீங்கள் செய்ய வேண்டாம். இளவரசரைத் தேடுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறது. நீங்கள் எல்லாரும் அமைதியாக வீடு திரும்புங்கள்!" என்று கூறினார்.


"சக்கரவர்த்தியை நாங்கள் பார்க்க வேண்டும். சக்கரவர்த்தி பழையாறைக்குத் திரும்பி வர வேண்டும்" என்று கூட்டத்தில் ஒருவர் கூறினார்.

"இலங்கையில் உள்ள எங்கள் ஊர் வீரர்கள் கதி என்ன?" என்று இன்னொருவர் கேட்டார்.


"சக்கரவர்த்தி தஞ்சை அரண்மனையில் பத்திரமாயிருக்கிறார். அவர் தங்கியுள்ள அரண்மனையை இப்போது வேளக்காரப் படையினர் இரவு பகல் காவல் புரிகின்றனர். கூடிய சீக்கிரத்தில் சக்கரவர்த்தியை இந்த நகருக்கு நானே அழைத்து வருகிறேன். இலங்கையில் உள்ள நம் வீரர்களைப் பற்றியும் உங்களுக்குக் கவலை வேண்டாம். ஈழத்துப் போர் நமக்குப் பூரண வெற்றியுடன் முடிந்து விட்டது. நம் வீரர்கள் விரைவில் திரும்பி வந்து சேருவார்கள்!" என்று முதன்மந்திரி அறிவித்ததும் கூட்டத்தில் பெரும் உற்சாக ஆரவாரம் ஏற்பட்டது. சுந்தர சோழரையும் அன்பில் அநிருத்தரையும் வாழ்த்திக் கொண்டு ஜனங்கள் திரும்பலானார்கள்.

முதன்மந்திரி பெரிய மகாராணியைப் பார்த்து, "தேவி! தங்களிடம் மிக முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும்! அரண்மனைக்குள் போகலாமா?" என்றார். இளவரசியைத் திரும்பிப் பார்த்து, "அம்மா! உன்னிடம் பிற்பாடு வருகிறேன்" என்று கூறியதும், குந்தவை தன்னுடைய இருப்பிடத்துக்குப் புறப்பட்டாள். அவளுடைய மனத்தில் இப்போது பல கவலைகள் குடி கொண்டன. சோழ சாம்ராஜ்யத்தில் யாராவது ஒருவரிடம் குந்தவை பயம் கொண்டிருந்தாள் என்றால், அவர் முதன்மந்திரி அநிருத்தர்தான். கழுகுப் பார்வையுள்ள மனிதர் அவர். புறக்கண்களினால் பார்ப்பதைத் தவிர, எதிரேயுள்ளவர்களின் நெஞ்சிலும் ஊடுருவிப் பார்த்து அவர்களுடைய அந்தரங்க எண்ணங்களை அறியும் ஆற்றல் படைத்தவர். அவருக்கு எவ்வளவு தெரியும், எவ்வளவு தெரியாது, அவரிடம் எதைச் சொல்லலாம், எதைச் சொல்லாமல் விடலாம் என்பதைப் பற்றி இளையபிராட்டிக்கு ஒரே குழப்பமாயிருந்தது. வாணர் குல வீரனையும் பினாகபாணியையும் சேர்த்து அவர் சிறைப்படுத்தும்படிக் கட்டளையிட்டது இளவரசிக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. அதை வெளிக்காட்டிக் கொள்ளவும் முடியவில்லை. அந்த மாபெரும் ஜனக்கூட்டத்தின் முன்னால் வந்தியத்தேவனுக்குப் பரிந்து பேசவும் முடியவில்லை. "என்னிடம் பிற்பாடு வரப் போகிறாராமே? வரட்டும்;

ஒரு கை பார்த்து விடுகிறேன்!'' என்று மனத்தில் கறுவிக்கொண்டே தன் அந்தப்புரத்தை நோக்கி விரைந்து சென்றாள்.



செம்பியன் மாதேவி சோழ சாம்ராஜ்யத்தில் அனைவருடைய பயபக்தி மரியாதைக்கும் உரியவராயிருந்தவர். முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயரும் அதற்கு விலக்கானவர் அல்ல. ஆனாலும் அம்மூதாட்டி இச்சமயம் ஏதோ ஒரு வித பயத்துடனேயே நடந்து கொண்டார். அநிருத்தர் ஆசனத்தில் அமர்ந்த பிறகே தாம் அமர்ந்தார்.



''ஐயா! சில காலமாக என் தலையில் இடிமேல் இடியாக விழுந்துகொண்டிருக்கிறது. நீரும் அத்தகைய செய்தி ஏதேனும் கொண்டு வந்நீரா? அல்லது ஆறுதலான வார்த்தை சொல்லப் போகிறீரா!'' என்று வினவினார்.

''அம்மணி! மன்னியுங்கள்! தங்கள் கேள்விக்கு என்னால் விடை சொல்ல முடியவில்லை. நான் கொண்டு வந்திருக்கும் செய்தியைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தைப் பொறுத்திருக்கிறது!'' என்றார் தந்திரத்தில் தேர்ந்த



முதன்மந்திரி.

"பொன்னியின் செல்வனைப் பற்றிய செய்தி உண்மைதானா, ஐயா! என்னால் நம்பவே முடியவில்லையே? அருள்மொழி வர்மனைப் பற்றி நாம் என்னவெல்லாம் நம்பிக் கொண்டிருந்தோம்? இந்த உலகத்தையே ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவன் என்று நாம் எத்தனை தடவை பேசியிருக்கிறோம்...?"

"பெருமாட்டி! ஜோசியர்கள் அவ்விதம் சொல்வதாகத் தாங்கள் என்னிடம் கூறியது உண்மைதான். அடியேன் தங்களை மறுத்தும் பேசியதில்லை; ஒத்துக் கொண்டும் பேசியதில்லை!"

"அது போகட்டும். இப்போது சொல்லுங்கள். பொன்னியின் செல்வனைச் சமுத்திரராஜன் கொள்ளை கொண்டு விட்டது நிச்சயந்தானா?"

"நிச்சயம் என்று யார் சொல்ல முடியும் தாயே! அம்மாதிரி செய்தி நாடு நகரமெங்கும் பரவியிருப்பது நிச்சயம்."

"அது உண்மை என்று ஏற்பட்டால், இந்தச் சோழ நாட்டின் கதி என்ன? எத்தகைய விபரீதங்கள் ஏற்படும்?"

"விபரீதங்கள் அது உண்மை என்று ஏற்படும் வரையில் காத்திருக்கப் போவதில்லையென்று தோன்றுகிறது..."

"ஆம், ஆம்! விபரீதம் நேரிடுவதற்கு வதந்தியே போதுமானதுதான். இந்தப் பழையாறை நகர மக்கள் இவ்வளவு ஆத்திரங் கொண்டு திரளாக அரண்மனைக்குள் பிரவேசித்ததை இது வரையில் நான் பார்த்ததில்லை..."

"பழையாறையில் மட்டுந்தான் இப்படி நடந்ததென்று கருத வேண்டாம். தஞ்சாவூர் நகரம் நேற்று முதல் அல்லோலகல்லோலமாயிருந்தது. வேளக்காரப் படையினர் சக்கரவர்த்தியின் அரண்மனையை விட்டு நகர மறுத்து விட்டார்கள். மக்கள் கோட்டைக்குள் திரள் திரளாகப் புகுந்து பழுவேட்டரையர்களின் மாளிகைகளைச் சூழ்ந்து கொண்டார்கள். மதங் கொண்ட யானைகளை ஜனங்களின் பேரில் ஏவிவிட்டு அவர்களைக் கலைந்து போகும்படி செய்ய வேண்டியதாயிற்று..."

"ஐயோ! இது என்ன விபரீதங்கள்! எத்தகைய பயங்கரமான செய்தி?"

"மதுராந்தகர் பழையாறைக்கு வந்து விட்டதே நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிடில் அந்தப் பயங்கரமான பழி அவரையும் சேர்ந்திருக்கும்..."

"ஐயா! மதுராந்தகன் எப்படி மாறிப் போயிருக்கிறான் என்று தெரிந்தால் தாங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்."

"ஆச்சரியப்பட மாட்டேன். தாயே! அவை எல்லாம் எனக்குச் சில காலமாகத் தெரிந்த விஷயந்தான்."

"தெரிந்திருந்தும் அவனுடைய மனத்தை மாற்றத் தாங்கள் ஒரு முயற்சியும் செய்யவில்லை! இப்போதாவது யோசனை சொல்லி உதவுங்கள்!"

"அம்மணி! மதுராந்தகருடைய மனத்தை மாற்ற வேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அவருடைய கட்சியை ஆதரித்துப் பேசவே நான் வந்திருக்கிறேன்..."

"அப்படியென்றால்? எனக்கு விளங்கவில்லை, ஐயா!"

"அம்மணி! மதுராந்தகர் இந்தச் சோழ சிங்காதனம் தமக்கு உரியது என்று கருதுகிறார். சக்கரவர்த்திக்குப் பிறகு தாம் இந்த இராஜ்யத்தை ஆள வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அது நியாயமான ஆசை. நன்றாக அவர் மனத்தில் வேரூன்றி விட்ட ஆசை. அதைத் தடுக்க முயல்வதினால் சோழ சாம்ராஜ்யத்துக்கு நன்மை ஏற்படாது. அதை நிறைவேற்றி வைப்பதுதான் உசிதம்..."

"ஐயோ! இது என்ன வார்த்தை? நீர் கூடவா சோழ சக்கரவர்த்திக்குத் துரோகம் செய்யத் துணிந்து விட்டீர்? இது என்ன விபரீத காலம்?"

"பெருமாட்டி! சக்கரவர்த்திக்குத் துரோகம் செய்ய நான் கனவிலும் கருதியதில்லை. சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரிலேயே வந்தேன். அவர் தங்களிடம் விண்ணப்பித்துக் கொள்ளச் சொன்னதைத்தான் சொல்கிறேன். சக்கர

வர்த்தியின் காலத்துக்குப் பிறகு மதுராந்தகர் சிங்காதனம் ஏற விரும்புகிறார். பழுவேட்டரையர்கள் அதற்காகச் சதி செய்கிறார்கள். ஆனால் சக்கரவர்த்தி இப்போதே மதுராந்தகருக்கு முடி சூட்டி விட்டுச் சிங்காதனத்திலிருந்து விலகிக் கொள்ள விரும்புகிறார். இதற்குத் தங்கள் சம்மதத்தைப் பெற்று வரும்படி என்னை அனுப்பியிருக்கிறார்..."

"சக்கரவர்த்தி அவ்விதம் செய்ய விரும்பலாம். ஆனால் அதற்கு என்னுடைய சம்மதம் ஒருநாளும் கிட்டாது. என் பதியின் விருப்பத்துக்கு விரோதமான இந்தக் காரியத்தை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். கல்விக் கடலின் கரை கண்ட முதல் அமைச்சரே! சக்கரவர்த்தியே சொன்னாலும் தாம் இந்த முறை தவறான காரியத்தை என்னிடம் சொல்ல எப்படி வந்தீர்? சோழ சிங்காதன உரிமையைப் பற்றித் தமக்கும் எனக்கும் மட்டும் தெரிந்த சில உண்மைகள் இருக்கின்றனவென்பதை நீர் அடியோடு மறந்து விட்டீரோ...?"

"அம்மணி! நான் எதையும் மறக்கவில்லை. தங்களுக்குத் தெரியாத சில உண்மைகளும் எனக்குத் தெரியும். ஆகையினாலேயே சக்கரவர்த்தியின் தூதனாகத் தங்களிடம் வந்தேன்..."

"ஐயா! தங்களுடைய மதி நுட்பமும் இராஜ தந்திரமும் உலகம் அறிந்தவை. அவற்றைப் பெண்பாலாகிய என்னிடம் காட்ட வேண்டாம்..."

"பெருமாட்டி! தங்களிடம் நான் வாதமிட வரவில்லை. என் சாமர்த்தியத்தைக் காட்டுவதற்கும் வரவில்லை. இந்தச் சோழ நாட்டைப் பேரபாயத்திலிருந்து காப்பாற்றி அருளும்படி மன்றாடிப் பிரார்த்தனை செய்ய வந்தேன்..."

"தங்கள் பிரார்த்தனையைப் பிறை சூடும் பெருமானிடம் செலுத்திக் கொள்ளுங்கள். அல்லது தங்கள் இஷ்ட தெய்வமான விஷ்ணுமூர்த்தியிடம் பிரார்த்தனை செய்யுங்கள்..."

"ஆம், தாயே! தாங்கள் பெரிய மனசு செய்யாமற் போனால், அம்பலத்தானும் அரங்கத்தானும்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும்."

"அப்படி என்ன ஆபத்து இந்த நாட்டுக்கு வந்து விட்டது? மதுராந்தகன் சிங்காதனம் ஏறுவதால் அதை எப்படித் தடுக்க முடியும்?"

"கேளுங்கள், பெருமாட்டி! இன்றைக்கு இந் நகரமாந்தர் கொதித்தெழுந்தது போல் காஞ்சிபுரத்திலிருந்து இராமேசுவரம் வரை உள்ள மக்கள் இன்னும் இரண்டு மூன்று நாளைக்குள் ஆத்திரமடைந்து கொதித்தெழுவார்கள். அத்துடன் முடிந்து விடாது. இலங்கையிலிருந்து பூதிவிக்கிரமகேசரி ஏற்கெனவே படை திரட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டார் என்று அறிகிறேன். ஆதித்த கரிகாலனுக்குச் செய்தி எட்டும்போது அவனும் பொறுக்க மாட்டான். வட திசைச் சைன்யத்துடன் தஞ்சையை நோக்கிக் கிளம்புவான். பழுவேட்டரையர்களும் மற்றச் சிற்றரசர்களும் ஏற்கெனவே படை திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த யுத்தத்தைப் போன்ற பயங்கரமான தாயாதிச் சண்டை இந்த நாட்டில் நடைபெறும். தங்களுடைய உற்றார் உறவினர் எல்லாரும் அழிந்துபடுவார்கள். இதையெல்லாம் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா...?"

"ஐயா! மதி நுட்பம் மிகுந்த முதல் மந்திரியே! எனக்கு உற்றார் உறவினர் என்று யாரும் இல்லை. மேற்கே மலை நாட்டில் அவதரித்த சங்கரர் என்ற மகா புருஷரைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டிருப்பீர். அந்த மகான்,

**'மாதாச பார்வதி தேவி**
**பிதா தேவோ மகேச்வர:**
**பாந்தவா; சிவபக்தாஸ்ச'**

என்று அருளியிருக்கிறார். என்னுடைய அன்னை பார்வதி தேவி; என் தந்தை பரமசிவன்; என் உற்றார் உறவினர் சிவ பக்தர்கள். இந்த உலகில் வேறு பந்துக்கள் எனக்கு இல்லை..."

"அம்மணி! அதே சுலோகத்தில் சங்கரர் அருளியுள்ள நாலாவது வாக்கியத்தைத் தங்களுக்கு நினைவூட்டுகிறேன்.



'ஸ்வதேசோ புவனத்ரய:' என்றும் அவர்தான் சொல்லியிருக்கிறார். நாம் பிறந்த தேசம் தான் நமக்கு மூன்று உலகமும். தங்களுடைய சொந்த நாடு உள்நாட்டுச் சண்டையினால் அழிந்து போவதைத் தாங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்களா?"

''என்னுடைய சொந்த தேசம் எனக்கு மூன்று உலகத்தையும் விட அருமையானது தான். ஆனால் இந்தச் சாண் அகலத்துச் சோழ நாடுதான் நம்முடைய சொந்த நாடா? ஒருநாளுமில்லை. வடக்கே கைலயங்கிரி வரையில் உள்ள நாடு என்னுடைய நாடு. சோழ நாட்டில் இடமில்லா விட்டால் நான் காசி க்ஷேத்திரத்துக்குப் போவேன். காஷ்மீரத்துக்கும் கைலாசத்துக்கும் போவேன். அப்படி யாத்திரை கிளம்பும் யோசனை எனக்கு வெகு நாட்களாக உண்டு. அதற்கு உதவி செய்யுங்கள்...''

"தாயே! தெற்கே திரிகோண மலையிலிருந்து வடக்கே இமோத்கிரி வரையில் உள்ள தேசம் நமது ஸ்வதேசம் என்று ஒத்துக் கொள்கிறேன். இப்படிப் பரந்துள்ள

பாரத புண்ணிய பூமிக்குத் தற்போது பேரபாயம் நேர்ந்திருக்கிறது. பட்டாணியர்கள், துருஷ்கர்கள், மொகலாயர்கள், அராபியர்கள் என்னும் சாதியினர் பொங்கிக் கிளம்பி எந்தப் புது நாட்டைக் கைப்பற்றலாம் என்று புறப்பட்டிருக்கிறார்கள். ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு யவனர்களும் ஹூணர்களும் படையெடுத்து வந்தது போல் இந்தப் புதிய மதத்தினர் இப்போது அணி அணியாக இந்நாட்டின் மீது படையெடுக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய மதம் விசித்திரமான மதம். கோயில்களை இடிப்பதும் விக்கிரகங்களை உடைப்பதும் புண்ணியம் என்று நம்புகிறவர்கள். அம்மணி! இவர்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய பேரரசர்கள் யாரும் இப்போது வட நாட்டில் இல்லை. சோழ நாட்டு வீரர்கள் கங்கை நதி வரையில், அப்பால் இமய மலை வரையில் சென்று பெரிய பாரத சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார்கள் என்றும், கோயில்களை இடிக்கும் கூட்டங்களைத் தடுத்து நிறுத்தப் போகிறார்கள் என்றும் அடியேன் கனவு கண்டு வந்தேன். அந்தக் கனவை நனவாக்கத் தாங்கள் உதவி செய்யுங்கள். மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டச் சம்மதித்துச் சோழ நாட்டில் தாயாதிச் சண்டை ஏற்படாமலிருக்க உதவி புரியுங்கள்!"

இதைக் கேட்ட செம்பியன் மாதேவி சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பின்னர்,

"ஐயா! ஏதேதோ இந்தப் பேதைப் பெண்ணுக்கு விளங்காத விஷயங்களைச் சொல்லி என்னைக் கலங்க அடித்து விட்டீர்கள். இந்தப் புண்ணிய பாரத பூமிக்கு அப்படிப்பட்ட ஆபத்து நேரிடுவதாயிருந்தால், அதைச் சர்வேசுவரன் பார்த்துத் தடுக்க வேண்டுமே தவிர, இந்த அபலையினால் என்ன செய்ய முடியும்? என்னுடைய கணவர் இறைவனடியைச் சேரும் சமயத்தில், எனக்குச் சொல்லி விட்டுப் போனதை ஒருநாளும் நான் மறக்க மாட்டேன். அதற்கு விரோதமான காரியம் எதுவும் நான் செய்ய மாட்டேன்!" என்றார்.

"அப்படியானால், இதுவரையில் தாங்கள் அறியாத ஓர் உண்மையை இப்போது நான் தெரியப்படுத்தியாக வேண்டும்!" என்றார் அநிருத்தர்.

இச் சமயத்தில் மதுராந்தகன் அங்கே தடபுடலாகப் பிரவேசித்து, "அம்மா! இது என்ன, நான் கேள்விப்படுவது? அருள்மொழிவர்மனைக் கடல் கொண்டு விட்டதா?" என்று கேட்டான்.

"பெருமாட்டி! தங்கள் செல்வக் குமாரருக்கு ஆறுதல் சொல்லுங்கள். நான் சொல்ல விரும்பியதை இன்னொரு சமயம் சொல்லிக்கொள்கிறேன்" என்று முதன்மந்திரி கூறி விட்டுக் கிளம்பினார்.

அவர் வாசற்படி தாண்டியதும் மதுராந்தகன் "இதோ போகிறாரே, இவர்தான் என்னுடைய முதன்மையான சத்துரு. நான் இங்கிருக்கும்போதே தங்களுக்குத் துர்ப்போதனை செய்ய வந்து விட்டார் அல்லவா?" என்று இளவரசன் மதுராந்தகன் கூறியது அநிருத்தரின் காதிலும் விழுந்தது.

## இருபத்தேழாம் அத்தியாயம்

# குந்தவையின் திகைப்பு

முதன்மந்திரி அநிருத்தர் குந்தவை தேவியின் அரண்மனையை அடைந்தார். இளவரசி அவரைப் பார்த்ததும் எழுந்து நின்று நமஸ்கரித்தாள்.

"வீரத்திலும் குணத்திலும் சிறந்த கணவனை அடைந்து நீடூழி வாழ்வாயாக!" என்று முதன்மந்திரி அநிருத்தர் ஆசீர்வதித்தார்.

"ஐயா! இந்தச் சமயத்தில் இத்தகைய ஆசீர்வாதத்தைதானா செய்வது?" என்றாள் இளவரசி.

"ஏதோ இக் கிழவனுக்குத் தெரிந்த ஆசியைக் கூறினேன். வேறு எந்த ஆசியைக் கோருகிறாய், அம்மா!"

"என் அருமைத் தந்தையின் உடல் நிலையைப் பற்றி எல்லாரும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அருள்மொழி வர்மனைப் பற்றி நாடெல்லாம் கவலையில் ஆழ்ந்திருக்கிறது..."

"ஆனால் உன்னுடைய திருமுகத்தில் அதைப் பற்றிய கவலை எதையும் நான் காணவில்லையே, தாயே!"


"வீர மறக் குலத்தில் பிறந்தவள் நான். எல்லாரையும் போல் அபாயம் என்றதும் அழுது கொண்டிருக்கச் சொல்கிறீர்களா?"

"ஒருநாளும் அவ்விதம் சொல்ல மாட்டேன். என்னைப் போன்ற வீரமற்ற ஜனங்களுக்கு இளவரசி ஆறுதல் கூறும்படிதான் சொல்கிறேன்."

"ஆச்சாரியரே! தங்களுக்கா நான் ஆறுதல் கூற வேண்டும்? உலகமே புரண்டாலும் நிலை கலங்காத வயிர நெஞ்சம் படைத்தவராயிற்றே, தாங்கள்?"

"அப்படிப்பட்ட என்னையும் கலக்கி விடுகிறாய், அம்மா! அந்தப்புரத்துப் பெண்கள் ஆடல் பாடல்களில் ஆனந்தமாகக் காலங் கழித்து வர வேண்டும். அதை விட்டு இராஜாங்க விஷயங்களில் நீ தலையிட்டதனால் எத்தகைய விபரீதம் நேர்ந்தது பார்த்தாயா?"

"ஐயோ! இது என்ன பழி? நான் எந்த இராஜாங்க விஷயத்தில் தலையிட்டேன்? என்னால் என்ன விபரீதம் நடந்துவிட்டது?"



''இன்னும் சில காலத்துக்குப் பொன்னியின் செல்வன் இலங்கையிலேயே இருக்க வேண்டும் என்று நான் சொல்லி விட்டு வந்தேன். அதற்கு விரோதமாக நீ உடனே புறப்பட்டு வரும்படி உன் தம்பிக்கு ஓலை அனுப்பினாய். உன் விருப்பத்துக்கு மாறாக இந்தக் கிழவன் பேச்சை யார் மதிப்பார்கள்? அதனால் நேர்ந்துவிட்ட விபத்தைப் பார்த்தாயா? சோழ நாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசனைக் கடல் கொண்டுவிட்டது. சற்று முன் இந்த அரண்மனை வாசலில் ஜனத் திரள் கூடி ஆர்ப்பாட்டம் செய்ததைப் பார்த்தாய். இம்மாதிரி நாடெங்கும் இன்று குழப்பம் நடந்து வருகிறது. இந்த அல்லோல



கல்லோலத்துக்குக் காரணம் நீ அல்லவா, தாயே!"

"என்னுடைய ஓலையைப் பார்த்து விட்டு அருள்மொழி வர்மன் இலங்கையிலிருந்து புறப்பட்டான் என்று ஏன் சொல்கிறீர்கள்? பழுவேட்டரையர்கள் இரண்டு கப்பல்கள் நிறைய வீரர்களை அனுப்பி இளவரசனைச் சிறைப் பிடித்துக்கொண்டு வரச் செய்தது உமக்குத் தெரியாதா?"

"தெரியும். அம்மா! தெரியும்! அத்துடனிருந்தால், இப்போது பொன்னியின் செல்வனுக்கு நேர்ந்து விட்ட கதிக்குப் பழுவேட்டரையர்களைப் பொறுப்பாளிகளாக்கலாம். அவர்கள் அனுப்பிய கப்பல்கள் இரண்டும் நாசமாகி விட்டன. உன்னுடைய ஓலைக்காகத்தான் இளவரசன் புறப்பட்டான் என்று அவர்கள் சொன்னால் யார் அதை மறுக்க முடியும்?"

"ஐயா? நான் ஓலை அனுப்பியது தங்களுக்கு எப்படித் தெரியும்? பழுவேட்டரையர்களுக்கு எப்படித் தெரியும்?"

"நல்ல கேள்வி கேட்டாய், அம்மா! எங்களுக்கு மட்டும்தானா தெரியும். உலகத்துக்கெல்லாம் தெரியும். நீ அனுப்பிய தூதன் இலங்கையில் முதலில் நம் வீரர்களால் சிறைப்படுத்தப்பட்டான். அதனால் இலங்கையில் உள்ளவர்களுக்கெல்லாம் தெரியும். அவனோடு கோடிக்கரை வரையில் சென்ற வைத்தியர் மகன் மூலமாக இந்த நாட்டில் உள்ளவர்களுக்கெல்லாம் தெரியும். நீ அந்தரங்கமாகச் செய்த காரியம் இவ்வளவு தூரம் அம்பலமாகியிருக்கிறது! ஆகையினாலேதான் ஸ்திரீகள் இராஜாங்கக் காரியங்களில் தலையிடக் கூடாது என்று நம் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்."

குந்தவை சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றாள். மறுமொழி என்ன சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. முதன் மந்திரி நன்றாகத் தன்னை மடக்கி விட்டார். அவர் சொல்வதில் உண்மை இருக்கத்தான் இருக்கிறது. இந்த எண்ணம் தோன்றியதும் வாணர் குல வீரன் மீது அவளுக்குக் கோபம் எழுந்தது. வீர சாகஸச் செயல்கள் அவன் செய்யக் கூடியவன்தான். ஆனால் காரியத்தைப் பகிரங்கப்படுத்திக் கெடுத்து விட்டானே? அவனைப் பார்த்து நன்றாகக் கண்டிக்க வேண்டும். இவ்வாறு எண்ணியதும் முதன்மந்திரியின் கட்டளையின்படி அவன் சிறைப்படுத்தப்பட்டது நினைவு வந்தது. என்னவெல்லாம் தொந்தரவுக்கு ஆளாக்கிக் கொண்டு எனக்கும் தொந்தரவு அளிக்கிறான்? சற்று நேரம் சும்மா இருக்கக்கூடாதா? வைத்தியர் மகன் ஏதாவது உளறினால் அதற்காக அவன் பேரில் மேல் மாடத்திலிருந்து பாய்ந்து சண்டை துவக்கியிருக்க வேண்டுமா?

"ஐயா! ஒரு கோரிக்கை செய்து கொள்கிறேன். பெரிய மனசு செய்து நிறைவேற்றித் தர வேண்டும்."

"தேவி! கட்டளை இடு! இந்த இராஜ்யத்தில் உன்னுடைய வார்த்தைக்கு மறு வார்த்தை ஏது?"

"தாங்கள் அரண்மனை வாசலுக்கு வரும் சமயத்தில் இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களைச் சிறைப்படுத்தத் தாங்கள் கட்டளையிட்டீர்கள்."

"அவர்கள் செய்தது பெருங்குற்றம். அரண்மனையில் மகாராணியின் கண் முன்னால் அவர்கள் சண்டை தொடங்கியது பெரும் பிசகு! அதுவும் எப்பேர்ப்பட்ட சமயத்தில்? பெரும் ஜனக் கூட்டம் கொதிப்புடனிருந்த நேரத்தில், காரணம் தெரியாத ஜனங்கள் தாங்களும் சண்டையில் கலந்து கொண்டிருந்தால் எத்தகைய விபத்து நேர்ந்திருக்கும்? சிறு நெருப்புப் பொறி பெருங் காட்டையே அழிப்பது போல் நாடு நகரமெல்லாம் கலகமும் குழப்பமும் விளைந்திருக்குமே?"

"ஆம், ஐயா! அவர்கள் செய்தது பெரும் குற்றம்தான். ஆயினும் அவர்களில் ஒருவனை மன்னித்து விடுதலை செய்யும்படித் தங்களை மன்றாடி வேண்டிக்கொள்கிறேன்."

“இளவரசியின் அருளுக்குப் பாத்திரமான அந்தப் பாக்கியசாலி யார்?”

“நான் இலங்கைத் தீவுக்கு அனுப்பிய தூதன் அவன்தான்.”

“பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.”

“எதனால் அவ்வாறு சொல்கிறீர்கள்?”

“அந்தத் தூதனை நானே சிறைப் படுத்த வேண்டும் என்றிருந்தேன். இங்கே அவனாகவே எளிதில் அகப்பட்டுக் கொண்டான்.”

“எதற்காக? என்ன குற்றத்திற்காக?”

“தாயே! அவன் பேரில் பயங்கரமான குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.”

“அது என்ன?”

“பொன்னியின் செல்வனை அவன்தான் கடலில் தள்ளி மூழ்க அடித்து விட்டான் என்று.”

“என்ன நாராசமான வார்த்தைகள்! யார் அப்படிக்



குற்றம் சாட்டுவது?"

"பலரும் அவ்வாறு குற்றம் சாட்டு கிறார்கள். இளவரசரைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு வந்த பார்த்திபேந்திரன் சொல்கிறான். பழுவேட்டரையர்கள் 'இருக்கலாம்' என்கிறார்கள். நானும் சந்தேகிக்கிறேன்!"

"ஆச்சாரியரே! ஜாக்கிரதை! நான் ஒரு கொலைகாரனைப் பிடித்து அனுப்பி என் தம்பியைக் கொன்று விட்டு வரச் சொன்னதாகவா சந்தேகிக்கிறீர்!"

"ஒருநாளும் இல்லை, தாயே! அவனை உனது நம்பிக்கைக்குரிய தூதன் என்று நினைத்துக்கொண்டு தான் நீ அனுப்பினாய். அது தவறாயிருக்கலாம் அல்லவா? அவன் மாற்றார்களின் ஒற்றனாயிருக்கலாம் அல்லவா?"

"இல்லவே இல்லை. ஆதித்த கரிகாலன் அவனை என்னுடைய உதவிக்கு அனுப்பினான். அவனைப் பூரணமாக நம்பலாம் என்று எழுதி அனுப்பினான்..."

"ஆதித்த கரிகாலனும் ஏமாந்திருக்கலாம் அல்லவா, இளவரசி? வழியில் அவன் மாற்றப்பட்டும் இருக்கலாம் அல்லவா? நான் இங்கே வரும்போது 'ஒற்றன்' என்ற குற்றச்சாட்டு என் காதில் விழுந்தது. மேலே இருந்தவனைப் பார்த்துக் கீழே நின்றவன் குற்றம் சாட்டினான். அது என்ன, அம்மா?"

"மேலே நின்றவன்தான் என் தமையன் அனுப்பிய தூதன். வாணர் குலத்தில் வந்த வல்லவரையன் வந்தியத்தேவன். கீழே நின்றவன் வைத்தியர் மகன் பினாகபாணி. வந்தியத்தேவனைப் பழுவேட்டரையர்களின் ஒற்றன் என்று வைத்தியர் மகன் குற்றம் சாட்டினான். என்ன அறிவீனம்?"

"ஏன் இருக்கக்கூடாது, தாயே?"

"ஒருநாளும் இருக்க முடியாது. பழுவேட்டரையர் காவலிலிருந்து அவன் தப்பி வந்தவன். அவனைத் திரும்பக் கைப்பற்றப் பழுவேட்டரையர்கள் எத்தனையோ ஆட்களை அனுப்பிப் பிரம்மப் பிரயத்தனம் செய்தார்கள்..."

"அவனிடம் பழுவூர் முத்திரை மோதிரம் எவ்விதம் வந்தது தாயே?"

"அந்த வஞ்சக அரக்கி, - மாய மோகினி, - விஷ நாகம், - தயவு செய்து மன்னித்துக்கொள்ளுங்கள், - பழுவூர் இளையராணி கொடுத்துத்தான் அவனுக்கு அம்மோதிரம் கிடைத்தது."

"அது உனக்குத் தெரிந்திருப்பது பற்றிச் சந்தோஷப்படுகிறேன். நான் சொன்னால் நீ நம்பியிருக்க மாட்டாய். அந்த வல்லத்து வீரன் பழுவேட்டரையர்களின் ஒற்றன் அல்ல என்பது சரி. ஆனால் பழுவூர் ராணியின் ஒற்றனாயிருக்கலாம் அல்லவா?"

"அது எப்படி முடியும்?"

"எப்படி முடியும் என்று சொல்லுகிறேன். வந்தியத்தேவன், - நீ இலங்கைக்கு அனுப்பிய அந்தரங்கத் தூதன், - தஞ்சைக் கோட்டைக்கு வெளியில் பழுவூர் ராணியைப் பல்லக்கில் சந்தித்தான். அப்போது முத்திரை மோதிரத்தைப் பெற்றுக்கொண்டான். பிறகு, கோட்டைக்குள் பழுவூர் அரண்மனையின் அந்தப்புரத்தில் அவளைச் சந்தித்தான். அவனைப் பழுவூர் இளைய ராணி பொக்கிஷ நிலவறையில் ஒளித்து வைத்திருந்து வெளியே அனுப்பினாள். உன்னிடம் ஓலை கொண்டு வரப் போகிறான் என்று அவளுக்குத் தெரியும். இலங்கையிலிருந்து அவன் திரும்பி வரும்போது அரிச்சந்திர நதிக்கரையில் பாழடைந்த பாண்டியன் அரண்மனையில் நள்ளிரவில் அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசினார்கள். அதற்குப் பிறகும் பழுவூர் முத்திரை மோதிரம் வந்தியத்தேவனிடம் இருக்கிறது. இதையெல்லாம் பற்றி நீ என்ன நினைக்கிறாய். அம்மா! உன் தூதனிடம் இன்னமும் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறாயா?"

குந்தவையின் உள்ளம் இப்போது உண்மையாகவே குழப்பத்தில் ஆழ்ந்தது.

(தொடரும்)

# தீரத்திலே, படை வீரத்திலே..!

அமரர் கல்கி

உலகத்தில் சாதாரணமான பொக்கிஷத்தைப் பாதுகாப்பதே கஷ்டமாக இருக்கிறது. திருடர்களும் தீவட்டிக் கொள்ளைக்காரர்களும் அதை லபக்கென்று லாவிக் கொண்டு போகாமல் இருப்பதற்காக போலீசும் இராணுவமும் தேவையாக இருக்கின்றன; கச்சேரிகளும் காராக்கிரகங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

சாதாரணமான பொக்கிஷங்களுக்கே அவ்வளவு ஆபத்து எனில், பொக்கிஷங்களுக்கெல்லாம் பொக்கிஷ மான மாமணியைப் பாதுகாப்பது அற்ப சொற்பமான காரியமா?

கண்ணினுமினிய வீர சுதந்திரமாகிய மாசிலா மணியையே குறிப்பிடுகிறோம்.

உடலையும் உயிரையும் பாதுகாப்பதற்காக மனிதர் பொருளைத் தியாகம் செய்வரேயல்லாது, பொருளைப் பாதுகாப்பதற்காக உடலையும் உயிரையும் தியாகம் செய்வோர் எவருமிலர்.



ஆனால் சுதந்திரத்தைப் பெறவோ அல்லது பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்கவோ, உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் தியாகம் செய்ய மனிதர் பின் வாங்குவதில்லை.

எனவே ஒரு தேசத்தின் சுதந்திரத்தைக் காட்டிலும் அத்தேச மக்களுக்கு அரும் பெரும் பொக்கிஷம் வேறெதுவுமேயில்லை என்றாகிறது.

சென்ற வாரத்தோடு எழுபத்து நாலு வயது நிரம்பியுள்ள சர்தார் வல்லபாய் பட்டேல், மேற்படி ஜெயந்தி வைபவத்தையொட்டி நடந்த கூட்டமொன்றில் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

"நமது தேசத்தில் கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரையிலும், போராடி நமது தேசத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்போம். நமது சுதந்திரத்தில் எவராவது தலையிடுவார்களாயின், அதனால் இந்தியாவே மறைவதாயினும், உலகமே நாசமாவதாயினும், அத்தகைய தலையீட்டைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம்" என்று சர்தார் பட்டேல் கர்ஜித்திருக்கிறார்.

எனவே, என்ன நேர்ந்தாலும் பெற்ற சுதந்திரத்தைக் கைநழுவ விடுவது கூடவே கூடாது.

நவீன உலகில் ஒரு தேசத்தின் சுதந்திரத்துக்கு எந்த வழியாக ஆபத்து வரும் என்பதைச் சொல்ல முடியாது.

தரைப் பாதையாக வரலாம்; திரைகடல் வழியாக வரலாம்; ஆகாய மார்க்கமாகவும் வரலாம்; ஏன், பாதாளத்தைப் பிளந்து கொண்டும் வரலாம்!

அந்த ஆபத்து எந்த வழியாக வந்தாலும் அதை எதிர்த்து நின்று வெற்றி பெற இந்தியா வலிமை பெற்றிருக்க வேண்டும்.

• • •

தரைப் போரில் இந்தியரின் வீரதீர பராக்கிரமங்கள் சரித்திரப்

பிரசித்தி வாய்ந்தவை.

மகா அலெக்ஸாண்டரின் மண்ணாசைக்கு முற்றுப்புள்ளி வைத்த இந்தியர்கள், அதற்கு முன்பும் பின்பும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் தங்களுடைய போர்த் திறமையைக் காட்டியிருக்கிறார்கள்.

அஞ்சா நெஞ்சமும் ஆச்சரியகரமான போர்த் திறமையும் உள்ள இந்திய சிப்பாய்களடங்கிய இராணுவம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கோட்டையின் அஸ்திவாரம் என்று லார்டு கர்ஸான் ஒரு சமயம் குறிப்பிட்டார்.

முதலாவது உலக மகா யுத்தத்தில் இந்தியாவின், இந்திய வீரர்களின் உதவி இராவிடில் பிரிட்டன் வெற்றி பெற்றிருக்க முடியாதென்று, அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜ் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்திலும் பிரிட்டிஷாரின் வெற்றிக்கு அடிகோலியவர்கள் இந்திய வீரர்களே யாவர்.

மத்தியத் தரைக்கடல் பிரதேசத்திலும் வட ஆப்பிரிக்காவிலும் பிரிட்டிஷார் தோல்வி மேல் தோல்வியடைந்து 'வெற்றிகரமாக'ப் பின்வாங்கி வந்தபோது, பிரிட்டிஷார் இழந்த இடங்களையெல்லாம் மீண்டும் கைப்பற்றிக் கொடுத்தவர்கள் இந்தியர்களே.

இந்தியாவின் பிரதம தளபதியாக இருந்த பீல்டு மார்ஷல் ஆர்ச்சிபால்டு வேவல் அவ்வமயம் மேற்படி உண்மையைப் பிரகடனம் செய்து இந்திய சிப்பாய்களைப் பெரிதும் பாராட்டினார்.

அவ்விஷயமாக லார்டு வேவல் கூறியதை அப்படியே இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறோம்:-

"1940 டிசம்பர் மாதத்தில் ஸீடி பரானியிலே இரண்டே டிவிஷன்களடங்கிய இந்தியத் துருப்புகள், பொறுக்கியெடுக்கப்பட்ட ஐந்து டிவிஷன்களடங்கிய இத்தாலியத் துருப்புகளை ஹதம் செய்து வெற்றி பெற்றார்கள். பிரிட்டிஷார் இழந்த பர்பரா, பிரிட்டிஷ் ஸோமாலிலந்து இவற்றை மீண்டும் கைப்பற்றியவர்கள் தென்னிந்தியத் துருப்புகள்தான். பிரிட்டிஷார் சிரியாவை ஆக்கிரமித்துக் கொள்ள இந்தியத் துருப்புகள்தான் பேருதவி புரிந்தனர். இவ்வாறாக மத்தியத் தரைக்கடல் பிரதேசங்களைக் காப்பாற்ற உதவி புரிந்த இந்தியாவுக்கு பிரிட்டன் சார்பில் வந்தனம் அளிக்கிறேன்."

சமீப காலம் வரையில் இந்தியாவின் பிரதம தளபதியாக இருந்த ஜெனரல் ஆக்கின்லெக்கும் இந்தியத் துருப்புகளின் சாகஸங்களை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்.

சென்ற மகா யுத்தத்தின்போது பசிபிக் மகா சமுத்திரத்திலிருந்து அட்லாண்டிக் மகா சமுத்திரம் வரையிலுள்ள பல இடங்களிலும் போர் நடந்தது. அவற்றில் இந்திய வீரர்கள் கலந்து கொள்ளாத முக்கியப் போர்முனை எதுவுமே இல்லை.

இயற்கை எழிலிலும் செயற்கை அழகிலும் ஈடு இல்லாத காஷ்மீரப் பிரதேசத்தையும், ஸ்ரீநகரப் பட்டணத்தையும் கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றி, ஸ்ரீநகருக்கு ஐந்து மைல்களுக்கு அருகில் வந்த கொள்ளைக் கூட்டத்தையும் அதற்குத் துணை புரிந்த பாகிஸ்தான் துருப்புகளையும் ஐம்பது மைல்களுக்கு அப்பால் விரட்டியடித்து வீரப்போர் புரிந்து வரும் இந்தியத் துருப்புகளின் தீரத்தை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

மற்றும் அதர்மத்தை நிலை நிறுத்தக் கடைசித் துளி இரத்தத்தையும் சிந்தப் போராடுவோம் என்று விறாப்பு பேசிய ரஸாக்கர்கள் வெறும் வெண்ணெய் வெட்டி சிப்பாய்கள் என்பதை நிரூபித்து ஹைதராபாத் போரில் ஐந்தே நாளில் வெற்றி கண்ட இந்தியத் துருப்புகளின் அற்புத பராக்கிரமத்தைக் கண்ணெதிரில் கண்டோம்.

இவ்வாறாக இந்திய சேனா வீரர்கள் பூமியில் அன்றும் இன்றும் போர்த் திறமையைக் காட்டி தங்களுடைய கீர்த்தியை நிலை நாட்டியிருக்கிறார்கள். ○

**(கல்கி, நவம்பர் 7, 1948)**



# காங்கிரசும் கண்ட்ரோலும்

**நா**ஸிக் நகரில் பிரம்மாண்டமான முன் ஏற்பாடுகளுடன் ஆரம்பமான 56-வது காங்கிரஸ் மகாசபை இரண்டே தினங்களில் அலறிப் புடைத்துக்கொண்டு நடந்து முடிந்து விட்டது! அவ்வளவுக்கு க்ஷேமந்தான் என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா? விஷயாலோசனைக் கமிட்டியில் முடிவான தீர்மானங்களை மளமளவென்று காங்கிரஸில் பிரேரேபித்தார்கள். சவுக்கினால் அடித்து ஜட்கா வண்டிக் குதிரையை விரட்டுவதுபோல் விரட்டினார்கள். தீர்மானங்கள் ஒரேயடியாக மிரண்டு போய், "இதோ நிறைவேறுகிறோம்; நிறைவேறி விட்டோம்!" என்று சரணாகதி பாடிக் கொண்டு நிறைவேறின.

காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானங்கள் எல்லாம் ஜவாஹர்லால்ஜியின் கருத்தின்படி தயாரிக்கப்பட்டவையாகும். அவை அவ்வளவு துரிதமாக நிறைவேறியதிலிருந்து ஒரு விஷயம் வெட்ட வெளிச்சமாயிற்று. அதாவது நாஸிக்கில் கூடிய மற்றக் காங்கிரஸ் தலைவர்களோ, காங்கிரஸ் பிரதிநிதிகளோ, வெளிப்படையாக ஜவாஹர்லாலுடன் விரோதித்துக் கொள்ளத் தயாராயில்லையென்பதேயாகும். காந்தி மகான் காங்கிரஸுக்குள் இருந்தாலும் காங்கிரஸுக்குப் புறம்பாக இருந்தாலும் தேச மக்களின் ஒப்பற்ற தலைவராக எப்படி விளங்கினாரோ, அப்படி இன்று ஜவாஹர்லால் விளங்குகிறார். அவரை ஏடாகூடமாக எதிர்த்துக் காங்கிரஸிலிருந்து அப்புறப்படுத்தி விட்டால், பிறகு காங்கிரஸின் பெயரைச் சொல்லிக் கொண்டு நாட்டில் தலைகாட்ட முடியாது. வேறு எந்த விதத்திலும் நாட்டில் செல்வாக்குப் பெறவும் முடியாது. ஆகையால் வரப் போகும் சட்டசபைகள், மந்திரிசபைகளைக் கைப்பற்றுவதற்கெல்லாம் ஜவாஹர்லாலின் செல்வாக்கு அவசியம் தேவை. அவர் என்ன வேணுமானாலும் தீர்மானங் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்ளட்டும்; திவ்யமாய் இரண்டு கைகளையும் தூக்குகிறோம். சட்டசபைகளைக் கைப்பற்றும் மகத்தான நோக்கத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார்! ஜவர்ஹர்லால் தீர்மானங்களுக்குக் கை தூக்குவதுதானா கஷ்டமான காரியம்...?

இப்படிப்பட்ட மனோபாவத்துடனேயே நாஸிக்கில் கூடிய காங்கிரஸ் பிரதிநிதிகள் பெரும்பாலோர் நடந்து கொண்டார்கள் என்பது ஒரு சம்பவத்திலிருந்து தெள்ளத் தெளிய வெளியாயிற்று.

"கண்ட்ரோல் முறை நாட்டின் நலத்துக்கு அவசியமானது" என்ற கருத்துக் கொண்ட ஒரு தீர்மானம் காங்கிரஸில் விவாதத்துக்கு வந்தது. அதைப் பற்றி யாரோ ஒரு சில அபூர்வப் பிரதிநிதிகள் ஆட்சேபத்தைக் கிளப்பினார்கள். இந்த ஒரு விஷயத்தைப் பற்றித்தான் காங்கிரஸில் அபிப்பிராய பேதம் என்பது தலைகாட்டியது. ஆட்சேபித்தவர்கள் வற்புறுத்தியபடியால் வோட்டு எடுக்கும்படியான அவசியமும் ஏற்பட்டு விட்டது. உடனே ஜவாஹர்லாலுக்கு ஆள் மேல் ஆள்விட்டு அழைத்து வந்தார்கள். அவர் வராவிட்டால் தீர்மானம் 'ஹோ கயா' ஆகிவிடும் என்று பயமாகி விட்டது. ஜவாஹரும் வந்தார். கண்ட்ரோலை ஆதரித்துப் பேசினார். வோட்டு எடுக்கப்பட்டது. சாதகமாக 190 பிரதிநிதிகளும் பாதகமாக 117 பிரதிநிதிகளும் வோட்டு அளித்தார்கள். தீர்மானம் நிறைவேறியது. காரியக் கமிட்டியின் மானம் பிழைத்தது. தேசத்தில் ஒரு தர்மசங்கடமான நிலைமை ஏற்படாமல் போயிற்று.

இதில் முக்கியமான விசேஷம் என்னவென்றால், இந்த முக்கியமான தீர்மானத்தின்பேரில் மொத்தம் வோட்டு செய்த காங்கிரஸ் பிரதிநிதிகள் 307 பேர்தான்! அப்போது அவ்வளவு பேர்தான் காங்கிரஸில் இருந்தார்கள். மற்றப் பிரதிநிதிகள் எல்லாரும் எங்கே போனார்கள்? ஏன் போனார்கள்? என்ன செய்யப் போனார்

கள்? பந்தலில் இருந்து தீர்மானத்துக்கு வோட்டு செய்வதைக் காட்டிலும் முக்கியமான வேலை அவர்களுக்கு என்ன இருக்கக் கூடும்? இதற்குத்தானா இவ்வளவு கஷ்டப்பட்டு, கிழே பஞ்சாயத்துத் தேர்தல் முதற்கொண்டு பிரம்மப் பிரயத்தனம் செய்து, பல முறைகளையும் கையாண்டு, காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆனார்கள்...? உண்மை என்னவென்பதை நேயர்கள் ஊகித்தறியலாம். காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குக் காங்கிரஸில் வரும் தீர்மானங்களைப் பற்றி யாதொரு கவலையும் இல்லை. அடுத்த சட்டசபைத் தேர்தலைப் பற்றித்தான் அவர்களுக்குக் கவலை! காங்கிரஸில் என்ன தீர்மானம் வந்தால் என்ன? அல்லது போனால்தான் என்ன?

கண்ட்ரோல் அவசியம் என்று ஜவாஹர்லால் சொல்லி விட்டார்; காங்கிரஸும் ஒப்புக்கொண்டது; நாமும் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஒப்புக் கொள்ளாவிட்டால் யார் விடுகிறார்கள்? ஆனாலும் ஒரே ஒரு விஷயத்தை இங்கே நாம் குறிப்பிட்டே தீர வேண்டும். "கண்ட்ரோல்கள் பொதுஜன க்ஷேமத்துக்கு அவசியம்" என்று நம் மாபெரும் தலைவர்களும் மந்திரிகளும் சொல்கிறார்கள். அப்படியிருக்கப் பொது ஜனங்கள் கண்ட்ரோல்களை ஏன் வெறுக்க வேண்டும்? தங்களுக்கு நன்மை எது என்பதைத் தெரிந்து கொள்ள நம் ஜனங்களுக்குச் சக்தி இல்லையா?

காரணம் இதுதான்; கண்ட்ரோல்களினால் ஏற்படும் நன்மைகள் சந்தேகத்துக்கு இடம். ஆனால் அவற்றினால் ஏற்படும் சங்கடங்கள் பிரத்யட்ச அனுபவம்.

ஏற்கெனவே பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அதிகாரவர்க்கத்தினர் செய்த அமுல்களைக் காட்டிலும் இன்றைய தினம் அதிகாரவர்க்கத்தின் அமுல்கள் அதிகக் கொடுமையாயிருக்கின்றன. அத்தகைய கொடுமை செய்யக்கூடிய அதிகாரங்களை உத்தியோக வர்க்கத்துக்குக் கண்ட்ரோல் விதிகள் கொடுத்திருக்கின்றன.

ஆதலின், பொது ஜனங்கள் தங்கள் காலையும், கையையும் கட்டி அதிகார வர்க்கத்திடம் தங்களைக் காங்கிரஸ் ஒப்புவித்து விட்டதாகவே எண்ணுகிறார்கள். முக்கியமாக, கிராமவாசிகள் இவ்விதம் எண்ணித் துயரப்படுகிறார்கள்.


எனவே, கனம் ஹரி கிருஷ்ண மேதாப் போன்றவர்கள் ''கண்ட்ரோல்களை நடத்துவதில் பொதுஜனங்கள் ஒத்துழைக்க வர வேண்டும்'' என்று வேண்டிக் கொள்வது அர்த்தமற்ற அதிகப் பிரசங்கமாகவே கிராமவாசிகளுக்குத் தோன்றுகிறது.

"ஐயா! புண்ணியவான்களே! எங்களைத்தான் காலையும் கையையும் கட்டி அதிகார வர்க்கத்திடம் ஒப்புவித்து விட்டீர்களே? பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு நடுங்கியதைக் காட்டிலும் இப்போது அதிகம் நடுங்கிச் சாகிறோமே! நாங்கள் ஒத்துழைப்பது வேறு கேடா?" என்று பாமர ஜனங்கள் கேட்கிறார்கள்.

இந்த மாதிரி ஜனங்கள் முறையிடுவது ஜவாஹர்லால்ஜி போன்ற மாபெருந் தலைவர்களின் காதில் விழுவதில்லை. நம்முடைய காங்கிரஸ் பிரதிநிதிகள் மக்களின் முறையீட்டைத் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். ஆனால் இதற்கெல்லாம் அவர்களுக்கு எங்கே அவகாசம் இருக்கிறது? எந்தத் தீர்மானம் எப்படிப் போனால் அவர்களுக்கு என்ன?

கண்ட்ரோல் முறைகள் பொதுஜன க்ஷேமத்துக்கு அவசியமானவை என்பதைப் பொதுமக்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமானால், ''பொது ஜனங்களே! ஒத்துழையுங்கள்!" என்று பல்லவி பாடுவதில் பயனில்லை. அதிகார வர்க்கத்தைப் பொதுஜனங்களுடன் ஒத்துழைக்கும்படி நமது தலைவர்களும் மந்திரிகளும் கேட்டுக் கொள்ள வேண்டும். கண்ட்ரோல்களின் பெயரால் அதிகாரிகள் மக்களை ஹிம்சைப் படுத்துவதை நிறுத்தச் செய்ய வேண்டும். அதிகார வர்க்கத்தினர் பழைய பிரிட்டிஷ் ஆட்சியின் வாசனைகளை மறந்து பொது மக்களின் ஊழியர்களாக நடந்து கொண்டால்தான், கண்ட்ரோல் முறையின் நன்மைகளைப் பொது ஜனங்கள் உணர முடியும். ●

**(கல்கி, அக்டோபர் 1, 1950)**



# சபலத்தை வெல்வோம். சாதனைகள் படைப்போம்.

இளமைக் காலம் சாதிப்பதற்கே. எதிர்கால கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள சரியான காலம் - இளமைக் காலம். நாளை நாம் எப்படியிருப்போம் என்று தீர்மானிப்பதும் இந்த இளமைக் காலம் தான். முக்கியமான இந்தப் பருவத்தை நாம் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டால் ஒளிமிக்க எதிர்காலத்தை உருவாக்கலாம். சாதனைகள் புரிய வேண்டிய இந்த பருவத்தில் சபலத்திற்கு சிறிது இடம் கொடுத்தாலும் அது ஆபத்தில் முடியும். சபலத்தை தவிர்ப்போம். சாதனைகள் படைப்போம். எய்ட்ஸைத் தடுப்போம்.

**இளைய சக்தி**
**இணையற்ற சக்தி**

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம்**

417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008. தொலைபேசி: 825 5261.


24 மணி நேர ஹாட்லைன்: 825 6882, 825 6864.

1999-தீண்டாமை ஒழிப்பு மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆண்டு

ஜூலை 21
முதல் 27 வரை


# நடக்குமென்பார், நடக்கும்!

## அக்னிசர்மா பக்கம்



**மேஷம்** : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

கவர்மென்ட்ல ஆக வேண்டிய காரியங்கள் ஏதும் பெண்டிங்ல இருந்த துன்னா, இப்ப ஓரளவுக்கு ஃபைல் மூவ் ஆகற சான்ஸ் இருக்கு. நிர்வாகத்துறை, கலைத்துறை, பத்திரிகை மற்றும் எழுத்துத் துறையினருக்கு முன்னேற்றம் தெரியும். டாக்டர்களுக்கு நல்ல பேர் கிடைக்கும். கெஸ்டுங்க வருகையால சந் தோஷம் பெருகும். கடிதங்கள் நல்ல சேதி களைக் கொண்டு வரும். கணவன் – மனைவிக் குள்ள கலகலப்போடு சலசலப்பும் இருக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் அசட்டையா இருந்துடாதீங்க.




**ரிஷபம்** : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

வார ஆரம்பத்தில் செலவுகள் கூடுதலா இருக்கும்னாலும் காரியங்களெல்லாம் மடமடன்னு நிறைவேறிடும். உத்தியோகஸ்தர் களுக்குச் சம்பள உயர்வுக்கு சான்ஸ் இருக்கு. பிசினஸ் லைன்ல இருக்கறவங்களுக்கும் முன் னேற்றம் உறுதி. சிலருக்குப் பயணத்தாலும் ஆதாயம் கிடைக்கும். ஏதாவது சொத்து பத்து வாங்கறதுக்கான சான்ஸ்ும் இருக்கு. எதிர்பா ராமல் சில உதவிகளும் கிடைக்கும். ஆனாலும் கொடுக்கல், வாங்கல், ஸ்பெகுலேஷன் விஷ யங்களில் எச்சரிக்கையா இல்லேன்னா உதைக் கும்!



**மிதுனம்** : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

பண விஷயம் தாராளமா இருக்கும். அபி விருத்தியும் ஏற்படும். சிலருக்கு அடிஷனல் வருமானங்கள் வர்றதுக்கான சான்ஸ்ும் இருக்கு. சிலர் சில சாதனைகளைச் செய்வதன் மூலம் மத்தவங்க பாராட்டைப் பெறுவாங்க. சரி, இனி மண்ணுதான்னு நீங்க மறந்து போன கடன் பாக்கிகள் கூட இந்த வாரம் வர்றதுக்கு சான்ஸ் இருக்கு. ஸ்பெகுலேஷன் விஷயத்திலும் அதிர்ஷ்டம் உங்க பக்கம்தான். ஆனாலும் புது ஆளுங்ககிட்ட உஷாரா பழகுங்க. வீண் செலவு களைத் தவிர்க்கப் பாருங்க. பயணத்தில் எச் சரிக்கையா இருங்க.




**கடகம்** : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

சமூகநலப் பணிகளில் ஆர்வம் காட்டறவங் களுக்குப் பாராட்டும் புகழும் தேடிக்கிட்டு வரும். கவர்மென்ட் சமாசாரங்களை நம்பிக் கிட்டிருக்கறவங்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சும். வியாபாரிகளுக்குச் சில தடைகள் ஏற்படலாம். கணவன் - மனைவிக்குள்ள விட்டுக் குடுக்கற பக்குவம் இல்லேன்னா சலசலப்புத் தான் மிஞ்சும். பொதுவாவே எல்லோரும் அலைச் சலைத் தவிர்க்கப் பாருங்க. பயணத்தில் எச் சரிக்கையா இருங்க. தந்தையின் ஹெல்த் விஷ யத்தில் கவனம் காட்டுங்க.



**சிம்மம்** : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


நல்லவங்களோட அன்பும் ஆதர வும் இருக்கறபோது என்னங்க கவலை? சகல சௌபாக்கியங்களும் திருப்திகரமாவே இருந்து வரும். நல்ல காரியங்களில் கலந்துக்கற சான்ஸ் கிடைக்கும். துணிச்சலான காரியங்களில் ஈடு பட்டு ஜெயிச்சுக்காட்ற வாய்ப்பும் சிலருக்குக் கிடைக்கும். ஃபாரின் டூர் அல்லது தொலை தூரப் பயணம் போற சான்ஸ்ும் இருக்கு. சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் இருக்கு. வியாபாரிகள் மட்டும் இந்த வாரம் அகலக் கால் வைக்காம இருக்கணும்.



**கன்னி** : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


சின்னச் சின்ன பிரச்னைகளும் சங்கடங்களும் வரத்தாங்க செய்யும். ஆனாலும் அதுகளைச் சமாளிக்கற துணிச்சலும் உங்க கிட்ட இருக்கேன்னு சந்தோஷப்படுங்க. எதுவா னாலும் ஜெயிக்கணும்னா கொஞ்சம் கஷ்டப் பட்டுத்தானே ஆகணும். அதைத்தான் இந்த வாரம் செய்யப் போறீங்க. உதவி செய்யறதுக் குத்தான் ஏராளமான பேர் இருக்காங்க ளேன்னு வீண் செலவுகள் எதையும் அனுமதிக் காதீங்க. பயணமும் இந்த வாரம் வேண்டாம். யார் கிட்டயும் வெளிப்படையாப் பேசிப் பழ கறதும் நல்லதில்ல. உங்க ஹெல்த் விஷயத்

திலும் அலட்சியம் காட்டிடாதீங்க.




**துலாம் :** *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

செய்யற காரியம் எதுவானாலும் இனிதே நிறைவேறும். கூடவே உங்க புத்தி சாலித்தனத்துக்குப் பாராட்டும் கிடைக்கும். முக்கியஸ்தர்கள், நல்லவர்கள் தொடர்பாலும் அனுகூலம் கிடைக்கும். மகான்களுடைய ஆசி களும் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடப்பதற்கான சூழ்நிலைகள் உருவாகும். வியாபாரிகளுக்குத் தங்கள் வியாபாரம் பெருகும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பு களும் இருக்கும். புதியவர்கள் அறிமுகமும் உதவிகரமா இருக்கும். தாயின் தேக ஆரோக் கியத்தில் மட்டும் அலட்சியம் காட்டிடாதீங்க.



**விருச்சிகம் :** *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

வழக்கத்தைவிட அதிகமா உழைக்க வேண்டி இருக்கேன்னு அலுத்துக்க வேண்டாம். அதற்கேற்ற ஊதியமும் உறுதியாக் கிடைக்கும். எதிரிகள் யாரும் உங்களுக்கிருந்தா, பாகிஸ்தான் ராணுவத்தினர் மாதிரி சத்தம் போடாம ஜகா வாங்கிடுவாங்க. பிறருக்கு இந்த வாரம் நிறைய உதவுவீங்க. அதனால உங்க ளுக்கு மனசுல சந்தோஷம் பெருகும். ஸ்பெகு லேஷன் வேண்டாம். பணவிஷயம் சாதாரண மாத்தான் இருக்கும். உங்க ஆரோக்கியத்தில் மட்டுமல்ல; குழந்தைகள் ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டுங்க.



**தனுசு :** *(மூலம், பூராடம், உத்தி ராடம் முதல் பாதம் வரை)*

மனசுல ஒரு தெளிவும் மகிழ்ச்சி யும் இந்த வாரம் ஏற்படும். வி.ஐ.பி களுடைய தொடர்பு பல நன்மைகளுக்கு அடி கோலும். வக்கீல்கள், ஆசிரியர்கள், மேடைப் பேச்சாளர்களுக்கு வரவேற்பும் புகழும் கூடும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கறதுக்கு நிறைய சான்ஸ் இருக்கு. வியாபாரிகளுக்கு ஆதாயம் உறுதி. கலை மற்றும் எழுத்துத் துறையினருக்கு பாராட்டுகள் கிடைக்கும். சிலருக்குப் புதிய பொருள்கள் வாங்கற யோகம் இருக்கு. எல்லோருமே பயணத்தில் எச்சரிக்கையா இருக்க வேண்டியது மட்டும் அவசியம்.




**மகரம் :** *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்கள் செயல்களில் சுறுசுறுப் பும் விறுவிறுப்பும் காண்பீர்கள். கவர்மெண்ட் சமாசாரங்களில் கூட உங்களுக்கு அனுகூலமே கிடைக்கும்னா மத்த விஷயங்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா என்ன? போட்டி, பந்தயம், கோர்ட், கேஸ் எதுவானாலும் வெற்றி உங்க பக்கம்தான். வீடு, வாகன விஷயங்களும் ஆதாயமே தரும். பிறர் மெச்சும்படியானதொரு காரியத்தையும் இந்த வாரம் செய்வீங்க. ஆனா லும் புது ஆளுங்ககிட்ட உஷாரா இருங்க. வியா பாரிகள் புது முதலீடு ஏதும் செய்யாம இருக் கறது நல்லது.




**கும்பம் :** *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

வியாபாரிகளுக்கு இதுவொரு அருமையான வாரம். கடும் உழைப்பாளி களுக்கு முழுப் பலனும் கிடைக்கும். அதோடு, இதுவரைக்கும் பின்னால இருந்தவங்க இப்போ முன்னணிக்கு வந்து ஜொலிப்பாங்க. ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரிகளுக்கு இது ஓஹோ வாரம்! ஆனாலும் ஸ்பெகுலேஷன், கொடுக்கல், வாங்கலில் உஷாரா இருக்கணும். உத்தியோகஸ் தர்கள் வேலையில் கவனமா இல்லேன்னா மேலதிகாரிகளோட அதிருப்திக்கு ஆளாகணும். பெண்களுக்கும் இது சுமாரான வாரம்தான்.



**மீனம் :** *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*


வழக்கு கிழக்குன்னு ஏதும் இருந்தா ஓர் அதிரடி திருப்பத்தை எதிர்பார்க்கலாம். உங்கள் பேச்சுத் திறமையும் சாமர்த்தியமும் பளிச்சினு வெளிப்படும் வாரம் இது. பொருளாதாரம், பண விஷயங்களில் நல்ல அபிவிருத்தி தெரியும். கடிதங்கள் நல்ல சேதிகளைத் தாங்கி வரும். புதியவர்களின் அறி முகத்தால் ஆதாயம் கிடைக்கும். விளையாட்டு வீரர்களும் பெண்களும் கொஞ்சம் எச்சரிக் கையா இல்லேன்னா சங்கடங்கள் வரலாம். பயணத்தைத் தவிர்ப் பதே நல்லது. ●



மீனராசிக்காரரான பிரபுதேவாவுக்கு இந்த வாரம், பொருளாதார அபிவிருத்தி பிரமாதமா இருக்கும்!

# ஒரு காதல் டைரி

20



அந்தக் கடிதம் இது:

மே காட் பிளஸ் யூ மை டியரஸ்ட்!

நேற்று நான் ஒரு கனவு கண்டேன். நான் உங்களுக்குத் தந்த பேனாவை எனக்குப் பிடிக்காத யாருக்கோ தாங்கள் கொடுத்ததாக.

என் பேனா எங்கே? கைவசம் இல்லையா?

உங்களுக்குத் தங்க நகைகள் அணியும் ஆர்வம் உண்டா? நம் பெயர்களின் முதல் எழுத்துக்கள் B, D (என் றால் மற்றவர்களுக்குப் புரியாத இரண்டு எழுத்துக்கள்) பதித்த ஒரு மோதிரம் நான் தரட்டுமா?

மரணம் வரை அதைப் பாதுகாப்பதாக உறுதி தந்தால் இரண்டு வாரத்திற்குள் தயார் செய்வேன். ஏற்றுக் கொள்வீர்களா?

நான் ஒரு சிறிய பர்ஸ் வாங்கி இருக்கிறேன். எப்படி அதைத் தருவது?

புதிய பேனா வரவில்லை. நெருக்கடி இருந்தால் சொந்தப் பேனாவை உடனே அனுப்புவதாக அண்ணன் எழுதி இருக்கிறார். இல்லையெனில் புதியது வாங்கி அனுப்பக் கொஞ்ச காலம் ஆகுமாம். 'பெர்மிட்'டுக்கு விண்ணப்பித்து இருக்கிறாராம். அதுவரை பொறுத்திருக்க வேண்டுமாம்.

உபயோகித்த பழைய பேனா உடனடியாகவா? கொஞ்சம் கழித்துப் புதியதா?

'பிளாக்பேர்ட்' பேனாவைப் பாதுகாத்து வைக்கவும். யாருக்கும் கொடுக்காதீர்கள். நெருங்கிய நண்பர்களுக்குக் கூட. ஒருக்காலும் அதைக் கை நழுவ விடாதீர்கள்.

உண்மையைச் சொல்லுங்கள். கொஞ்ச நாட்கள் பயன்படுத்துவதற்கு என்றாவது, யாருக்கேனும் கொடுத்தீர்களா? கூடாது.

"உத்தரணம்" பத்திரிகை ஆசிரியர் பணிக்குச் சம்பளம் நூறு ரூபாய்க்குக் குறைவு என்றால் ஏற்க வேண்டாம்.

அந்தத் தொகையை நான் 1946 ஜூன் மாதம் முதல் மாதா மாதம் அனுப்பி வைக்கிறேன். நான் சாகாமல், நோய்வாய்ப்படாமலும் இருந்தால் இது ஊர்ஜிதம். அந்த வேலை வேண்டாம்.

மீண்டும் கேட்கட்டுமா?

தாங்கள் என்னை உண்மையாக நேசிக்கிறீர்களா? நான் சந்தேகப்படுகிறேன். என்னை நேசித்தாலும் சரி நேசிக்காவிட்டாலும் சரி, தாங்களே என் பிரியமானவர்.

## வைக்கம் முகம்மது பஷீர்



விதியின் விசித்திரத்தால் நான் முதலில் நேசித்த மனிதர் தாங்கள்தான். தங்களை எனக்கு சொந்தமாகத் தரவேண்டும்.

என் சாதியிலும் மதத்திலும் உள்ள எத்தனையோ பேரிடம் நான் பழகி இருக்கிறேன். பேசி இருக்கிறேன்.

எத்தனையோ முறை என் வீட்டினர் என்னைத் திருமணம் செய்து கொள்ள நிர்ப்பந்தித்து இருக்கிறார்கள். ஒதுக்கித் தள்ளி விட்டேன்.

முடிவில் ஒரு முஸ்லீமை நேசிப்பதற்கு! ஒருவரது எழுத்தின் மூலம் அவரை நேசிக்கத் தொடங்குக! இதுதான் விதி. தாங்கள் குடித்தாலும் சரி, என்னை வஞ்சித்தாலும் சரி. என் பிரிய முன்னவரே, நான் தங்களை நேசிக்கிறேன். இறுதி மூச்சு உள்ளவரைக்கும் நேசித்துக் கொண்டிருப்பேன்.

'கோ-எஜுகேஷன்' பற்றிய சொற்பொழிவு எழுதித் தந்ததில் இருந்துதானே நாம் பரிச்சயமானது? என் சொற்பொழிவுக் கலை பற்றி எனக்குச் சுய மதிப்பு உண்டு.

எனினும் தங்களிடம் எழுதி வாங்க முயன்றது ஒரு நட்பை ஏற்படுத்திக் கொள்ளத்தான்! எனினும் நான் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. எனினும் அதைத் தங்களை எழுத வைத்தேன்.

என் முன்னால் இருக்கிற சமூகத்தின் மதில் சுவர்களை என்னால் பார்க்க முடியும்.

நான் பற்றி எரிந்து கொண்டிருக்கிறேன். பெண் இக்கற்றவள்தான். அவளுக்கு உதவ யாருமில்லை. எனினும் ஓர் ஆணோடு அவளுக்கு நேசம் தோன்றினால் சாதியும் மதமும் ஒன்றும் பார்க்காமல் அவள் இதயத்தைத் தருகிறாள்.

இரவும் பகலும் நான் தங்களைப் பற்றியே சிந்திக்கிறேன். நான் தங்கள் மார்பில் சோர்ந்து முகம் சாய்த்து அழும்போது என்னைத் தேற்ற மாட்டீர்களா?

அங்கே அங்கே நிறுத்த வேண்டி வரும் என்பதுதான் என் பயம். என் அன்பே, நான் செத்துக் கொண்டிருக்கிறேன்.

என் இதயமே, நான் இல்லாத ஒரு நிலையைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

என் அம்மா.

என் அம்மாவை துக்கப் படுத்த என்னால் இயலாது. அம்மாவின் வேதனைக் கதையை

**தமிழில் : வையவன்**

நான் சொல்லி இருக்கிறேனே!

என் காதல் காரணமாக ஏற்கெனவே துன்பம் அனுபவிக்கின்ற அம்மாவை மேலும் துக்கமூட்ட என்னால் இயலாது. வேதனையூட்டவே பிறந்தவள் நான்.

என் கன்னிமையை இழந்து விடாமலேயே எனக்கு ஓர் ஆவல் உண்டு. வாழ்வில் ஒரு முறை தங்கள் மார்பில் தலை சாய்த்து அழ வேண்டும்.

ஈசுவரன் அதற்கு வாய்ப்புத் தரட்டும். ஏப்ரல் பதினைந்தில் பரீட்சை முடிந்தால் அதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று தோன்றுகிறது. அதற்கு என்னை அனுமதிப்பீர்களா?

பஷீர், தெய்வத்தை நினைத்துக் கொண்டு, ஒரு திருமணம் செய்து கொள்ளுங்கள். தங்கள் உறக்கம் வராத தொல்லை இரவுகளில் அருகே ஒரு சிநேகிதியாக நிற்க நான் எப்படித் துடிக்கிறேன் தெரியுமா?

எனக்கு அது இயலாதே!

தாங்கள் திருமணம் செய்து கொண்ட பின் என்னை நேசிக்கலாம். நேசிக்க வேண்டும். என்னை வெறுக்காதீர்கள். நேசியுங்கள். என்னை நேசியுங்கள்.

மனைவி உள்ளபோதும் என்னை நேசிக்கலாம் அல்லவா? இதயம் ஒரு பெரிய சாம்ராஜ்யம் அல்லவா? அதில் இரண்டாவது இருப்பிடத்தையாவது எனக்கு ஒதுக்கி வையுங்கள்.



என் மனசில் ஒரு பெரிய போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. என்னைத் தவிர யாரையேனும் தாங்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள். என் ஸ்தானம்....?

ஒரு கடிதத்தில் நீங்கள் எழுதி இருந்தீர்களே (வார்த்தைகள் சரியாக நினைவு வரவில்லை. கடிதங்களை எல்லாம் நான் நெருப்பில் போட்டுக் கொளுத்திவிட்டேன். பாதுகாத்து வைக்க எனக்குத் தைரியம் இல்லை).

"என் எல்லா ஆசைகளையும் ஒடுக்கி நான் உன்னை நேசிப்பேன்" என்று.

அந்த வாக்குறுதியைக் காப்பாற்றவும். உங்கள் காதலியாக, உங்கள் பிரியமானவளாக என்றும் என்னைக் கருத வேண்டும்.

இதயத்தில் வைத்துத்தான் நாம் ஒன்ற முடியும் என்பதே சரி. அதை மட்டும் வைத்து திருப்திப்பட வேண்டும். ஒரு பெண்ணுக்கு இதை மட்டும் வைத்துத் திருப்திப்பட முடியும். ஆனால் ஓர் ஆணால் முடியாது.

அதனால் தான் உங்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுகிறேன்.

சிநேகம் என்பது தியாகம்தான். அதனால் சுயநலமற்ற என்னை நேசியுங்கள். இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது ஆத்திரப்பட்டு அன்று செய்தது போலச் செய்துவிட வேண்டாம்.

என் இதயத்தில் காயம் ஏற்படுத்தாதீர்கள். தாங்கள் ஓர் ஆண்மகன். சுயக் கட்டுப்பாடு கடைப்பிடியுங்கள். என் இதயத்தைப் புண்படுத்தி விடாதீர்கள்.

ஏதாவது தேவைப்பட்டால் எனக்குத் தெரிவியுங்கள். என்னால் உதவ முடியும். குறிப்பாக ஜூன் மாதம் முதல்.

என் கடிதத்தை ஏ.கே.டி.கே.எம். நம்பூதிரிப்பாட்டுக்கு நீங்கள் காண்பித்தது பெரிய குரூரச் செயல். அது செய்யத் தகாதது.

என் எல்லாக் கடிதங்களையும் திருப்பித் தந்து விடுங்கள். தங்கள் நண்பர்கள் எல்லாம் அதைப் பார்ப்பார்கள். வாசிப்பார்கள். அது வேண்டாம்.

என்னை நினைத்துக் கொள்ள பேனா தந்திருக்கிறேனே! இனிமேல் மோதிரம் தருவேன். நான் எல்லாவற்றையும் தருவேன். என் உடலைத் தவிர.

இது உட்பட எல்லாக் கடிதங்களையும் திருப்பித் தர வேண்டும். வேண்டுகோள்தான். நான் கொஞ்சம் டவல்கள் அனுப்பி வைக்கட்டுமா? ஆத்திரப்பட்டு பேனாவையும் மற்றவற்றையும் திருப்பித் தந்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன்.

தயவு செய்து எனக்கு ஒன்றும் தர வேண்டாம். நான் ஒரு பெண். அதனால் கையில் காணும் ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கம் தர வேண்டி வரும்.

ஜூன் மாதத்திற்குப் பிறகு என்றால் தருகிற எதையும் ஏற்க முடியும்.

அண்ணனின் பதில் இன்னும் வரவில்லை. அது என்னவாக இருக்குமென்று ஏறக்குறைய என்னால் ஊகிக்க முடியும். அது கிடைத்தால் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

எல்லாவற்றையும் உதறி எறிந்து விட நான் தயார். ஆனால் ஈஸ்வரா, என் தாய்! நீங்கள் என்னை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றதற்குப் பின்னால் நீங்கள் வருந்த நேரிடும். நான் நிறைய கெட்ட குணங்கள் உள்ள பெண்.

செல்வச் செழிப்பும் சௌகரியங்களும் உள்ள சூழ்நிலையில் செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டதன் பலனாக விளைந்த கெட்ட குணங்கள்.

பல சமயங்களில் எனக்குக் கட்டுப்பாடு இல்லை. அற்ப விஷயங்களுக்கு எல்லாம் நான் அழுவேன். அப்போது என்னைத் தவறாகப் புரிந்து கொண்டால்?

வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சொந்த பந்தங்களையும் எல்லாம் அலட்சியப்படுத்தி விட்டு உடன் வரும்போது அப்படி நேர்ந்தால்?

எனக்குக் கொஞ்சம் அதிகமாகவே சுதந்தர உணர்வு உண்டு.

ஊரிலே வேலை செய்ய நான் விரும்பவில்லை. நூறு ரூபாய்க்குக் கீழே சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்ய மாட்டேன்.

அது மட்டுமின்றி என் உடல் நிலையும் அவ்வளவு ஆரோக்கியமானது அல்ல. நான் தங்களுக்கு ஒரு பாரமாய் விடுவேனே! அப்படி ஒன்று நேர வாய்ப்பில்லை.

எனினும் அதை நன்கு சிந்தித்து பதில் எழுதுங்கள்.

கேரளத்தை விட்டுப் போக சம்மதம் தானா? வட இந்தியாவிற்குப் போகலாமா?

எல்லாக் கடிதங்களையும் உடனே எனக்குத் திருப்பித் தாருங்கள். காலையில் கிடைத்தால் போதும். கல்லூரிக்கு அனுப்பி விடாதீர்கள்.

விடுமுறைக்காலம் முழுவதும் நான் தங்களை எதிர்பார்த்தேன். மலையாளத்தில் நான்கு முறை கடிதம் எழுதத் தொடங்கினேன். ஆங்கிலத்தில் மேலும் சற்று எளிமையாக விஷயங்களைச் சுருக்கிச் சொல்ல முடிகிறது.

இது மூன்றாவது முயற்சி. இனிமேல் நான் ஆங்கிலத்தில் எழுத மாட்டேன்.

அடுத்த முறை நான் கடிதம் எழுதுவது ஒரு சகோதரியின் ஸ்தானத்தில். என் பஷீர், என் எல்லாமானவரே, என்னை நேசியுங்கள். என்றும் தங்கள் தேவியை, தங்கள் தங்கத்தை நேசியுங்கள். முடிக்கிறேன்.

என் ரத்தத்தில் எழுதுகிறேன்.

ஐ லவ் யூ


ஆத்மாவின் அடித்தட்டில் நின்று மேலெழுவதுதான் என் நேசம்.

ஐ லவ் யூ, லவ் மீ வித் எ நம்பர் ஆஃப் கிஸ்ஸஸ்.

டியரஸ்ட் பஷீர்

யுவர் டியரஸ்ட் தேவி

(தொடரும்)





# காதலர் தினம்

தொன்றுதொட்டுத் தமிழ்ச் சினிமாவை வாழவைத்து வரும் காதலுக்கு ஒரு 'www டச்' கொடுத்து நவீனப்படுத்தியிருக்கிறார் இயக்குனர் கதிர். பார்க்காமலே, சொல்லாமலே, ஃபோனிலே... மாதிரி, இதில் ஈ-மெயிலிலே காதல். புராதனமான கதை. இசையும் ஒளிப்பதிவும் செய்யும் ஜாலத்தால் புதுசு போலக் காட்சியளிக்கிறது பழைய கதை.

நாயகன் குணால் ஓர் ஏழை. (அதானே மரபு!). எம்பிஏ படிக்கும் ஆசையில், கிராமத்தை விட்டு மும்பை வந்து, நம்பர் ஒன் கல்லூரியான ராமச்சந்திராவில் விண்ணப்பிக்கிறார். கல்லூரி நிறுவனரான நாசர் (வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர் – இதற்கு ஒரு ஃபிளாஷ் பேக்) குணாலுக்கு ஆதரவளித்து உதவுகிறார். நாசரின் மகள் என்று தெரியாமலேயே, சோனாலி பிந்த்ரேயைக் காதலிக்கிறார் குணால். சோனாலியும் பதிலுக்குக் காதலிக்கிறார். ஒரு காதலர் தினத்தன்று, காதலைத் தெரிவிக்கப் போன இடத்தில், நாசரின் மகள்தான் சோனாலி என்ற உண்மை தெரியவர, காதலை வித்ட்ரா பண்ணிக் கொள்கிறார் குணால்.

அப்புறமென்ன? பணக்கார மாப்பிள்ளைக்கும், சோனாலிக்கும் திருமணம் நிச்சயமாகிறது. 'உண்மைக் காதலை' உணர்ந்த நாசர் இருவரையும் சேர்த்து வைப்பதற்குள், அவசரப்பட்டு (வழக்கம்போல்) விஷம் சாப்பிட்டு விடுகிறார் சோனாலி. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சோனாலி பிழைத்தாரா, செத்தாரா என்று தெரியாமலேயே முடிகிறது படம்!

அழகழகான வண்ணப் புகைப்படங்களை ஒன்றாக அடுக்கி, ஓட விட்டது போன்ற ஒளிப்பதிவு. பாடல் காட்சிகளில், கண் திறக்காத குழந்தை ஆடுவது, தங்கப் பறவைகள் கூட்டமாய்ப் பறப்பது, இன்டர்நெட்டில் தவழ்ந்து வரும் சோனாலியின் புகைப்படம் என கிராஃபிக்ஸ் மற்றும் ஸ்பெஷல் எபெக்ட்ஸ்கள் சேர்ந்து கொள்ள, ஒளிப்பதிவில் விளையாடியிருக்கிறார் பி.சி. ஸ்ரீராம்.

ஏ.ஆர். ரஹ்மான் இசையில் எல்லாப் பாடல்களும் சூப்பர் ரகம். ஒவ்வொரு காட்சிக்கும் பொருத்தமான, பிரமாதமான பின்னணி இசை.

அமைதியான அழுத்தமான நடிப்பு நாசருக்கு. குணால் ஒரு நல்ல அறிமுகம். கண்களாலேயே நடித்திருக்கிறார் சோனாலி.

நகைச்சுவைக்காக என்றாலும் கூட, ஒரு நம்பர் ஒன் கல்லூரியில், கவுண்டமணி மாதிரியான அடாவடி புரொபஸர்கள் கூடவா இருப்பார்கள்? ரவுசு தாங்கலடாங்கப்பா!

— கே.பி.எஸ்.

அடுத்த இதழ்

# ஆண்டு மலர்

# இரண்டு புத்தகங்கள்!

ஊழலும் தேர்தலும்
தேசியப் பிரச்னை - உன்
கண்களுக்கே என்
கவிதை அர்ச்சனை.

- குரோம்பேட்டை கவிராயர்



- **கவிதை ஸ்பெஷல்!**
  வாசகர்கள் + வித்தகர்களின் கவிதை உற்சவம்!

- **மறுபிறவி, தேர்தல் பிளாட்ஃபார்ம்**
  - புதிய பகுதிகள்

- **வாசகர்களைக் குதூகலிக்கச் செய்யும் எளிய போட்டி!**

- **அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவு + முதல் பரிசுக் கதை.**

<u>இது மட்டுமா?</u>

**சிறு தொழில் தொடங்கலாம், வாங்க!**
**உபயோகமான சிறப்பு இணைப்புப் பகுதி**




## ஸ்ரீவில்லிபுத்தூர்

# அதிசயங்கள்!

ஆண்டாள் திருத்தலமான ஸ்ரீவில்லிபுத்தூரில் 125 ஆண்டுகளுக்கு முன்னால் இன்னொரு அதிசயம் நிகழ்ந்தது. பிரமுகர்கள் ஒன்று கூடி தங்கள் ஊருக்கு ஒரு நூலகம் தேவை என்று தீர்மானித்தார்கள்! சாலை வேண்டும், பூங்கா வேண்டும் என்றெல்லாம் யோசிக்காமல் 'நூலகம் தேவை' என்று முடிவு செய்ததே ஓர் ஆச்சர்யம்தானே! அதை விடப் பெரிய அதிசயம், இதற்காக அரசாங்கத்தை நாடாமல் ஊர் மக்களிடமே அன்பளிப்புகளைத் திரட்டினார்கள்! மக்கள் காட்டிய ஆதரவோ, நூலகத்தைத் தொடங்குவதற்கு மட்டுமின்றி அதன் பராமரிப்புக்கும் வகை செய்யும் அளவில் அமைந்திருந்தது! ஊரின் மையப் பகுதியில் சில கடைகளைக் கட்டி வாடகைக்கு விட்டு, அந்த வருமானத்தைக் கொண்டு நூலகத்தை நிரந்தரமாகப் பராமரித்து வர திட்டமிட்டு அதில் வெற்றியும் பெற்றார்கள்! ஆச்சர்யங்கள் இத்துடன் முடிந்து விடவில்லை. அந்த நாளில் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் ஒரு வெள்ளைக்கார துரை. ஆனபோதிலும் அவர் ஆச்சர்யப்படத்தக்க முறையில் மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டிருந்தார். பென்னிங்டன் என்ற அவருடைய பெயரே நூலகத்தின் பெயரானது!

இப்படி பல விதங்களிலும் மூக்கின்மேல் விரலை வைக்கச் செய்யும் பென்னிங்டன் நூலகம், சமீபகாலமாக மேலும் ஒரு அதிசயமான காரியத்தைச் செய்து வருகிறது. டீவி ஆக்கிரமிப்பால் மக்களுடைய படிக்கும் பழக்கம் குறைந்து வருவதை உணர்ந்து, இதற்கு மாற்றாக, பிரபல எழுத்தாளர்களை நூலகத்துக்குத் தருவித்து, நேருக்கு நேர் நிகழ்ச்சிகளை நடத்தி, அதன்மூலம் புத்தகம் படிக்கும் ஆர்வத்தை வளர்த்து வருகிறது. இதற்கு மிகவும் வசதியாக நூலகத்திலேயே அளவான, அருமையான அரங்கம் ஒன்றும் அமைந்திருப்பது மேலும் வியப்பளிக்கும் உண்மை.

பென்னிங்டன் நூலகம் அண்மையில் அமரர் கல்கி அவர்களின் நூற்றாண்டையும் கொண்டாடி மகிழ்ந்தது. நேருக்கு நேர் நிகழ்ச்சிக்கு அமரர் கல்கி அவர்களை அழைக்க முடியாதாகையால் அதற்கு அடுத்தபடியாக என்ன செய்யலாம் என்று யோசித்து, அவரது மகனாகிய என்னை அழைத்து தகப்பனாரைப் பற்றி பேசச் சொன்னார்கள். இதற்காக, எனக்கு அவர்கள் 45 நிமிஷம் ஒதுக்கிக் கொடுத்தபோது நான் ஆச்சர்யத்தில் திக்குமுக்காடிப் போனேன்! காரணம், அமரர் கல்கி நூற்றாண்டினையொட்டி நடைபெறும் பல நிகழ்ச்சிகளில் எனக்கு நிறைவுரை அல்லது ஏற்புரை வழங்கத்தான் அழைப்பு வரும். அதுவும் கடைசியாக பேசச் சொல்லி, பத்து நிமிஷம் ஒதுக்கி, பிறகு நேரமாகிவிட்டது என்று அதில் ஐந்து நிமிஷம் குறைத்து விடுவார்கள். இங்கே 45 நிமிஷங்கள் கிடைத்த உற்சாகத்தில் வானவில்லின் வர்ணங்களாக ஜொலிக்கும் கல்கி அவர்களுடைய பல்துறை சாதனைகளையும் குணநலன்களையும் விரிவாக எடுத்துரைத்தேன். பேசுகிறவருக்கு ஒரு வாய் சோடா கூட கேட்கத் தோன்றாமல், கேட்பவர்களில் ஒருவர் கூட கைக் கடிகாரத்தைப் பார்த்து நெளியாமல் 45 நிமிஷம்

ஒருவரைப் பற்றி பேசக் கூடுமானால் அது அமரர் கல்கியாகத்தான் இருக்க முடியும். அப்படிப்பட்ட ஆச்சர்யமான மனிதர் தான் கல்கி.

ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவ மனையில் தலைமை மருத்துவ அதிகாரி திரு க. சிதம்பரநாதன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது. அந்தப் பெயரைக் கேட்டதுமே கல்கி அவர்களைப் பண்படுத்திய சக்திகளில் ஒன்றான ரசிகமணியின் நினைவு வந்தது. அந்தச் சிதம்பரநாதனுக்கும் இந்த சிதம்பரநாதனுக்கும் உறவு முறை உண்டு என்று அறிந்தபோது வியப்பு பன்மடங்காயிற்று. மிக அளவான ஆனால் அர்த்தமுடைய தலைமையுரைக்குப் பிறகு பேராசிரியர் வளன்அரசு அவர்களுடைய பேருரை. "திருக்குறள் ஞாயிறு" ஆகிய அவர், தொல்காப்பியத்தில் தொடங்கி வெகு சீக்கிரமே கல்கியின் காப்பியங்களுக்கு வந்து சேர்ந்து விட்டார்! அதென்னவோ, பொதுவாகவே பேராசிரியர்களுக்கு இலக்கியத்தை எடைபோட வேணுமென்றால் தொல்காப்பியத்தில் தொடங்கினால்தான் திருப்தி! பழந்தமிழ் இலக்கியங்களைப் பயின்று நவீன இலக்கியத்துக்கு வந்து சேர்ந்தவர்தானே கல்கி! அதனால் பேராசிரியர் கணிப்பில் கல்கி உன்னதமான ஒரு நிலைக்கு உயர்ந்ததில் வியப்பில்லை.

விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்த பென்னிங்டன் கமிட்டி ஒரு 'டீம் ஸ்பிரிட்'டுடன் செயல்பட்டனர். அழைப்பிதழில் கூட தனி நபர்களின் பெயர்கள் அச்சாகவில்லை! எனவே நாமும் அந்தக் குழுவை வாழ்த்தி விடலாம்- ஒட்டு மொத்தமாக.

ரயில் ஏறிப் புறப்பட்டபோது அதன் தாளகதிக்கு இசைவாக ஸ்ரீவில்லிபுத்தூர் கவிதா தாசனின் கவிதை உள்ளத்தில் உலாவந்தது:

காற்றோடு கதிரோன் வானம்
கடலலை நிலவு விண்மீன்
ஊற்றெழும் கவிதை இன்ப
உயர்பெரும் கலைகள் என்றும்
போற்றுமோர் தமிழும் நல்ல
புகழுடன் வைக்கும்! தோன்றும்
நூற்றாண்டெல்லாம் கல்கி
நவலரும் பெயரைக் காக்கும்!

— கி. ராஜேந்திரன்

# பலே! பலே!

"அனுமனால் அத்தனை தடைகளையும் மீறி அசோக வனத்தில் சீதையை எப்படிக் கண்டுபிடிக்க முடிந்தது? 'நினைவாற்றல், நுண்ணறிவு, விடாமுயற்சி, மிகச் சரியான செயல் திறன்'. இவை நான்கும் அனுமனிடம் பரிபூரணமாக இருந்ததினால்தான் அவனால் அது முடிந்ததாகச் சுந்தர காண்டம் சொல்கிறது. இந்த நான்கு கல்யாண குணங்களும் அனுமனை சிரஞ்சீவியாக்கின. இதே நான்கு குணங்களும் கொண்டவர் கல்கி. அதனால்தான் தமிழ் எழுத்துலக சிரஞ்சீவியாக என்றென்றும் நிலைத்து நிற்க முடிகிறது அவரால்!"

—இந்தப் பேச்சைத் தமிழகத்தில் கேட்டிருந்தால் வியப்பில்லைதான். ஏனெனில், கல்கி அவர்களின் நூற்றாண்டு விழாவினைத் தமிழகமெங்கும் கொண்டாடுகிறார்கள். ஆனால் ஆந்திர மாநிலத்தில், வடகோடியில் இருக்கும் விசாகப்பட்டிணத்தில்— அதிலும் தெலுங்கு இலக்கிய சபையினால் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு, தெலுங்கு இலக்கியவாதிகளுக்காகவும், தெலுங்கு மக்களுக்காகவும் தெலுங்கு மொழியினிலேயே கல்கி அவர்களைப் பற்றி ஒரு தமிழர் ➔

• பேசுகிறார் சம்பத்



## ஒரே கேள்வி!

**சமீபத்தில் நீங்கள் மிகவும் ரசித்த பாடல் எது?**

எஸ்.ஏ. ராஜ்குமார் இசையில் 'கண்ணுபடப் போகுதய்யா' என்ற படத்தில், 'ஆனந்தம் ஆனந்தம் நம் வாசல் வந்தாச்சு. வாழ்விலே



வாழ்விலே சந்தோஷம் உண்டாச்சு' என்று துவங்கும் பாடல். இன்னும் வெளிவரவில்லை. நானும் விஜயகாந்தும் இந்தப் பாடலுக்கு நடித்திருக்கிறோம். இந்தப் பாடல் வெளிவரும்போது தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் இந்தப் பாடலை ரசிக்கும்.

— கரண்

**சமீபத்தில் படித்த புத்தகம் எது?**

தமயந்தி எழுதிய 'அக்கக்கா



குருவிகள்' என்கிற புத்தகம்.

— பழனிபாரதி

உரையாற்றுவது என்பது மிகவும் அரியதொரு செயல் அல்லவா?

சென்ற 6.7.99 அன்று விசாகப்பட்டிணத்தில் 'சஹ்ருதய சாஹிதி' என்ற தெலுங்கு இலக்கிய அமைப்பு கல்கி நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அமரர் கல்கியைப் பற்றி சிறப்புரை ஆற்ற அழைக்கப்பட்டவர் விசாகப்பட்டினம் ஹிந்து பத்திரிகையின் சிறப்புப் பத்திரிகையாளர் ஆர். சம்பத். தமிழில் வல்லமை பெற்றவரும் இங்குள்ள தமிழக மன்றத்தின் தலைவருமான சம்பத், சுந்தரத் தெலுங்கினிலே, சுந்தர காண்டத்தில் காணப்பட்ட மேற்கூறப்பட்ட வார்த்தைகளால் கல்கி அவர்களுக்குப் புகழாரம் சூட்டித் தம் சிறப்புரையை ஆரம்பித்தார்.

சம்பத்தின் புகழ் மாலைகளிலிருந்து ஒரு சில பூக்கள்:

● கல்கியின் நகைச்சுவைக் குணம் எப்படி மேம்பட்டதோ அப்படியே அவர் மற்ற எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் ''பலே... பலே....'' எனக் குரல் கொடுத்து உற்சாகப்படுத்துவதிலும் உயர்ந்தவராக இருந்தார். ஒருமுறை நாடோடி, தாம் எழுதிய கட்டுரையைக் கல்கியிடம் காண்பித்தாராம். தாம் எப்படி இக்கட்டுரையை எழுதினேன் என்பதையும், கல்கியைப் போலவே திறந்த வெளியில் நடைபோட்டு சிந்தித்ததையும், பிறகு தான் நடந்த நடைகளை அளந்து பார்த்ததில் அது கல்கியின் நடைகளை விடச் சற்றுக் கூடுதலாக இருந்ததையும் அதனால் தான் எழுதிய கட்டுரையும் சற்றுப் பெரிதாகி விட்டதையும் கல்கியிடமே கூறினாராம். அதற்கு கல்கி பெரிதாகச் சிரித்துவிட்டு, கட்டுரையைப் படித்த பின் சொன்ன பதில், ''பலே...பலே..''

● கல்கி ஒரு மகாபுருஷர். அமரதாரா எழுதி அமரராகி விட்டாலும் பிற்கால எழுத்தாளர்களுக்கு அவர் என்றும் துருவ நட்சத்திரம். கல்கியின் பாணியினை அடிப்படையாகக் கொண்டு எத்தனையோ எழுத்தாளர்கள் உருவாகினர். வருங்காலத்திலும் வருவார்கள். A KALKI SCHOOL HAS BEEN CREATED.

● சுந்தர காண்டத்திலே ஒரு வாசகம் வருகிறது. ''உத்ஸாகமே ஐஸ்வர்யம்'' அந்த உத்ஸாகத்தைத் தன் கடைமூச்சு வரை பெற்றிருந்தவர் கல்கி.

– இப்படி சுந்தர காண்டத்தில் ஆரம்பித்து சுந்தரகாண்டத்திலேயே முடித்து உரையாற்றினார் சம்பத். சுமார் இரண்டு மணி நேரம் அவர் கல்கியைப் பற்றி உரையாற்றியபோது எந்த ஒரு சப்தமும் இல்லாமல் சபையோர் மிக உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தது வியப்பாக இருந்தது. இன்னொரு வியப்பு என்னவென்றால், சம்பத்தின் சொற்பொழிவு முடிந்தவுடன் மூன்று தெலுங்குக் கவிஞர்கள் உடனுக்குடன் கல்கி மீது கவிதை பாடி மகிழ்வித்ததுதான்!

முன்னதாக, விழா ஆரம்பத்தில் அமரர் கல்கியின் உருவப்படத்திற்கு தெலுங்குக் கவிஞர் 'சித்ரகவி ஆத்ரேயா' பூமாலை சூட்டி தீபம் ஏற்றி வைத்தார். விழாவுக்கு 'ஸஹ்ருதய ஸாஹிதி' அமைப்பின் தலைவர் ராஜு தலைமை தாங்க, அமைப்பாளர் மந்திரி பிரபாகர் வரவேற்றுப் பேசினார்.

— திவாகர்

# ‘இது என்னடா புதுத்தொல்லை...?’

கடந்த சில வருடங்களாகவே பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ்-டூ பரீட்சை முடிவுகளைப் பார்த்தால், ஒரு விஷயம் புரியும். பையன்களைவிட, பெண்கள்தான் அதிக அளவில் பாஸ் பண்ணி வருகிறார்கள். அதே போல, டாப் ரேங்க் லிஸ்ட்டிலும் பெரும்பாலானவர்கள் பெண்கள்தான்! முதல் இடம் பிடிப்பதில் கூட பெண்கள்தான் அதிகம்.



"இதற்கு என்ன காரணம்? பெண்கள், ஆண்களைவிட புத்திசாலிகளாகி விட்டார்களா?" என்று ஒரு சிலர் என்னிடமே கேட்கிறார்கள். நானும், இதற்குரிய காரணங்களை ஆழமாய் யோசித்துப் பார்த்திருக்கிறேன்.

பலப்பல வருடங்களாகவே, படிப்பு என்பது பெண்களுக்கு இரண்டாம் பட்சம் என்று ஒரு கருத்து நமது சமுதாயத்தில் இருந்து வருகிறது. ஆண்கள் என்றால், படித்து, உத்தியோகத்துக்குப் போய், சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது கடமை. பெண்கள் என்றால், படிப்பு முக்கியமில்லை; பொறுப்புகளை உணர்த்தி வளர்த்து, கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட வேண்டும். கல்யாணமான பின் குடும்பச் சுமைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற மனப்பான்மைதான் இருக்கிறது.

காலம் காலமாக இப்படியே நமது சமூகம் இருந்து விட்டது. என் விஷயத்தில் கூட பள்ளிக்கூடப் படிப்பை முடித்தவுடன், 'இனி மேல் என்ன படிப்பு வேண்டிக் கிடக்கிறது? பேசாமல் நல்ல வரனாகப் பார்த்து, கல்யாணத்தை முடித்து விடலாம்' என்று ஒரு பேச்சு இருந்ததைப் பற்றியும், தான் படிக்காது போனாலும் என் அம்மா, என்னைக்

திருமதி ஒய்.ஜி.பி.

கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைக்க வேண்டும் என்பதில் எத்தனை பிடிவாதமாக இருந்தார் என்பதையும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஆனால், இப்போது, சமூகத்தில் நல்ல மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பெண்களும் படிக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டது. இந்த விழிப்புணர்ச்சிதான் பரீட்சையில் பெண்கள் பெரும் அளவில் பாஸ் பண்ண அடிப்படைக் காரணம்!

முன்பெல்லாம் பள்ளிப் படிப்பை முடித்தபின் ஒரு பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி, முடித்தால் போதும் என்று பெண்கள் நினைத்தார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை மாறிவிட்டது. ஆண்களைப் போலவே இஞ்சினியர் ஆக வேண்டும்; டாக்டர் ஆக வேண்டும் சார்டர்டு அவுண்டன்ட், வக்கீல் ஆக வேண்டும் என்கிற விருப்பம் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இஞ்சினியரிங், மெடிகல் சீட்கள் கிடைப்பது என்பது இந்தக் காலத்தில் சுலபம் இல்லையே. கடுமையான போட்டி நிலவுவதால், அவர்கள் நிறைய மார்க் வாங்க வேண்டும் என்கிற வெறியுடன் படிக்கிறார்கள். இதனால், மாநிலத்தில், அகில இந்திய அளவில் டாப் ரேங்க் எடுக்கிறார்கள்.

படிக்கிறபோது, பையன்களுக்கு ஏகப்பட்ட 'டிஸ்டிராக்ஷன்ஸ்'. ஸ்கூல் விட்டால், மாலையில் விளையாட்டு என்பது, பையன்களுக்கு வழக்கம். ஆனால் விளையாடப் போகிற பெண்கள் அதிகமில்லை! நண்பர்கள் வீட்டில் அரட்டை, ஊர் சுற்றுவது இன்ன பிற படிப்புக்கு இடைஞ்சலான விஷயங்கள் பெண்களுக்குக் கிடையாது.

எனவே, படிப்பில் அதிக கவனம் செலுத்திப் படிக்கிறார்கள். பையன்கள், 'படிப்போம்; இடம் கிடைத்தால் சரி, இல்லையெனில் எப்படியாவது கஷ்டப்பட்டு, பணம் புரட்டி, பேமன்ட் சீட்டாவது வாங்கி, இஞ்சினியரிங், மெடிசன் சேர்த்து விடுவார்கள்' என்று நினைக்கிறார்கள். தவிர, கம்ப்யூட்டர் படிப்பு, பரவலானபின், ஏகப்பட்ட பெண்கள் கம்ப்யூட்டர் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களுக்கு சுலபமாக வேலையும் கிடைத்து விடுகிறது.

பையன்களைவிடப் பெண்கள்தான் படிக்கிற நேரத்தில் தங்கள் கவனத்தைச் சிதற விடாமல் படிக்கிறார்கள். தாங்களும் சாதிக்க வேண்டும் என்கிற லட்சியம், தங்களாலும் சாதிக்க முடியும் என்கிற தன்னம்பிக்கை இவை, பெண்களுக்கு அதிகம் இருப்பது உண்மை.




இவை எல்லாவற்றுக்கும் மேலாக, டெக்ஸ்டைல் டிசைனிங், ஃபேஷன் டெக்னாலஜி, என்று ஏகப்பட்ட புதுப்புது வாய்ப்புகள் பெண்களுக்குப் பெருகியிருப்பதையும் குறிப்பிட வேண்டும்.

எனக்கு வேதனையளிக்கும் விஷயம் என்னவெனில் நடைமுறையில் பெண்கள் இப்படி முன்னேறிக் கொண்டிருக்கிறபோது, நம் ஊர் டீ.வி. தொடர்கள் மட்டும் இன்னமும் பெண்களை ஒடுங்கியவர்களாகவே சித்திரிப்பதுதான்!

எங்கள் தலைமுறையில், ஒரு குடும்பத்தில் ஐந்தாறு குழந்தைகள், என்பது சகஜம். எட்டு, பத்து குழந்தைகள் கொண்ட குடும்பங்களையும் நான் பார்த்திருக்கிறேன். அப்போது, பெற்றோர்களுக்கும் பெரிய அளவில் வசதிகள் இருக்காது. ஆசைகள் அதிகம் இல்லாமல், தேவைகளைக் குறைத்துக் கொண்டு வாழ வேண்டும் என்பது நடைமுறையில் இருந்தது.

இப்போது, பெரும்பாலானவர்கள் ஒரு குழந்தை போதும் என்று நினைக்கிறார்கள். ஒரே ஒரு குழந்தை என்பதாலும், போன தலைமுறையைவிட இந்தத் தலைமுறையினரிடம் வசதி அதிகமாக இருப்பதாலும், குழந்தைக்கு ரொம்ப செல்லம் கொடுத்து வளர்ப்பதும், அந்தக் குழந்தை எது கேட்டாலும் வாங்கிக் கொடுத்து விடுவதும் நடக்கிறது.

இதனால் குழந்தைகளுக்கு, "எதுவானாலும் தனக்கு மட்டும்தான்" என்கிற பொச




ஸிவ்னஸ் வந்து விடுகிறது.

இன்னொரு குழந்தை வீட்டுக்கு வந்தால், அந்தக் குழந்தையுடன் சேர்ந்து, தனது விளையாட்டு சாமான்களைப் பகிர்ந்து கொள்ளுவது என்பது அரிதாகி விட்டது.

பகிர்ந்து கொள்ளுவது என்பது ஒரு அற்புதமான விஷயம். மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுகிறபோது அது இரட்டிப்பாகும்; ஒரு கஷ்டத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறபோது அது பாதியாகக் குறைந்துவிடும் என்று சொல்லுவார்கள்.

இந்தப் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தை குழந்தைகள் வளர்த்துக் கொள்ள வேண்டுமானால், அது பெற்றோர்களின் கையில்தான் இருக்கிறது. பகிர்ந்தளித்து, சந்தோஷப்படும் தத்துவத்தைச் சின்ன வயதிலிருந்தே குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும்.

எங்கள் பள்ளிக் கூடத்தில், இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். கர்நாடகா, கேரளா, பஞ்சாப் போன்ற மாநிலங்களைப் பற்றிப் பாடம் நடத்துகிறபோது, சில மாணவ, மாணவிகளை, அந்த மாநில பாரம்பரிய உடைகளு அணிந்து வரச் செய்கிறோம். அந்த மாநிலங்களின் கலாசார அம்சங்கள் – குறிப்பாக நடனங்கள் எப்படி இருக்கும் என்று, மாணவர்களுக்கே பயிற்சி கொடுத்து செய்து காட்டச் சொல்லுகிறோம். இதையெல்லாம் விட இன்னும் ஒரு சுவாரசியமான விஷயம்: மாணவ - மாணவிகளுக்கு, அன்று, வழக்கமான மதிய உணவு கிடையாது. அந்தந்த மாநில உணவு ஐட்டங்களை, மாணவ, மாணவிகளே தங்கள் வீடுகளி விருந்து தயாரித்து எடுத்துக் கொண்டு வர வேண்டும். சில அம்மாக்களுக்கு, அவசியமானால், அந்த ஐட்டத்தின் சமையல் குறிப்பையும் எழுதிக் கொடுத்தனுப்புவோம்.

அன்று எல்லா மாணவர்களும் கொண்டு வரும் ஐட்டங்களை, வகுப்பில் உள்ள அத்தனை மாணவர்களுக்கும் டீச்சர் பரிமாறுவார். இது போன்ற சமயங்களில், பகிர்ந்து உண்ணும் போது கிடைக்கிற சந்தோஷத்தை பிள்ளைகள் உணருகிறார்கள்.

உணவு விஷயத்தில் இன்னொரு அம்சமும் கடைபிடிக்கப்படுகிறது. தினமும் ஒரே விதமாக சப்பாத்தி, தயிர் சாதம் என்று இருந்தால், மாணவர்களுக்குப் போதிய ஊட்டச் சத்து கிடைக்குமா? எனவே ஒரு சிஸ்டத்தை நாங்கள் கடை பிடிக்கிறோம். மதிய உணவுக்குத் தங்கள் சௌகரியம் போல எதையும் கொண்டு வரலாம் என்றாலும், திங்கட்கிழமை என்றால், கட்டாயமாக வெள்ளரிக்காய், கேரட், தக்காளி என்று பச்சைக் காய்கறிகள் கொண்டு வர வேண்டும். செவ்வாய்க் கிழமைகளில் கீரை கட்டாயம். புதன் கிழமைகளில் முளைகட்டிய பயறு வகைகளில் ஒன்று கொண்டு வர வேண்டும். வியாழக் கிழமைகளில் குழந்தைகளின் சாய்ஸுக்கு விட்டு விட்டோம். வெள்ளிக் கிழமைகளில் பழவகைகள் கொண்ட ஃப்ரூட் சாலட்.

வகுப்பிலுள்ள மாணவ, மாணவிகளை, ஐந்தாறு பேர்கள் கொண்ட சிறு சிறு குழுக்களாகப் பிரித்து விடுகிறோம். அவர்கள் ஒன்றாக அமர்ந்து, ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு சாப்பிட வழி செய்கிறோம். ஒவ்வொரு குழுவுக்கும் லீடர் உண்டு. அந்த லீடரின் வேலை, தினமும் அந்தந்தக் குழுவைச் சேர்ந்த மாணவர்கள், அட்டவணைப்படி சாலட், கீரை, பயறு, ஃப்ரூட் சாலட் இவைகளைக் கொண்டு வருகிறார்களா என்று பார்ப்பதுதான்!

சில அம்மாக்கள், இது என்னடா புதுத் தொல்லை என்கிற ரீதியில் இந்தத் திட்டம் பற்றிப் புகார் சொன்னார்கள். ஆனால், நாங்கள் "சத்தான உணவு சாப்பிட்டால்தானே, குழந்தைகள் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க முடியும்? காய்கறிகளை அப்படியே நறுக்கி, சாலட் செய்வது சுலபம்தானே! ஃப்ரூட் சாலட் செய்வது கஷ்டமில்லையே" என்று எடுத்துச் சொல்லி, புரிய வைத்தோம். அப்புறம் அவர்கள் எங்கள் நல்லெண்ணத்தைப் புரிந்து கொண்டு, பாராட்டினார்கள்.

(தொடரும்)

● எல்.கே. அத்வானியின் மகள் ப்ரதிபா அரசியல் ரீதியாகத் தன் தந்தையால் 'அடை காக்கப்பட்டு' வருகிறார் என்கின்றனர் தலைநகரிலுள்ள சில பல அத்வானி நோக்கர்கள். எங்கு சென்றாலும் மகள் 'பட்டேல் – 2' வுடனேயே செல்வதும், ஓரிரு இடங்களில் அரசியல் மேடைகளிலேயே தந்தைக்குச் சமமாக அமர்வதும், குறிப்பாக அத்வானி கார்கில் சென்றபோது ப்ரதிபாவும் உடன் சென்றதும் "அத்வானியுமா பரம்பரை ஆட்சிக்கு அஸ்திவாரம் போடுகிறார்...?" என்ற கேள்வி எழக் காரணமாயின. ப்ரதிபா ஒரு டீ.வி. கம்பெனியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகியிருக்கிறார். அந்தக் கம்பெனிக்கு மட்டும் உள்துறை அமைச்சர் குழுவுடன் காஷ்மீரில் சில இடங்களைக் கவரேஜ் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. 'இது சர்தார் பட்டேல் அவர் மகள் போன்ற ஒரு உறவுதான். நேரு – இந்திரா போல் இல்லை' என்கிறார் ஒரு நோக்கர். "பட்டேல்-2" இந்த விஷயத்திலும் தம் மானசிக குருநாதரைப் போல்தான் என்று சத்தியம் செய்தார். நம்புவோம்!



● பி.ஜே.பி.யின் ஜே.பி. மாத்தூர் பெருங் கோபத்தில் இருக்கிறார். கட்சி இமேஜைக் காக்க இனி இழங்கள் தொலைக் காட்சிப் பெட்டியில் முகத்தைக் காட்டக் கூடாது என்ற கட்சிக் கட்டளையைக் கடாசிவிட்டு பல விவாதங்களில் கலந்து கொள்பவர், இறுதி எச்சரிக்கை ஒன்று விடப்படவே கட்சியின் மீடியாக் குழு உறுப்பினராக இருந்தும், குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதை நிறுத்தி விட்டார்!


● ஒரு முக்கியமான நபரின் சகோதரி போன்றவர், இங்கு திடீர் விஜயம் செய்ததாகப் பேச்சு. "அக்கா" இனி அடிக்கடி டெல்லி விஜயம் செய்ய வேண்டியிருக்கும். ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கினால் ஏகப்பட்ட பிரச்னைகள். எனவே ஒரு நல்ல பண்ணை இல்லமாகப் 'பார்த்து' வாங்குவதற்கும், அக்கா பெயரில் துவங்கப் போகும் தொலைக்காட்சிக்குப் பூர்வாங்க வேலைகள் செய்வதற்கும் சகோதரி இங்கு வந்து சென்றதாகப் பேச்சு. புடைவையில் சென்றால் அடையாளம் தெரிந்து விடலாமென்று ஸல்வார் – கமீஸில் சென்றவரை, போலீஸ் மடக்கியதாகவும் கொழுத்த ப.பெட்டி ஒன்று அவர் சென்ற காரிலிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் பேசப்படுகிறது.

● கார்கில் விஷயத்தைத் தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்துவதா என்பதில் பி.ஜே.பி. உள் வட்டத்தில் சர்ச்சை கிளம்பி விட்டது. குஷாபாவ்

தாக்கரேவும், கே.எல். ஷர்மாவும் இதில் மோதிக் கொண்டனர். இருவரும் கல்கத்தாவுக்குத் 'தேர்தலுக்கு முந்தையக் கட்சி' நிலையைப் பார்வையிடச் சென்றார்கள். ஷர்மா கார்கில் தேர்தல் பிரசாரமாக்கப்படாது என்றார். இரு தினங்கள் கழித்து தாக்கரே கார்கில் வெற்றி தேர்தலில் பிஜேபியின் சாதனையாகப் பிரசாரம் செய்யப்படும் என்று அறிக்கை விட்டார். குழம்பிய மே. வங்க காவித் தலைகள் வாஜ்பேயி, அத்வானி இருவருக்குமே கடிதமெழுதி விளக்கம் கேட்டார்களாம். கட்சி விளக்கம் வந்த பிறகு தேர்தல் வியூகத்தை வகுப்போம் என்றார் ஒரு மே. வங்கர்.

● பி.ஜே.பி. காரியதரிசிகள் பலர் கட்சியில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் விழிக்கின்றனர் இப்போது. ஹரியானா பொறுப்பாளர் நரேந்திர மோதி விடுமுறையில் ஐரோப்பா சென்றிருந்தபோது ஹரியானா விகாஸ் கட்சிக்குத் தமது ஆதரவை விலக்கிக் கொண்டது பாரதீய ஜனதா. மோதிக்குத் தகவல்கூடச் சொல்லப்படவில்லையாம். அதுபோல் குஜராத் அரசியல் பிரச்னையில் அகப்பட்டுக் கொண்டபோது அதற்குப் பொறுப்பாளராக இருந்த மற்றொரு காரியதரிசி சுமித்ரா மஹாஜன் வாயை மூடிக் கொண்டிருக்கப் பணிக்கப்பட்டார். உ.பி.யில் சமாதானத் தூதுவராக அம்மாநிலப் பொறுப்பிலுள்ள சுந்தர்லால் பட்வா அனுப்பப்படாமல், கோவிந்தாச்சார்யா அனுப்பப்பட்டார். கோவாவில் மஹாராஷ்ட்ரவாதி கோமந்தக் கட்சியுடன் உறவு வைத்துக் கொள்ள சங்கப்ரியா கௌதம் வாதாடியும் பலனொன்றுமில்லை. சமீபத்தில் அத்வானி டெல்லி பொறுப்பிலுள்ள விஜய்குமார் மல்ஹோத்ராவைக் கலந்தாலோசிக்காமலே சுஷ்மா ஸ்வராஜ் – மதன்லால் குரானா சச்சரவைத் தீர்ப்பதில் முனைந்தார். ஆளுங்கட்சியில் மிகப் பெரிய பதவி மாற்றங்கள் ஏற்படப் போகிறது. பல காரியதரிசிகளின் தலைகள் உருளப் போகின்றன என்று பேச்சு அடிபடத் தொடங்கியிருக்கிறது.

● ஜனா கிருஷ்ணமூர்த்தியைத் திருச்சியில் நிறுத்தலாம் என்ற செய்தி ரங்கராஜன் குமாரமங்கலத்தின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியிருக்கிறது. ஜனாஜியை ஜெயிக்க வைத்து பாராளுமன்றம் கொண்டு வருவதில் அடல்ஜி, அத்வானிஜி இருவருமே மிக மிக ஆவலாய் உள்ளனர். எனவேதான் ரங்காஜிக்கு ரங்கநாதர் கோவில் தொகுதியிலிருந்து கல்தா!



● சோனியா காந்தியை கிழக்கு டெல்லி தொகுதியிலிருந்து நிறுத்த, ஒரு குழு முனைந்து வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. டெல்லி முதல்வர் ஷீலா தீக்ஷித் "இது டெல்லிக்குப் பெருமை. சோனியாஜி இங்கு நிற்கும் பட்சத்தில் டெல்லியின் ஏழு தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றி பெறும்" என்கிறார்.

— இந்திரப்ரஸ்தன்



• 'மில்லினியம் மாலினி'யில் ஒரு காட்சி

# நடிகர்

அடுத்த ஆண்டு (கி.பி. 2000) பிறக்கும்போது ஏற்படும் தேதி மாற்றத்தில் வருடத்தைக் குறிக்க '99' என்பது '00' என்று கம்ப்யூட்டர்களில் தானாகவே மாறும். இது பல ஆண்டுகளுக்கு முன்னால் செய்த கம்ப்யூட்டர் புரோக்கிராமின் விளைவு. அப்படி '00' வரும்போது, கம்ப்யூட்டர் புரோகிராம் இதை 1900 என்று படிக்கும். இதனால் பல பெரிய பிரச்னைகள் உண்டாகலாம். இதைத்தான் Y2K அச்சுறுத்தல் என்கிறார்கள்.

உதாரணமாக...

- சில கிரெடிட் கார்டுகளையும், ATM கார்டுகளையும் மிஷின்கள் ஏற்காமல் போகலாம்.
- 2000ல் பிறக்கும் குழந்தைக்கு மருந்து ஏதாவது தர வேண்டுமானால், 1900ல் பிறந்த கொள்ளுப்பாட்டி அல்லது கொள்ளுத் தாத்தா என்று கம்ப்யூட்டர் நினைத்து, அளவை அதிகமாக்கி விட்டால்... குழந்தை?
- ஏர் டிராஃபிக் கன்ட்ரோல் கம்ப்யூட்டர்கள் தேதி குழப்பத்தால் வேலை செய்ய மறுத்தால் விமான நிலையங்களில் என்னென்ன கோளாறுகள் நடக்கும்?
- தொழிற்சாலைகளில் இருக்கும் ராட்சத இயந்திரங்கள் 1900ல் வாங்கப்பட்டவை என்று கம்ப்யூட்டர்கள் முடிவு செய்து அவற்றை இயங்காமல் இருக்கச் செய்து விடலாம்.
- உணவு, பெட்ரோல் இறக்குமதி, அத்யாவசியப் பண்டங்கள் உற்பத்தி தடைபடலாம்.
- தண்ணீர் வசதி குறையலாம்.

இது போல கம்ப்யூட்டரை நம்பியிருக்கும் சிறிய, பெரிய தொழில்கள், வியாபாரங்கள் ஆகியவை வெகுவாக பாதிக்கப்படலாம் என்றும், மற்ற பிரச்னைகளும் வரலாம் என்றும் பலர் நம்புகிறார்கள். கெட்டுப் போகாத உணவுப் பண்டங்களையும், எரிபொருள்களையும் இப்போதே வாங்கி பத்திரப்படுத்திக் கொள்வோர் இருக்கிறார்கள்! கலவரம் ஏற்படலாம் என்று நினைத்து தற்காப்புக்காகத் துப்பாக்கி வகையறாக் களைப் பதுக்கி வைப்பவர்கள் கூட உண்டு. வங்கியில் பணம் எடுக்க முடியாதோ என்று பணத்தை இப்போதே எடுத்து கணக்கைத் தீர்ப்பவர்களும் உண்டு. மக்கள் இப்படிப் பதறுவதாலேயே Y2K பிரச்னை விசுவரூபம் எடுக்கும் என்று சிலர் எச்சரித்துள்ளனர்.

சரி! இதற்கும் நடிகர் திலகத்துக்கும் என்ன சம்பந்தம்?

அமெரிக்காவில் வாஷிங்டன் பகுதியில் ஒரு நாடகக் குழுவைத் தொடங்கி, இதற்கு 'சிவாஜி கணேசன் கலைமன்றம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். மேரிலாந்து மாநிலத்தில் கலைப்பணிக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம். இதன் முக்கிய நோக்கம்: நாடகம், நாட்டியம், இசை மூலம் இங்குள்ள தமிழருக்கும், சிலசமயம் ஆங்கில

# திலகமும் Y2K பிரச்னையும்

நாடகங்கள் மூலம் அமெரிக்கருக்கும் இந்தியப் பண்பாட்டை எடுத்துக் கூறுவது. தோன்றிய ஆறு ஆண்டுகளில் எட்டு தமிழ் நாடகங்களையும், இரண்டு ஆங்கில நாடகங்களையும் மேடையேற்றியிருக்கிறார்கள்.

"சிவாஜி கணேசன் கலைமன்றம்" லாபம் கருதாத நிறுவனமாதலால், மாநில மற்றும் உள்ளூர் அரசின் மூலம் ஆங்கில நாடகத் தயாரிப்புகளுக்கு நிதி உதவி கிடைக்க நல்ல வசதியுள்ளது. 'Arranged Marriage' மற்றும் 'The Hope Diamond' ஆகிய ஆங்கில நாடகங்களைத் தயாரித்தபோது நிதி உதவி தந்தார்கள். தயாரிப்பு செலவு பற்றி அதிக மாகக் கவலைப் படாமல் படைப் பில் கவனம் செலுத்த முடிகிறது.

'தி ஹோப் டைமண்ட்' நாடகம் 'வாஷிடன் வைரம்' என்ற தமிழ் நாடகத்தின் ஆங்கில வடிவம்தான். இந்த ஆண்டு சிவாஜி கணேசன் கலைமன்றத்தாரின் புதிய நகைச்சுவை நாடகத்துக்கு 'மில்லெனியம் மாலினி' என்று பெயர்! இதில் Y2K பிரச்னை மூலமாக அமெரிக்காவில் 2000 பிறக்கும்போது என்னென்ன நடக்கலாம் என்பதை சுமார் 100 நிமிடங்களில் நாடகமாகச் சொல்கிறார்கள். இதை ஏற்கெனவே மேரிலாந்து, பிலடெல்பியா ஆகிய இடங்களில் நடத்தியதில், அமோக வரவேற்பு. மேலும், 1999 முடிவதற்குள் இன்னும் சில இடங்களில் நடத்த இருக்கிறார்கள். இந்த நாடகத்தில் 'ஆளவந்ததே கம்ப்யூட்டர்' என்ற பாடலை எழுதி, நன்றாகப் பாடக்கூடியவர்களே நடித்ததால் அவர்களையே மேடையில் பாடவைத்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது.

அமெரிக்காவில் தமிழ் நாடகங்கள் போடும் பல குழுக்கள் இருக்கின்றன. மிச்சிகன், கலிபோர்னியா, நியூஜெர்சி, டெக்சாஸ் ஆகிய இடங்களிலும் தமிழ் நாடகக் கலைஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் சில வருந்தத்தக்க குறைகளும் உள்ளன என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தமிழ் சினிமாவுக்கு பத்து டாலர் வரை தர விரும்பும் தமிழ் அன்பர்கள், நாடகத்துக்கு ஐந்து டாலருக்கு மூக்கால் அழுகிறார்கள். சில தமிழ்ச் சங்கங்கள் முப்பது நிமிடத்துக்கு மேல் நாடகம் என்றால் 'வேண்டாம் சார், எங்க நிகழ்ச்சிகளுக்கே நேரம் போதாது' என்று ஒதுக்குகிறார்கள்.

அமெரிக்கத் தமிழர்கள் பெருமளவு பங்கு கொள்ளும் கூட்டுத் தமிழ்ச் சங்க விழாவுக்கு இங்குள்ள நாடகக் குழுக் களை அழைத்து உற்சாகப்படுத்தலாம். தமிழ் சினிமா நடிகர்களை மட்டுமே அழைப்பது வழக்கமாகி விட்டது. அமெரிக் காவில் நாடக மேடை வாடகைக்கு எடுப் பதற்கு செலவு நிறைய ஆகும். ஆதலால் கோயில்களில் உள்ள மேடையில் நாடகத்தை நடத்துவது பரவலான வழக்கம். 'கோயிலில் நாடகம்' என்றதுமே மதம் தலை நீட்டிவிடுகிறது; இதனால் நாடகத்தில் விருப்பம் உள்ளவர்களும் வராமல் போய்விடுகிறார்கள்.

இது போன்ற பிரச்னைகளையும் பொறுத்துக் கொண்டு சிவாஜி கணேசன் கலைமன்றத்தார் ஆண்டுக்கு ஒரு நாடகம் தயாரித்து மேடையேற்றுவதற்கு முக்கியக் காரணம் நடிப்பில் ஆர்வம் உள்ள நண்பர்கள் இருப்பதால்தான்.

— வாஷிங்டன் ஸ்ரீதர்




# உரசாமல் பறப்பதே உலக நாகரிகம்!

அது ஒரு புகைப்படக் கண்காட்சி. தேசிய அளவிலோ, உலக அளவிலோ பரிசு பெற்ற படங்கள் அல்ல! கண்ணைக் கவரும் அழகழகான வண்ண இயற்கைக் காட்சிகளோ கூட இல்லை. ஆனால், உள்ளே நுழைபவர்களை ஒரு வினாடியேனும் உறைந்துபோய் நின்று விடச் செய்யும் புகைப்படங்கள். அத்தனையும் கார்கில் பகுதியில் எடுக்கப்பட்டவை. மக்கள் தொடர்புச் சாதனங்களின் ஒருங்கிணைப்புக் குழு நடத்திய இந்தப் புகைப்படக் கண்காட்சியை, சென்னை வானொலி நிலைய வளாகத்தில் திறந்து வைத்தார் மேஜர் ஜெனரல் எஸ்.பி. கபூர்.

நாம் பார்த்த புகைப்படங்களில், இங்கே சில சாம்பிள் காட்சிகள்.

புகைப்படக் கண்காட்சியின் துவக்க நாள் நிகழ்ச்சியில் 'கார்கில் கவிமுழக்கம்' நடைபெற்றது. இங்கே உள்ளவை, அங்கே கேட்டவை.




• ஐ.நா. சபை<br>
வளாகத்தில்<br>
ஒரு நாட்டுக் கொடியை<br>
இன்னொரு நாட்டுக்கொடி<br>
உரசாமல் பறப்பதே<br>
உலக நாகரிகம்.

– வைரமுத்து.

• கார்கில் ஒரு போரல்ல<br>
காஷ்மீர் ரோஜாவிற்கு<br>
ஊற்றும் நீர்.

– மு. மேத்தா.



கைகளைச் சுட்டுக்
கொள்கிறது.
– ஈரோடு தமிழன்பன்.

● எம் வீரர்களே!
என் கண்ணீரால்
உங்களைப் புகழ்கிறேன்.
– அப்துல் ரகுமான்.

● கார்கில் வீரர்களைத்
தொட்ட மரணமும்

● எங்கள்
வெள்ளை வேட்டியை
ஒருவன் உருவி
அதை சமாதானக் கொடி
என்று காட்டினால்
சம்மதிக்க மாட்டோம்.
– வைரமுத்து.

தொகுப்பு : கே. பாலசுப்ரமணியன்



## ஒரு கூட்டம்

சுந்தர ராமசாமி வந்திருந்தார், மெட்ராஸுக்கு. எனக்கு ஏழாங் கிளாஸ்ல படிச்ச 'பைப்பர் இன் தி ஸ்ட்ரீட் டுடே' போயம்தான் ஞாபகத்துக்கு வந்தது. (இலக்கிய)வாதிகள், பிரதிவாதிகளெல்லாரும் ரெண்டு நாள் அவரை விடாம சுத்தி வந்த காட்சியைக் கொஞ்சம் எக்ஸாஜரேட் பண்ணிச் சொல்லணும்னா, கிருஷ்ணர் – கோபிகைகள் உவமையை யூஸ் பண்ணலாம்.

புக் பாயின்ட்ல நடந்த அவரோட ஒரு மணி நேரப் பேச்சுக்கு (followed by கேள்வி நேரம்) அப்படி ஒரு கூட்டம்; எதிர்பார்ப்பு.

சுந்தர ராமசாமி, எழுதறா மாதிரியே பேசறார். பண்டிதத் தனமில்லாத, அதே சமயம் இலக்கண சுத்தமான ஸ்பீச். நடு நடுல கேஸரில தட்டுப்படற முந்திரி மாதிரி அந்தக் கன்யாகுமரி ஆக்ஸன்ட்.


அவசர வாழ்க்கைல நாம தவற விட்டுட்டிருக்கற குட்டிக் குட்டி சொர்க்கங்களையெல்லாம் தேடித் தேடி எடுத்து அவர் தன்னோட ஷர்ட் பேக்கட்ல வெச்சிருந்து, இந்தா, இந்தான்னு ஆளுக்கு ஒண்ணா எடுத்துக் குடுக்கற மாதிரியான விஷயம் அவரோட பேச்சு! – எழுத்து மாதிரியே.

சின்ன வயது ஞாபகங்களைப் பத்திதான் நிறையப் பேசினார்.

''அழகான பெண்கள் கெட்ட வார்த்தை பேச மாட்டாங்கன்னு நம்பிட்டிருந்தேன். ஏழைகள் எப்பவும் அழுதுட்டே இருப்பாங்கன்னு நினைச்சிட்டிருந்தேன். இங்கிதமா பேசறவங்களை முழுக்க நம்பலாம்னு நினைச்சேன்'' – இப்படி அடுக்கிட்டே போனவர், மதிப்பீடுகள் சரியறதோட பின்விளைவுகள் தன்னை எப்படி பாதிச்சிதுன்னு விவரித்தபோது ரொம்ப த்ரில்லிங்கா இருந்தது.

சு. ரா. அனுபவங்களை மட்டுமே கலையாக்கறதுங்கற கொள்கையில நிக்கறவர். அவரோட அத்தனை சிறுகதைகளிலேயும் நாவல்களிலேயும் வேற வேற உருவத்துல அவரையும் அவரோட அனுபவங்களையும் பார்க்கலாம்.

அன்னிக்குக் கூட்டத்துல ரொம்ப பின்னால நின்னுட்டிருந்த எனக்குப் பல சந்தர்ப்பங்கள்ல அவர் முகமே தெரியலை. (என்ன கூட்டம்ங்கறீங்க!) குரல் மட்டும் காதுல விழும் போது ஒரு சமயம் 'ஜேஜே' பேசற மாதிரியும் ஒரு சமயம் 'பாலு' பேசற மாதிரியும்தான் இருந்தது. (ஜேஜேவையும் பாலுவையும் யார்னு தெரியாதவங்க, சு. ராவோட



## தேவை - சில குபேரர்கள்!

நாவல்களைப் படிக்கவும்.)

## ஒரு பிரச்னை

மெட்ராஸை ஓவர் பிரிட்ஜ் நகரமா மாத்தறதுன்னு வீர சபதம் பண்ணிட்டு, முழு மூச்சா விட்டியைத் தோண்டிப் போட்டிருக்கற மாநகரத் தந்தை, ஒரு தரம் கிண்டிலேருந்து அடையாறுக்கு டூ வீலர்ல பயணம் செய்து பார்க்கணும். அல்லது ராயப்பேட்டை பக்கம். அல்லது எங்கெங்க சிந்துவெளி நாகரிகத்தைக் கண்டு பிடிக்க முயற்சி பண்ணிட்டிருக்காங்களோ, அங்கெல்லாம்.

பீக் அவர்ஸ்ல, பத்தடி நகர்றதுக்கு சுமார் ஹாஃபனவர் ஆறது. டுர்டுர்னு வண்டி சப்தம் ஒரு பக்கம், டீஸல், பெட்ரோலோட தெய்வீக நறுமணம் ஒரு பக்கம். டிராஃபிக் ஜாம் தர்ற சலிப்பால லாரி டிரைவர்களும் ஆட்டோ டிரைவர்களும் உதிர்க்கற சுந்தர மொழிகள் ஒரு பக்கம். மாநகரப் பேருந்து ஓட்டுநர்கள் (நல்ல தமிழ் கத்துக்கிட்டிருக்கேன்.) செய்யற அடாவடி சாலை ஆக்கிரமிப்பு ஒரு பக்கம். இதுக்கு நடுல பாதசாரிகள் படறபாடு கொஞ்ச நஞ்சமில்லை.

'பை-பாஸ்'னு ஒரு வழி புதுசா ஏற்படுத்திக் கொடுக்க வக்கில்லாத நெரிசலான நகரம் இது. ஒரே சமயத்துல இவ்ளோ ஓவர் பிரிட்ஜ் ப்ராஜெக்ட்ஸ் ஆரம்பிக்கறதுல இருக்கற பிராப்ளம்ஸை நம்ம சிந்தனைச் சிற்பிகள் ஏன் யோசிக்க மறந்துட்டாங்க?

எல்லா பிரிட்ஜூம் பதினெட்டு மாத ப்ராஜெக்டாம். எதுவும் பதினெட்டு மாசத்துக்குள்ள முழுக்க முடியும்னு கடவுள்கூட உத்தரவாதம் தர முடியாத புண்ணிய பூமி இது.

மழைக்காலம் வந்துடும். (இப்பவே பய முறுத்துது.) அது முடியற வரைக்கும் பாலங்களுக்காகத் தோண்டின பதுங்கு குழிகளெல்லாம் ஸ்விம்மிங்பூலா புது அவதாரம் எடுக்கப் போகுது. பெரிய விஷப் பரீட்சை பண்ணியிருக்காங்க.

சிடில யாராவது குபேரர்கள் பதினெட்டு மாத ஹெலிகாப்டர் சர்வீஸ் தொடங்கினா ரொம்பப் புண்ணியமா போகும்.

— சுமி

# குறையொன்றுமில்லை

**26**

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

**கௌ**ஷீதகி உபநிஷத் சொல்கிறபடி பார்த்தால் பரமபதம் எங்கே இருக்கிறது...?

ஒரு பெரிய மாடி வீடு. படிக்கட்டுகள் இருக்கின்றன. அந்தப் படிக்கட்டுகள் வழியே மாடி ஏறிப் போகின்றோம் நாம்.

வசதிக்கேற்ப சில கிருஹங்களிலே 24 படிக்கட்டுகள் இருக்கின்றன; சில கிருஹங்களிலே 33 படிக்கட்டுகள் இருக்கின்றன. ஒரு கிருஹத்திலே 99 படிக்கட்டுகள் இருக்கின்றன. நாம் படிக்கட்டுகளையெல்லாம் பார்க்கிறோம். ஏறுகிறபோது படிக்கட்டுகளையெல்லாம் எண்ண வேண்டிய பிரமயம் வந்துவிடுகிறது.

படிக்கட்டுகள் கீழேயிருந்து மேலே போவதற்காக இப்படி இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சோபான பதவிக்கு!

இதேமாதிரி படிக்கட்டுகளைத்தான் நம் மனத்திலே உருவகப்படுத்திப் பார்க்க வேண்டும்.

பூலோகத்திலே நாம் எல்லோரும் இருக்கிறோம். வைகுண்டம் மேலே இருக்கிறது என்று தெரிந்து போய் விட்டது. பகவான் இருக்கிற இடம் வைகுண்டம். பூலோகத்திலே மாடிக்குப் போவதற்குப் படிக்கட்டு இருக்கிற மாதிரி இங்கேயும்' படிக்கட்டுதான்!

வைகுண்டத்துப் படிக்கட்டு அமைப்புத்தான் பூலோகத்துக்கு வந்திருக்கிறது! படிக்கட்டு வழியே ஏறிப் போவது என்பது உபநிஷத் காட்டிய வழி.

வைகுண்டத்துக்கு ஏறிப் போக வேண்டும் என்றால் படிக்கட்டுகள் ஏறிப் போக வேண்டும். எத்தனைப் படிக்கட்டு...? 'சோளிங்கபுரம் படிக்கட்டு மாதிரி இருக்குமா...?' – ஒருத்தர் கேட்கிறார். சோளிங்கபுரம் படிக்கட்டையும் கணக்குப் போட்டு விடலாம். 1300 படிக்கட்டு அது. சின்ன மலையில் 500. போனால், மொத்தம் 1800 படிக்கட்டுகள் ஏற வேண்டும். இந்த மாதிரி எத்தனை தடவை ஏறுவது... என்று கேட்டால் ஏறும் சிரமத்தை நமக்கு பகவான் கொடுப்பதில்லை.

பரமபதம் ஏறுவது சுலபமா...? ஒன்பதே ஒன்பது படிக்கட்டுகள்தானே. ஒன்பதாவது படிக்கட்டிலே அவன் நின்று கொண்டிருக்கிறான். அங்கே போய்விட்டால் அவனை நாம் கட்டிக் கொள்ளலாம். அவனும் நம்மைச் சேர்த்துக் கட்டிக் கொள்வான். – ஒன்பது படிக்கட்டுகள் தாண்டினால்..

அதிலும் முதல் படிக்கட்டைத் தான் நாம் ஏற வேண்டும். ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது இருக்கிறது பாருங்கள், அதிலே நாம் ஏற வேண்டியதில்லை. அவனே நம்மை ஏற்றி வைத்து விடுவான். அதில் அவன்தான் நம்மை ஏற்றி வைக்க வேண்டும். நம்மால் முடியாது.

ஆனால் முதல் ஐந்து படிக்கட்டுகள் மட்டும் நாம் ஏறி விட வேண்டும் என்கிறான் பரமாத்மா. நம்முடைய பிரயத்தனத்திலேயே, பகவானுடைய பலத்தைக் கொண்டு ஏற வேண்டும்.


ஒவ்வொரு படிக்கட்டுக்கும் ஒவ்வொரு பெயர். அவற்றில் கிரமமாக ஏற வேண்டுமேயொழிய அக்கிரமமாக ஏறக் கூடாது.

பூலோகத்தில் படிக்கட்டுகளில்கூட அக்கிரமமாக ஏற முடியாது! முதல் படிக்கட்டிலிருந்து மூன்றாவது படிக்கட்டிலே காலை வைத்தாரென்றால் விழுவார்! ஆகையினாலே கிரமமாகத்தான் படிக்கட்டுகளிலே ஏற வேண்டும். அதேமாதிரி வைகுண்டத்துப் படிக்கட்டிலேயும் கிரமமாக ஏறிப் போக வேண்டும்.

ஒவ்வொரு படிக்கட்டுக்கும் ஒரு பெயர். அது என்ன பெயர்?

முதல் படிக்கட்டுக்கு விவேகம் என்று பெயர். இரண்டாவது படிக்கட்டுக்கு நிர்வேதம் என்று பெயர். மூன்றாவது படிக்கட்டுக்கு விரக்தி என்று பெயர். நான்காவது படிக்கட்டுக்குப் பீதி என்று பெயர், ஐந்தாவது படிக்கட்டுக்குப் பிரசாத ஹேது என்று பெயர். ஆறாவது படிக்கட்டுக்கு உத்கமணம் என்று





பெயர், ஏழாவது படிக்கட்டுக்கு அர்ச்சிரார்தி மார்க்கம் என்று பெயர், எட்டாவது படிக்கட்டுக்கு திவ்யதேச பிராப்தி என்று பெயர், ஒன்பதாவது படிக்கட்டு பராப்தி – பகவதானுபவம் என்கிற பகவத் ப்ராப்தி. – இதுதான் அவனை அடைவதற்கான சோபான பதவி.

ஸ்வாமி தேசிகன் பரமபத சோபானம் என்கிற ரஹஸ்யத்திலே இதை நமக்கு எடுத்துக் காட்டுகிறார். இந்த கௌஷீதகி உபநிஷத் சொல்கிற விஷயத்தை.

ஆகவே, படிகளைக் கிரமமாக ஏற வேண்டும். இதிலே பாருங்கள், முதல் படிக்கட்டு ஏறுவதுதான் ரொம்ப சிரமம். ஆனால் முதல் படிக்கட்டை ஏறி விட்டோமானால் அடுத்தடுத்த படிக்கட்டுகளிலே அது நம்மை ஏற்றி விட்டு விடும். முதல் படிக்கட்டு மட்டும்தான் சிரமம்.

அந்த முதல் படிக்கட்டுக்கு விவேகம் என்று பெயர். இதுதான் ரொம்ப சிரமம்– வராது. அவிவேகிகள் எத்தனையோ பேரைப்





பார்க்கலாம். விவேகமுடையவர்களைப் பார்ப்பது ரொம்பக் கஷ்டம்; ரொம்ப சிரமம்.

தர்மா தர்ம விசக்ஷன ஞானமுடையவன் விவேகி - இது தர்மம்; இது அதர்மம் என்கிறதிலே பூரணமான ஞானம் யாருக்கு இருக்கிறதோ அவன்தான் விவேகி. இல்லையானால் புத்தி மாறாட்டம் இருந்ததானால் போச்சு! தர்மத்திலே அதர்மபுத்தியும் அதர்மத்திலே தர்மபுத்தியும் வந்து விட்டதானால் கஷ்டப்படுவான்.

அர்ஜுனனுக்கு அப்படித்தான் வந்தது. ஆகையினால் அந்த எம்பெருமான், தர்மத்திலே அதர்ம புத்தி வந்த, அதர்மத்திலே தர்ம புத்தி ஏற்பட்டுப் போகிற அர்ஜுனனை உத்தேசித்து, கீதா சாஸ்திரத்தை வெளியிட்டான். அதன் பிறகு அர்ஜுனன் விவேகத்தைப் பெற்றான்.

விவேகியாகவே பிறந்தவன் பரதன். அவிவேகம் அவனிடத்திலே துளிக்கூடக் கிடையாது என்கிறார் வால்மீகி. புஷ்ய நக்ஷத்திரத்திலே மீன லக்னத்திலே தோன்றும் போதே நல்ல புத்தியுடன் பிறந்தான்.

அவன் அம்மா கைகேயியை, அவன் பிறந்த இனத்திலிருந்து வேலை செய்து வந்த ஒரு தாதி - அந்தக் கூனி மந்தரை - ஒரு க்ஷணத்திலே மாற்றி விட்டாள்!

'ராமனாயிருந்தால் என்ன? பரதனாயிருந்தால் என்ன? ராமனும் என் பிள்ளைதானே' என்று பரதனைக் காட்டிலும் ராமனிடம் அன்பு கொண்டிருந்த கைகேயியை ஒரே க்ஷணத்திலே மாற்றி விட்டாள்! ஆனால் பரதனை அவனால் மாற்ற முடியவில்லை. வசிஷ்டாதி மஹரிஷிகளாலும் மாற்ற முடியவில்லை. ஏன் மாற்ற முடியவில்லையென்றால் விவேகமுடையவன் ஆனதினாலே.

அதைத்தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒருவனுக்கு தர்மா - அதர்ம விஷயம் தெரிந்திருக்குமானால் சாமான்யமான வார்த்தைகளாலோ, லௌகீகத்தைக் காட்டியோ, மற்றதைக் காட்டியோ ஒரு நாளும் அவனை மாற்ற முடியாது. தர்மத்திலே பற்றுடையவன், அதர்மத்தைத் துளிக்கூட நாடாதவன் ஒரு நாளும் மாற மாட்டான்.

பரதனைப் போன்று விவேகமுள்ள அதிகாரிகள் பூமியிலே நமக்குக் கிடைப்பார்களா... அந்த மாதிரி அதிகாரிகளைச் சிரமப்பட்டுத் தேட வேண்டும். விவேகமுள்ள ஆத்மாக்கள் கிடைப்பது கஷ்டம். புருஷனில் அது பரதன். ஸ்த்ரீகளிலே அந்த மாதிரி

## அருள்வாக்கு

**நா**ம் எங்கேயோ ஒரு பீச்சுக்குப் போகிறோம்; அல்லது ஸினிமாவுக்குப் போகிறோம். கண்டதை நினைத்துக் கொண்டு அரட்டை அடித்துக் கொண்டுதான் போகிறோம். ஆனால் போகிற வழியில் ஏதாவது ஒரு ஸத்ஸங்கத்திலிருந்து ''ஹர ஹர மஹாதேவா'', ''ஹரேராம ஹரேராம ராமராம ஹரேஹரே'' என்கிற மாதிரி ஒரு கோஷம் வந்தால், சட்டென்று நம்முடைய கன்னா பின்னா நினைப்புப் போய், பகவந்நாமா க்ஷணகாலம் மனஸுக்குள் போய் நம்மைக் கொஞ்சம் உருக்கி விடுகிறது. நாமாவுக்கு அப்படி

ஒருத்தி உண்டு... யார் அவள் என்றால் த்ருவனை ஈன்றெடுத்த மாதா சுனீதி.

அந்தக் குழந்தை த்ருவன் வந்து அழுகிறது. பிடித்துக் கீழே தள்ளி விட்டார்கள். அப்பா மடியிலே உட்கார வேண்டும் என்று பார்த்தேன். முடியலையே என்று கதறுகிறது குழந்தை. 4½ வயதுக் குழந்தை.

அதன் அம்மா என்ன சொல்ல வேண்டும்...? தரதரவென்று பர்த்தாவுக்கு எதிரிலே குழந்தையை இழுத்து வந்து கதற வேண்டாமோ! 'எங்களை இப்படி நிராதரவாக விட்டு விட்டீரே' என்று கேட்க வேண்டாமோ?

அவள் அந்தக் குழந்தையைப் பார்த்துச் சொல்கிறாள்.

''அப்பா, குழந்தாய்! நீ இப்படிக் கஷ்டப்பட வேண்டுமா? சுருசி சொன்னதிலே என்னடா தப்பு? புண்ணியம் பண்ணியவர்களுக்கு மட்டும்தான் அந்தப் பதவி கிடைக்கும்'' என்று சொன்னாள். மகா பாவாத்மா நான்! என் வயிற்றில் பிறந்த நீயும் பாவாத்மா. ஆகையினாலே நாம் பாவத்தையே பண்ணிவிட்டு, புண்ணியத்தினுடைய பலனை அனுபவிக்க வேண்டுமானால் அது முடியுமா...?'' என்று தன்னையே நொந்து கொள்கிறாளேயொழிய அவள் சொன்னதிலே துளிகூடத் தப்பு கண்டுபிடிக்கவேயில்லை.


அந்த மாதிரி ஒரு புத்தி அவளுக்கு!

பரதன் என்ன சொன்னான்...? என்னுடைய பாபம்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்றான். ஒரு பாபமும் அறியாதவன் அவன்!

அந்த மாதிரி, பெண்களிலே சுனீதி. நல்ல நியதியை உடையவள் என்று அவள் பெயரிலேயே ஏற்படுகிறதா இல்லையா? சு-நீதி .

பரதன் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் பொறுத்துக் கொள்ளும்படியான பொறுமை மிக்கவன். அதனால்தான் அவன் பெயரே

ஒரு சக்தி இருக்கிறது. ஆனதால் வாழ்க்கைப் போராட்டத்தின் முடிவிலே ஒரு ஜீவாத்மா உயிருக்காகப் போராடிக் கொண்டு மனஸ் நாலா திசையிலும் அலைபாய்கிற போது, அல்லது ஸ்மரணை தப்பிக் கொண்டிருக்கிறபோது பக்கத்திலே இருக்கிறவர்கள் பகவந்நாமாவை கோஷித்துக் கொண்டிருந்தால், அது அந்த ஜீவாத்மாவை அதன் மூலமாக பரமாத்மாவிடம் இழுப்பதற்கு ரொம்பவும் சக்திகரமான வழியாக இருக்கும். ஒருத்தன் எத்தனை துன்மார்க்கத்தில் போனவனாயிருந்தாலும், அந்தக் கடைசி நாழியில் இந்த ஸம்ஸாரத்திலிருந்து தப்புவதற்கு பகவானைப் பிடித்துக் கொள்ளத் தவிக்கத்தான் செய்வான். அவனுக்குத் தானாக அந்தத் தாபம் வராவிட்டால் கூட நாம் உண்டாக்கித் தந்து விட்டால் பிடித்துக் கொண்டு விடுவான்.



**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

பரணாத் பரத: எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளும்படியான, சகித்துக் கொள்ளும்படியான குணம் படைத்தவன்.

இந்த மாதிரியான அதிகாரிகளைப் புராணத்திலே தேடி நாம் கண்டுபிடிக்கிறோம். லோகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை எங்கே தேடி, யாரைக் கண்டு பிடிப்பது? எவ்வளவு சிரம சாத்தியம் அது!

எதையாவது சொன்னால் உடனே கோபம் வந்து விடுகிறது; உடனே தாபம் மனத்திலே. இப்படி லோகத்திலே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆதி சங்கர பகவத்பாதாள் சொல்கிறார்:

இப்படிக் கோப தாபமெல்லாம் வரலாமா? உன்னுள்ளே இருப்பவனும் விஷ்ணு; என்னுள்ளே இருப்பவனும் விஷ்ணு; எல்லா சராசரங்களுக்குள்ளேயும் அந்த விஷ்ணு இருக்கிறான். அப்படி இருக்கும்படியான அந்த எம்பெருமானை மனத்தால் நினைத்தாலே துவேஷம், போராட்டம், பகை, கஷ்டம் என்பவை லோகத்திலே சம்பவிக்குமா.

ஆகையினாலே, எல்லாவற்றிலேயும் பகவான் இருக்கிறான் என்கிற ஞானம் ஒருத்தருக்கு ஏற்பட்டுப் போய்விட்டால் இன்னொருத்தரோடு சண்டை போடத் தோன்றுமா?

அப்படி சண்டை போட்டால் விஷ்ணுவோடுதானே சண்டை போடுவதாக அர்த்தம்!

ஆகையினாலே, அந்தர்யாமியாக பகவான் உட்கார்ந்திருக்கிறான் என்பதாலே ஒருத்தரை வைதோமானால், அடித்தோமானால் விஷ்ணுவைத் தானே வைததாகிறது? அந்தத் திருமேனியிலே அவன் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறானா இல்லையா?

'அப்படி எல்லா இடத்திலேயும் பகவான் இருப்பதை உணர்ந்து விட்டால், சண்டைக்கோ, சச்சரவுக்கோ இடமுண்டோ?' என்று கேட்கிறார் ஆதிசங்கரர்.

அந்த ஞானம் நமக்கு ஏற்படவில்லை என்பதால்தான் வித்தியாசம், பேத ஞானம் ஏற்பட்டு ஒரு நிலையிலே சண்டை சச்சரவு ஏற்படுகிறது.


ஆகையினாலே, கவனித்துப் பார்த்தோமானால், உலகத்திலே இந்த மாதிரி விவேகமானவர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டம்.

ஒன்பதே படிக்கட்டுகள் – சுலபம்தான்! 99 படிக்கட்டுமில்லை; ஆயிரமும் இல்லை– ஒன்பதே ஒன்பதுதான் என்று ஏற ஆரம்பித்தோமானால் முதல் படிக்கட்டே மிகப் பெரிதாய் இருக்கிறது. இதை ஏறுவது எவ்வளவு சிரமம்! ஆகையினாலே, விவேகம் என்கிற படிக்கட்டை ஒருத்தர் ஏறி விட்டாரானால், தானாக அடுத்தப் படிக்கட்டை ஏறிவிடலாம். அவர் முதல் படிக்கட்டை ஏறுவது தான் கஷ்டம்.

லோகத்திலே சோளிங்கபுரத்துக்கு ஒருத்தர் போகிறார். இங்கே நினைத்துக் கொள்கிறபோது மெட்ராஸில் – எப்படி ஏறப் போகிறோமோ என்று சிரமமாயிருக்கிறது. ஆனால் அங்கே முதல் படிக்கட்டை ஏறி விட்டோமானால் மீதி படிக்கட்டை அவனே ஏற்றி விட்டு விடுகிறான். அங்கே போகும் எல்லார் அனுபவமும் என்ன...? 'நான் பயந்துகொண்டே போனேன்; ஆனால் அவனே என்னை மேலே ஏற்றிக் கொண்டான். நானா ஏறிவிட்டு வந்தேன் என்றிருக்கிறது...' என்பார்கள்!

அந்த மாதிரி பகவான் நம்மை ஏற்றி விடுகிறான். முதல் படிக்கட்டுக்குத்தான் யோசனை பண்ணுகிறோம் நாம். விவேகம் என்கிற படிக்கட்டை ஏறிவிட்டால் அடுத்தது நிர்வேதம்.

(தொடரும்)




அக்கா சந்தோஷத்தில் இருந்தாள். சாதாரண சந்தோஷமல்ல என்பது அவள் சிலுப்பிக் கொள்வதிலும் பதற்ற வழிசல்களிலும் நன்கு தெரிந்தது. அவளுக்கு சந்தோஷம் வந்தால் என்ன கூத்தடிப்பாள் என்பது அவளுக்கு இரண்டு வருடம் பிந்திப் பிறந்து அவளுடனேயே இருபத்தெட்டு வயதாகியிருக்கும் இந்த நாள் வரை வாழ்ந்து வரும் எனக்குத் தெரியாதா என்ன?

அத்திம்பேருக்கு ஒரு அஞ்சாயிரமோ ஆறாயிரமோ இன்சென்டிவாக வந்திருந்தது. அதை அவரும் தும்பிப்பாடியில் தனியாக வசித்து வரும் அவரது அக்காவுக்கு அனுப்பி வைப்போம் என்று ஆசைப்பட்டதாக ஞாபகம்.

அதை சண்டை போட்டுத் திருப்பி அத்தனைக்குமாக ஒரு ஒசத்தியான ஸ்டெயின் கார்ட் புடைவையை வாங்கியிருந்தாள். வெளிர் நீலம்; அதில் மிதக் கறுப்பில் மேகக் கூட்டம் பரவியிருக்கிற மாதிரி ஒரு டிசைன்.

அதைத்தான் கட்டிக் கொண்டிருந்தாள்.

இந்திரா சௌந்தர்ராஜன்



சாதாரணமாக நெற்றிப் புருவ மையம், அப்புறமாக வகிடு தொடங்கும் நுனிபாகம், தொண்டைக்குழி இங்கெல்லாம் குங்குமக் கட்டம் அவளிடம் எப்பவும் இருக்கும். அதாவது சிரத்தையாக சமையல்கட்டை ஒட்டியுள்ள அலமாரிப் பூஜை மேடை முன் உருகி உருகி அழுதிருந்தாலோ, வழிந்திருந்தாலோ இப்படி இருப்பாள்.

சந்தோஷப் பிரவாகமெடுக்கும் நாட்களில் அதெல்லாம் இருக்காது.

அந்த பூஜை மேடையை எட்டிப் பார்க்கிறேன். இன்று விளக்கைக் கூட ஏற்றவில்லை. அவள் வரையில் ஸ்வாமி என்பவர் அவளது பிரச்னைகளை, பிரார்த்தனை என்னும் பேரில் கேட்டுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்.

அது இல்லாத நாளில் அவள் அவரைத் தொந்தரவு

# அழுகை

செய்வதில்லையோ என்னவோ? சுற்றி வளைப்பானேன்.

என் அக்கா கஷ்டம் இருந்தால் மட்டுமே கடவுளை நினைக்கும் ஜாதி.

அடுப்பில் பால் பாயசம் கொதித்துக் கொண்டிருக்கிறது. ஏலத்தைக் கூடுதலாக தட்டிப் போட்டதில் அதன் ஆவி வீடு முழுக்க பேயாய்ச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

"என்னக்கா விசேஷம்... ஒரே குஷில இருக்கே?" கேட்டும் விடுகிறேன் நான்.

''போய் உன் அத்திம்பேரைக் கேள்....''

"ஏன் நீ சொல்ல மாட்டியா?"

"அவர் அப்பா ஆகப்போறத நான் சொல்றதவிட அவர் சொன்னாதானே விஜயா, நன்னாருக்கும்."

அக்கா சொல்லாமல் சொல்கிறாள். எனக்கும் ஜில்லிப்பு தட்டுகிறது.

"அக்கா... நிஜமாவா?" – அவளை குதூகலப் பரவசத்தோடு கேட்கிறேன்.

"ஆமாண்டா விஜயா. அம்பாள் ஏழு வருஷத்துக்கு பொறகு கண்ணத் திறந்துட்டா..."

"சந்தோஷம்கா. அதான் நேத்தி மூணு தடவை டாக்டர் பிரேமா சாமிநாதனைப் போய்ப் பாத்துட்டு வந்தியா?"

"ஆமாம். அவருக்கும் எவ்ளோ சந்தோஷம் தெரியுமா?"

"இருக்காதா பின்னே..." நான் பனிக்கிறேன். பந்தாகிறேன். பாற்கடல் மேல் தூக்கி எறியப்பட்டு மிதக்கிறேன். என்னவெல்லாமோ ஆகிறேன்.

"யோசிக்காதே ராமூர்த்தி! இதுல ஒண்ணும் தப்பில்ல.... நல்ல பொண்ணா இருந்தா அவளே இதைச் சொல்லணும்.

"அவளும் ஒரு ஓரமா இருந்துக்கட்டும். தேவ சாட்சியா பண்ணிண்ட கல்யாணத்தை வெண்டக்கா நுனியாட்டம் ஒடிச்சக்க முடியது. அந்தப் பாவமும் நமக்கு வேண்டாம். அதே சமயம் வாரிசே இல்லாம போயிடறதும் நல்லதில்ல. என்ன சொல்றே?"

– இந்த மாதிரியெல்லாம் பேச்சுக்கள் இந்த வீட்டில் நிகழ்ந்திருக்கின்றன. பேசியதில் ஒரு ஆண் மகன் கூட இல்லை. எல்லாம் அத்திம்பேரின் அம்மா, அக்கா, அத்தை, பாட்டிகள் என்கிற ரத்த வட்டங்களே.

அப்பொழுதெல்லாம் அக்கா பாத்திரங்களைப் போட்டு உடைப்பாள். குழம்பில் உப்பைக் கூட்டிப் போட்டும் ரசத்தில் மிளகாய்ப் பொடியைத் தாறுமாறாகக் கலக்கியும் ரகளை செய்வாள்.

பின் அப்படியே திசைமாறி லலிதாசஹஸ்ர நாமம், அபிராமி அந்தாதி என்று ஸ்தோத்தரம் செய்து அந்தப் பெண் தெய்வங்களையும் தோளைப் பிடித்து உலுக்குவாள்.

அத்திம்பேர் மட்டும் பதற்றமே படமாட்டார். "யார் பேசறதப் பத்தியும் கவலைப்படாதே லலிதா. நான் உன்னை ஒண்ணும் சொல்லாத வரை இதையெல்லாம் காதுலேயே வாங்கிக்காதே" என்று சமாதானமாகப் பேசிவிட்டு தனது ரெப் பேக்கை தூக்கிக் கொண்டு கால்ஸ் பார்க்கக் கிளம்பி விடுவார்.

நான் என்ன செய்ய முடியும்? கிட்டத்தட்ட ஒரு பேயிங் கெஸ்ட் நான். அக்கா கல்யாணமாகிப் போன திருச்சியிலேயே எனக்கும் ஒரு வேலை வாய்க்கும் என்று கண்டேனா நான்?

ஆரம்பத்தில் லாட்ஜில் ரூம் போட்டு நாலு

## ஒரே கேள்வி!

**கடவுளைப் பார்க்க நேர்ந்தால் என்ன கேட்பீர்கள்?**



பேருடன் சேர்ந்துதான் தங்கினேன். அத்திம்பேர்தான் கையைப் பிடித்து இழுத்து தன் இல்லமான இங்கே என்னை கூட்டிக் கொண்டு வந்து கூடவே இருக்கச் செய்து விட்டார்.

"நாங்கள்லாம் இருக்கும்போது நீ லாட்ஜில் தங்கி இருக்கிறது நன்னால்ல விஜயன். கூட இரு. உங்க அக்காக்கும் அது தெம்பா இருக்கும்" என்று அத்திம்பேர் அநியாயத்திற்கு ஒரு விசாலம் காட்டினார்.

அத்திம்பேரின் அப்பா கைலாசநாத சாஸ்திரிகளும் என்னை வாரி அணைத்துக் கொண்டார்.

மலடி மலடி என்று அக்கா பட்டது கொஞ்சமில்லை. ஒரு பிறந்த குழந்தையைத் தூக்க முடியாது. உற்சாகமாய் சினிமா பாட்டு கேட்டு முணுமுணுக்க முடியாது. பளிச்சென்று உடை உடுத்தக் கூடாது. கல்கி குமுதம் விகடன் என்று எதையும் விரிக்க முடியாது.

– இதெல்லாம் மாறப் போகிறது. அக்காவும் சரியான வாயாடிதான். இருந்தும் மலட்டுப் பட்டம் அவளை குறுக்கிப் போட்டிருக்கிறது.

இன்று அவள் நிமிர்ந்து நிற்பதைப் பார்த்தால்....

எனக்கு பயமாக இருக்கிறது!

ஏண்டிம்மா என்னமோ கேள்விப்பட்டேனே... நிஜமாடி..." அக்காவை நெருங்கும் மாமியை அக்கா பார்க்கும் பார்வை இருக்கிறதே... அடேயப்பா!

"இல்ல பொய்... அந்த டாக்டர்கிட்ட காசைக் கொடுத்து பொய் சொல்லச் சொன்னேன்" இது அக்கா.

"நீ சொன்னாலும் சொல்லுவேடி. ஆசையா கேட்டா பதில் சொல்ற லட்சணத்தப்பாரு."

"இதுதான் ஆசையா கேக்கற லட்சணமாக்கும்."

"நீ ஏன்மா இதுகிட்ட போய் வாயக் கொடுக்கறே. பெத்து ஒழுங்கா வீடு வந்து சேரட்டும். அப்புறம் பேசிக்கலாம்." அக்காவின் இளைய நாத்தனார். குலுக்குகிறாள்.

"கிழிப்பே. என் பிள்ளை உன்னை ஃபுட்பால் ஆடிடுவானாக்கும்."

"அடேங்கப்பா இப்பவே பிள்ளைன்னு நீ முடிவு பண்ணிட்டா ஆச்சா. இது பொட்டையா இருந்தா என்ன பண்ணுவே?"

"ஏன் நீ இல்ல ரவுடியாட்டம். அப்படி வளத்துட்டுப் போறேன்."

"கடவுளே! இந்தியாவுக்கு நிலையான ஒரு ஆட்சியைக் கொடுப்பா" என்று கேட்பேன்.

– விவேக்

கடவுளே...

எனக்குத் தலை சுற்றுகிறது.

நேற்று வரை மடிடி என்று சண்டை.

இன்று அது ஆணா பெண்ணா என்று சண்டையா?

மலரினும் மெல்லிய இனம் ஏன் இப்படி களரிச் சண்டை போடுகிறது?

இடையில் புகுந்து சத்தி விடுவது என்று தீர்மானிக்கிறேன். ஆனால் முடியவில்லை. எனக்கென்ன என்று சாஸ்திரிகளே பாகவதம் படித்துக் கொண்டிருக்கையில் நான் யார் இடையில் புக...?

பிரசவமாகி விட்டது அக்காவுக்கு. பெண் தான்! குழந்தை மைதா பொம்மையாட்டம் சிரிக்கிறது.

"என்ன பேர் வைக்கலாம் விஜயா..." கேட்கிறார்.

"ரம்பையாட்டம் இருக்கா அத்திம்பேர். ரம்பான்னு வைக்கலாம்."

"உத்தரத்துல பொறந்துடுச்சா. தாயார் நட்சத்திரம்; மகாலட்சுமின்னு வைக்கலாம்" என்கிறார் சாஸ்திரிகள். அப்படியே திரும்பி "நீ என்னடி சொல்றே?" என்று மாமியை கேட்கிறார்.

"புள்ளையா பொறந்தா உங்க பேர வெக்கறதா பிரார்த்தனை பண்ணிண்டிருந்தேன். பொட்டையான்னா பொறந்து தொலைச்சிருக்கு. ஏதோ ஒரு பேர். எத்த வெச்சா என்ன... இவ அம்மாளவைப் போல வாயாடாம இருந்தா சரி..."

"உனக்கு வாய் ரொம்ப கம்மின்னு நினைப்போ" – மாமாக்கு கோபம் எகிறிக் கொண்டு வந்தது.

"ஜாஸ்திதான். இல்லேன்னா உங்களை எல்லாம் சமாளிக்க முடியுமாக்கும்." மாமியும் விடுகிற மாதிரி இல்லாமல் பதிலுக்குப் பதில் சொல்ல, அது பட்டாசுத் திரியாகப் பற்றிக் கொண்டது. தேவுடா!

"யாரை யார்டி சமாளிக்கறா? நாங்கதான் புடைவைல ஆரம்பிச்சு கோடியாத்து கோமளம் கோலம் போட்டது வரை வாய் ஓழிய பேசிக்கறோமாக்கும்? காது, மூக்கு, கழுத்து காலுன்னு உறுப்புக்கொரு நகை பண்ணிப் போட்டுண்டு அதுவும் பத்தலைன்னு அலுத்துக்கறோமாக்கும்? ஆசை, பொசசிவ்னெஸ், பொறாமைன்னு அழுகிண்டு பொண்ணாப் பொறக்கறதே பெரிய பாவம்கறடயலாக்லாம் பேசறோமாக்கும்...?"

– மாமா கேள்விகளாக அடுக்கியதில் மாமி ஆடித்தான் போய் விட்டாள். அதற்கும் பதில் சொல்லத் துடிப்பது மாமியின் கன்னச் சதுப்பின் இடையே பாத்தபோது தெரிந்தது.

"என்ன பெரிசா கேள்வியா அடுக்கறேள். இப்படி கேட்டுட்டா பயந்துடு வேணா... கேள்வி கேட்டா வாயாடி... தெரிய லைன்னா ஊமைக் கோண்டா?"

நடுவில் குழந்தையிடம் அழுகை பீறிட ஆரம்பித்தது. அதன் காரணமாகப் பேச்சு கொஞ்சம் அடங்கி அழுகைக்குக் காரணம் பார்க்கத் திரும்பியது.

அக்கா என்னென்னவோ செய்து பார்த்தாள். பால் கொடுப்பதிலிருந்து தோளில் தூக்கிப் போட்டு 'ஜோ ஜோ' பாடுவது வரை என்னென்னவோ செய்தாள். அழுகை நின்ற மாதிரியே தெரியவில்லை.

"உரம் விழுந்துடுத்தோ என்னவோ?"

"ஆமா பொறந்த குழந்தைக்கு உரம் விழற தாக்கும். அதுக்கு வயத்த வலிக்கறது. வெளிக்குப் போலைன்னாலும் அழும். கொஞ்சம் சர்க்கரைத் தண்ணி தரலாம்..."

– மாமியின் கருத்தை அக்கா காதிலேயே போட்டுக் கொள்ளாமல் மடியில் போட்டு மாரை வருடி என்னென்னவோ செய்து பார்த்தாள்.

நான் கவனித்துக் கொண்டிருந்தேன்.

அக்கா குழந்தை அழும் அதே சமயம் மாமி யாரையும் அழ வைக்கத் தீர்மானித்து விட்டாள் என்பது எனக்கு புரிந்து போனது.

"கொடுடி இப்படி... வெறும் தட்டினால் லாம் அழுகை நிக்காது. வசம்ப கொஞ்சம் அரைச்சு பூசறேன் தா இப்படி..."

"நாட்டு வைத்யம்னு எதையும் தரப்படாதுன்னு சொல்லியிருக்கார் டாக்டர். நீங்க போங்கோ. அழுதா அழட்டும். ஒண்ணும் குறைஞ்சுடாது."

– மாமியின் முகம் அடுத்தக் கணம் ரத்தச் சிவப்பானது.

"என்னடி நினைச்சுண்டிருக்கே..." என்று ஒரு பாய்ச்சல் பாய்ந்தபோது மாமாவுக்கே பொறுக்கவில்லை. எழுந்திருந்து மாமி கன்னத்தில் பளார் என்று ஓர் அறை விட்டார். அப்பா கையை ஓங்கவும், அத்திம்பேர் விட்டார் ஒரு அறை அக்கா கன்னத்தில்.

ஹக்!

அந்த சப்தம் கேட்டோ இல்லை தற்செயலாகவோ, குழந்தையிடம் அழுகை நின்று போனது. ஆனால் இரண்டு பெண்களும் கண்ணீர் பெருக்கினார்கள்!

குழந்தை இப்பொழுது, மலங்க மலங்கப் பார்த்தது. லேசாகச் சிரிப்பது போலக் கூடத் தோன்றியது.

# நந்தன்

வண்ண வண்ணச் சிறு மொட்டுகளால் அந்தக் கூடம் நிரம்பியிருந்தது. தொட்டி தொட்டியாய்ப் பூக்கள் பூத்துச் சிரிக்கும் மலர்க் கண் காட்சிக் கூடமல்ல அந்த இடம். பிஞ்சு பிஞ்சாய்ப் பரவி நிற்கும் எல்.கே.ஜிக் குழந்தைகளின் பள்ளிக்கூடம் அது. முழுசாய் மூன்று வருடங்கள் அம்மாவின் மடியிலேயே கொஞ்சிக் கொஞ்சி விளையாடி விட்டு, இன்று முகம் அறியா டீச்சரின் மத்தியில் விடப்பட்ட அந்தக் குழந்தைகளின் விழிகளில் மிரட்சி மண்டிக் கிடந்தது. சில குழந்தைகள் உச்சமாய்த் தேம்பி அழுது கொண்டும், சிலது தண்ணீரைக் கொட்டி விளையாடிக் கொண்டும், சில இருத்தி வைக்கப்பட்ட பெஞ்சில் குத்துக்கல்லாய் அமர்ந்தும் இருந்தாலும் விழிகளில் விரவிய பயக்களை என்பது எல்லாச் சிட்டுகளுக்கும் பொதுவானதாக இருந்தது.

ஒவ்வொரு குழந்தையின் அருகிலும் அதனதன் அம்மாக்கள் ஆதுரமாய் அதனதன் கைகளைப்பற்றி நின்றிருந்தனர். சிலர் வாஞ்சையோடு தங்கள் குழந்தைகளின் கன்னம் பரவிய கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தனர். அம்மாவின் அத்யந்தம் தான் ஒவ்வொரு குழந்தைக்கும் எத்தனை ஆறுதலான விஷயம்? தன் குழந்தை சிரித்தால் தானும் சிரித்து, அது அழுதால் அதற்காய் விசனப்பட்டு, அது துக்கித்தால் அதன் நெஞ்சு நீவி ஆறுதல் சொல்லி....



இப்பவா அல்லது அப்பவா... எப்போது அழலாம் என்பதற்குத் தயாராயிருந்த சந்துருவை வாசுகி சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள். வாசுகியின் சமாதானம் சந்துருவை அப்போதைக்கு சாந்தப்படுத்தினாலும் அடுத்த நிமிஷம் அவன் விழி சுழற்றி வகுப்பறையைப் பார்த்து மீண்டும் அழுவதற்குத் தயாரானான்.

வாசுகி சந்துருவின் டிபன் பாக்ஸைத் திறந்து ஒரு பிஸ்கட்டை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். சர்க்கரை தூவப்பட்ட பிஸ்கட் சந்துருவுக்கு சந்தோஷம் தர, அதைத் தின்ன அவன் யத்தனித்தபோது, பக்கத்து இருக்கைக் குழந்தை அந்த பிஸ்கட்டையும் அதைத் தின்னப் போன சந்துருவையும் ஏக்கமாய்ப் பார்த்தது. பக்கத்து இருக்கைக் குழந்தையின் ஏக்க விழிகளைப் பார்த்த வாசுகி, சந்துருவைத் திருப்பி உட்கார வைத்தாள்.

"கண்ணு பட்டுடப் போறது சந்துரு– திரும்பி உக்காந்து சாப்டும்மா".

இதற்குள் பள்ளிக்கூட முதல் மணி ஒலிக்க, பெற்றோர்கள் அனைவரும் வெளியில் நிற்கப் பணிக்கப்பட்டார்கள். எல்லா தாய்மார்களும் தங்கள் குழந்தைகளைத் தனியே விட்டுப் போக மனமின்றி, திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே கூடம் விட்டு வெளியேறினர். குழந்தைகளின் அழுகைச் சத்தம் முன்னிலும் வீரியப்பட்டது. முன்னர், அழுது விடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்த குழந்தைகள் கன்னம் துடிக்கத் தேம்ப ஆரம்பித்தன.

வாசுகி ஜன்னல் கம்பி இடைவெளியில் சந்துருவை எட்டிப் பார்த்தாள். சந்துரு முழு பிஸ்கட்டையும் தின்று விட்டு ஒரொரு பிஸ்கட் துகள்கள் உதட்டு விளிம்பில் ஒட்டிக் கொண்டு நிற்க, சமர்த்தாய் அமர்ந்திருந்தான்.

அதிகமாய் அழுது தேம்பிய ஒரு குழந்தையை டீச்சர் எடுத்து இடுப்பில் தூக்கிக் கொண்டாள். அதன் கண்ணீர் துடைத்து சமாதானப்படுத்தி, அதன் கையில் ஒரு சாக்லேட் கொடுத்தாள். சாக்லேட்டை வாங்கிக் கொண்ட குழந்தை கொஞ்சம் கொஞ்சமாய்த் தன் அழுகையை நிறுத்தியது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த சந்துருவுக்கு தனக்கும் சாக்லேட் வேண்டும் என்று ஆசை கிளர்ந்தது.

அழுகை நிறுத்திய குழந்தையை இறக்கி விட்ட டீச்சர் அடுத்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். "பிள்ளைங்களா... என்னைப் பிடிச்சிருக்கா பிள்ளைங்களா?" என்று கேட்டாள்.

குழந்தைகள் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் ஒன்றையொன்று பார்த்தும், தரை பெருக்க மற்றும் சுவரை வெறித்தும் எண்ணம் பரிமாறிக் கொண்டன. ஆனால் அந்த எண்ணப் பரிமாற்றம் என்னவென்று சொல்வதற்கு எந்தக் குழந்தைக்கும் தெரியவில்லை.

"சொல்லுங்க கண்ணுங்களா... நான் யாரையும் அடிக்க மாட்டேன். ஏ.பி.ஸி.டி சொல்லித் தருவேன். பாப்பாப் பாட்டு பாடிக் காட்டுவேன். எல்லோருக்கும் சாக்லேட் தருவேன். இப்ப சொல்லுங்க.. என்னைப்



# குழந்தைகள், பெண்கள், திம்மாக்கள்



பிடிச்சிருக்கா...?"

டீச்சரிடமிருந்து சாக்லேட் பெற்றுக் கொண்ட துடுக்குக் குழந்தை உட்கார்ந்தபடியே சொல்லியது. "மிஸ்... எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு" மழலை மறையாத சொக்கத் தமிழில் அந்தக் குழந்தையின் வார்த்தைகள் வகுப்பறை முழுதும் பரவி அந்தச் சூழலை ரம்மியமாக்கியது.

பிறகு டீச்சர் ஏதோ பாடினாள். பாடிக் கொண்டே கால்களைத் தூக்கி, கைகளைத் திருப்பி நர்த்தனம் ஆடி

னாள். அத்தனை பெரிய ஆகிருதியின் ஆட்டம் குழந்தைகளுக்கு சந்தோஷம் தந்தது. டீச்சரின் பாட்டு அவர்களைக் குஷிப்படுத்தியது. அந்த ஆட்டத்துக்கும் பாட்டுக்கும் நடுவே டீச்சர், அ, ஆ, இ.... என்று உயிரெழுத்து முழுவதையும் சொல்லிக் கொடுத்தாள். குழந்தைகள் திருப்பிச் சொல்லி குதூகலித்தன.

அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் பள்ளிக் கூடம் போக வேண்டும் என்பதாக அதுகள் அடம் பண்ண ஆரம்பித்தன.

அன்று பள்ளியில் நடந்த ஒரு விஷயம் வாசுகியை ரௌத்ரியாக்கியது. குழந்தை சந்துரு சிறுநீர் கழிக்க வேண்டும் என்று கூறியதைக் கண்டு கொள்ளாமல் டீச்சர் இருந்ததும், அதனால் குழந்தை அன்று பல மணி நேரம் சிறுநீரை அடக்கிக் கொண்டு இருந்ததையும் கேள்விப்பட்ட வாசுகி ருத்ர ஸ்வரூபியானாள். டீச்சரிடம் வலிதாய் சண்டைக்குப் போனாள்.

பிறகுதான் புரிந்தது. குழந்தை சந்துரு 'சூசூ' என்று சொல்லியிருக்கிறான். அது புரியாத டீச்சர் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்திருக்கிறாள். பிறகு குழந்தை, டிராயரைப் பிடித்துக் கொண்டு கதறவும், புரிந்து கொண்ட டீச்சர் அவசரமாகச் செயல்பட்டிருக்கிறாள்.

இந்த பாஷைப் பகிர்வில் ஏற்பட்ட சிக்கல் சிரிக்க வைத்தாலும் வாசுகிக்கு அதை ரசிக்கத் தோன்றவில்லை. அந்த டீச்சர் மீது அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய்ப் பொங்கியது.

தன் பக்கத்து இருக்கைக் குழந்தை தன்னைக் கிள்ளி விட்டதாய் சந்துரு ஒரு நாள் அழுது கொண்டே வீட்டுக்கு வந்தான்.

அடுத்த நாள் பள்ளிக்கூடம் சென்ற வாசுகி, டீச்சரிடம் பொறிந்து விட்டாள். 'இதுதான் நீங்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் லட்சணமா?' என்று ஏசினாள். தாங்கள் ஆயிரத்துக்கும் மேலாய் ஃபீஸ் கட்டி குழந்தைகளைப் படிக்க வைப்பதாய் புஜம் தட்டி ஆர வாரித்தாள்.

டீச்சரின் சமாதானங்கள் வாசுகியைச் சமனப்படுத்தவில்லை. 'குழந்தைகள் அப்படித்தான் முன்னே பின்னே இருக்கும். இதையெல்லாம் பெரிது படுத்தக் கூடாது மேடம்' என்கிற டீச்சரின் வார்த்தைகள் வாசுகிக்கு இன்னமும் கோபம் கிளறிற்று. "அதெப்படி நீங்க சொல்லலாம்? நீங்க தான் அதுகளை கவனிச்சுக்கணும்" என்பதாய் சண்டைக்குப் போனாள்.

டீச்சர், "இனிமேல் நான் பார்த்துக் கொள்கிறேன் மேடம்" என்று தணிந்து பேசிய பிறகும் முழுமையாய் சமாதானமாகாமல் வாசுகி திரும்பினாள்.

ஆனால் பள்ளிக்கூடத்தின் அடுத்த நாள் நிகழ்வு வாசுகியை ஏகத்துக்குக் கிளறிவிட்டுவிட்டது. "தன் பிஸ்கட்டைத் தின்று தண்ணீரையும் எடுத்துக் குடித்து விட்டது பக்கத்திலிருக்கும் தீபா" என்பதாய் சந்துருவின் புகார்.

வாசுகிக்கு நிலை கொள்ளவில்லை. தன் குழந்தையைச் சீண்டுவதை அவளால் பொறுக்க முடியவில்லை. டீச்சரிடம் சொல்லி விட வேண்டுமென்றுதான் முதலில் வேகமாய்ப் போனாள். ஆனால் டீச்சர் ஏதாவது நொண்டிச் சமாதானம் சொல்வாள், அது நம்மை முன்னிலும் எரிச்சல் படுத்தும் என்று அவளுக்குத் தோன்றியது.

சந்துருவை அழைத்துக் கொண்டு வாசுகி, பக்கத்து இருக்கைக் குழந்தையிடம் போனாள்.

அந்தக் குழந்தை தன் முன் நிற்கும் கோப முகத்தை 'தேமே' என்று பார்த்துக் கொண்டிருந்தது. "சந்துருவோட பிஸ்கட்டை எடுத்துத் தின்னியாடீ... அவன் தண்ணியை எடுத்துக் குடிச்சியா நீ...?" வாசுகியின் கேள்விகள் அந்தக் குழந்தைக்குப் புரிந்ததா தெரியவில்லை. ஆனால் யாரோ ஒரு அம்மா தன்னைக் கடிந்து கொள்கிறாள்; தன் மீது கோபம் கொள்கிறாள் என்று மட்டும் அந்தக் குழந்தைக்குப் புரிந்தது.

காலை நேரமாதலால் எல்லோரும் வருவதும் போவதுமாய் கிளாஸ் ரூம் சலசலவென்று சப்தித்துக் கிடந்தது.

வாசுகியின் இறுகிய முகமும் அவள் விழிகளில் தொக்கி நின்ற வெஞ்சினமும் அந்தக் குழந்தையை பயப்படுத்தியது. அதன் விழி விளிம்பில் கண்ணீர் முட்டிக் கொண்டு நின்றது.

"இனிமே இவன்ட்டேர்ந்து ஏதாவது எடுப்பியா?" வாசுகியின் கேள்விக்கு குழந்தை, மாட்டேனென்று இடம் வலமாய் தலையசைத்தது. "இவனை கை நீட்டி அடிப்பியா?" குழந்தை மீண்டும் தலையசைத்து தன் மறுப்பைத் தெரிவித்தது. "இனிமே சமத்தா இருப்பியா?" வாசுகியின் இந்தக் கேள்விக்கும் அந்தக் குழந்தை இடம் வலமாய் தலையசைத்து, பின் தப்பிதமாய்த் தலையசைத்து விட்டோம் என்று தோன்றவே, சடாரென்று மாற்றி 'இருப்பேன்' என்பதாய் விழிகளாலும் தலையசைப்பாலும் சமிக்ஞை காட்டியது.

"இனிமே இவ உங்கிட்ட வம்புக்கு வர மாட்டாடா சந்துரு" என்றபடி அவனுக்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டு வகுப்பறை விட்டு வெளியேறினாள்.

மறுநாளும் சந்துரு அழுது கொண்டே வந்தான்.

பதறிப் போய் விசாரித்தவளுக்கு இம்முறையும் அதிர்ச்சியே கிடைத்தது. சற்றே வேறு விதம்.

"தீபாவை நீ ஏம்மா மிரட்டினே? அவ என் கூட பேசமாட்டேங்கறா. நீ வந்து சொல்லு!" ●

# இறந்தவன்

ஒரு வாரமாக எல்லா இடங்களுக்கும் சைக்கிளில்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு வருட காலமாக பைக்கில் வளைய வந்து விட்டு இப்போது மீண்டும் சைக்கிளில் வலம்வருவது சற்று சிரமமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் சூழ்நிலையை அனுசரித்துச் செல்லும் கட்டாயத்தினால் கடந்த வாரம் பைக்கை விற்றுச் சில கடன்களைச் சரிசெய்ய வேண்டியிருந்தது.

சாந்தா. சமையலறையில் என்ன செய்கிறாளோ? வீடு முழுவதும் புகை சூழ்ந்து அளலாக இருந்தது. கமறல் சற்று அதிகமாகவே, கையிலிருந்த மேஜை டிராயரை எடுத்துக் கொண்டு வெளியே வராண்டாவில் வந்து அமர்ந்தேன்.

புகையைக் கண்டாலே இப்போதெல்லாம் மனம் பதறுகிறது. மூங்கில், தேக்கு, பிள்ளமருது என எத்தனையோ மரவகைகள்; கட்டில், மேஜை, நாற்காலி, கதவுகள், ஜன்னல்கள் எனப் பல வடிவங்களாய் எரிந்து அடங்கிய பின்னும் புகைந்து கொண்டிருந்தது. கடந்த பத்தாம் தேதி ஒரே இரவில் குடும்பப் பொருளாதார நிலை பாம்பின் வால் பற்றி இறங்கின பரமபத விளையாட்டாய் மாறியது. மீண்டும் துவக்க நிலையில் நானும் எனது குடும்பமும்.

சில தேவையான பில்களை எடுத்து வைத்துக்



கொண்டு, மற்ற பில்களைக் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தேன்.

"டேய் விஸ்வா, அப்பாவைச் சாப்பிட வரச் சொல்லு!" - ஹாலில் என் மனைவியின் குரல் கேட்டது.

"சாந்தா, இன்னைக்கு சுந்தரா மாமா வீட்டுக்குப் போய்ட்டு வரலாம்னு இருக்கேன். ஒரு எண்ணூத்தம்பது ரூபாய் வரவேண்டியிருக்கு. எனக்கென்னமோ கேட்க மனசில்லை."

"போய்ப் பார்த்துட்டு வாங்க. நிலைமையைப் பார்த்து முடிவு பண்ணுங்க."

"அதான், எதுக்கும் நம்ம நிலைமையையும்



முத்துராமன்

சொல்லிட்டு வரலாம்னு..."

"நியாயமாப் பார்த்தா கேட்கக் கூடாது. எவ்வளவோ செஞ்சிருக்கார். இருந்தாலும் நம்ம சூழ்நிலையையும் கொஞ்சம் பார்க்க வேண்டியிருக்கே" என்றாள் சாந்தா.

ஐ.டி.ஐ. படித்த காலம் முதல் ரிஜிஸ்தர் மேரேஜ் செய்து கொண்ட தினம் வரை, பல இடங்களில் பலமுறை அப்பா ஸ்தானத்தில் இருந்திருக்கிறார். இது எல்லாம் எட்டு வருடங்களுக்கு முன்பு. கொளத்தூரில் சொந்த வீடு கட்டிப் போன பிறகு, நான்கைந்து முறை பார்த்ததோடு சரி. பிள்ளைகளுக்கு ரயில்வேயில் வேலை கிடைத்து, நல்ல நிலையில் இருப்பதாக நண்பரொருவர் அடிக்கடி சொல்வார். கடைசியாகத் தேக்கு மரத்தில் கட்டில் ஒன்று செய்து, கொண்டு போய் இறக்கிய பொழுது பார்த்தது. அதற்கு அட்வான்ஸாக ஒரு தொகை கொடுத்துச் செய்து கொடுக்கச் சொன்னான், மாமாவின் மூத்த மகன் ராஜு. அதன்பின் பார்க்கவேயில்லை. இன்று போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்தேன். எண்ணூற்றைம்பது ரூபாய் பாக்கி. இருக்கிற நிலையில் அது சாதாரணத் தொகையாகப்படவில்லை.

அப்பா மட்டும் இப்ப இருந்திருந்தால், "வேணாம்பா. உனக்கு எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அவன்கிட்ட வசூலுக்குன்னு போய் நிக்காதே. நான் நின்னு செய்ய வேண்டியதெல்லாம் அவனா பாத்துப் பாத்து செஞ்சிருக்கான். அவன்கிட்ட மட்டும் நீ ஒரு முதலாளியா நடக்காத! அவன் புள்ள மாதிரி நடந்துக்க" என்று சொல்லியிருப்பார். எழுபத்தையாயிரம் ரூபாய் நஷ்டம் வந்ததால் இப்படி ஒரு சூழ்நிலை. இப்படி ஒரு இழப்பு யாரும் எதிர்பார்க்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் போய்க் கேட்பதில் தப்பில்லை.

வாசலில் சாரம் கட்டி ஓலைக் கூரை வேயப்பட்டிருந்தது.

சைக்கிளைப் பூட்டி நிமிர்கையில் ராஜுவும் அவன் அக்காவும் வந்தார்கள்.

"வாங்க," என இருவரும் ஒன்றாக அழைத்தனர். ராஜுவின் முகமும், குரலும் சோகத்தில் நிரம்பியிருந்தது. நன்றாக வளர்ந்திருந்தான். இவனுக்குத்தான் ரயில்வே உத்தியோகம் முதலில் கிடைத்ததாக நண்பர் சொல்லியிருந்தார்.

உள்ளே சென்று ஒரு சேரில் அமர்ந்தேன். ராஜுவே ஆரம்பித்தான்.

"போன பதினோராம் தேதி விடியற்காலை முடிஞ்சு போச்சண்ணா! அப்பா போயிட்டார்."

அவன் கண்களில் நீர் படர்ந்திருந்தது.

"எப்படி?" என்னால் ஒற்றை வார்த்தையாகவே பேச முடிந்தது.

"ஹார்ட் அட்டாக்."

"ஹாஸ்பிடல் போனீங்களா? இல்ல..."

"இங்கேயே முடிஞ்சாச்சு. காலைல எப்பவும் நாலரை மணிக்கு எழுந்திருப்பார். அன்னைக்கும் அப்படித்தான் எழுந்து வெளில போயிட்டு வந்து அக்காகிட்ட குடிக்கத் தண்ணி கேட்டிருக்கார். கொண்டு வர்றதுக்குள்ளே நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டு படுத்துட்டார். ரெண்டு நிமிஷந்தான்."

என் முன் தீர்மானங்கள் போன இடம் தெரியவில்லை. என் குரல் வேறு மாதிரி ஒலிக்கத் தொடங்கியது.

"அவர்தான் எனக்கு எல்லாமே செஞ்சு வச்சார். ஆனா, கடைசியா அவரைப் பார்க்க முடியாமல் போயிடுச்சு."

"நான் அன்னைக்குக் காலைல உங்களுக்கு போன் ட்ரை பண்ணேன். கிடைக்கலை. நேத்துதான் காரியம். அதுக்கும் சொல்ல முடியலை."

அன்றுதான் என்னுடைய கடையும் எரிந்து போனது என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. மௌனமாக அமர்ந்திருந்தேன். காப்பி கொண்டு வந்து கொடுத்தார்கள். மறுக்கவும் முடியவில்லை. காப்பியைக் குடித்துவிட்டு, "சரி, நான் கிளம்பறேன்" என்று எழுந்தேன்.

வழியில் ஒரு பூங்காவில் சைக்கிளை நிறுத்தி விட்டு உள்ளே போய் அமர்ந்து கொண்டேன். வாய் விட்டு அழவேண்டும் போல் தோன்றியது. எனக்காகவா, சுந்தரா மாமாவுக்காகவா என்பதுதான் புரியவில்லை. ●

## ஒரே கேள்வி!

**இந்திய கிரிக்கெட் அணியில், டெண்டுல்கருக்கு பதிலாக உங்களைச் சேர்த்துக் கொண்டால் எப்படி விளையாடுவீர்கள்?**



டெண்டுல்கரை ஒரு காமெடி நடிகராகப் போட்டால் எந்த அளவுக்கு நடிப்பாரோ, அந்த அளவுக்கு விளையாடுவேன்.

— பாண்டியராஜன்

# வட்டமேஜை

## பொருத்தம்

✉ 'அபாயகரமான நிரந்தரத் தீர்வு' எனும் மாய வலையில் சிக்கி விடாதிருக்கத் தாங்கள் தலையங்கம் வாயிலாக இந்திய அரசுக்குப் பொருத்தமான எச்சரிக்கையைக் கொடுத்துள்ளீர்கள்!

இனாம் மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

## நாற்காலி

✉ யோகியின் 'திருமணம் சொர்க்கத்தில்... உறவுகள்...' சிறுகதையும், சங்கர நாராயணனின் 'டேக் ஒன் டேக் டூ' சிறுகதையும் கல்கி இதழின் இரு கண்களாக அமைந்திருக்கின்றன. முதல் சிறுகதை நெஞ்சைத் தொட்டதென்றால் இரண்டாவது கதையின் வித்தியாசமான அமைப்பினால் நெஞ்சில் நாற்காலியே போட்டு உட்கார்ந்து விட்டது. சிறந்த தேர்வுகள்.

விழுப்புரம்-2, வை. வெங்கடேசன்.

## ஜில் நெருப்பு?

✉ நெருப்பென்று தெரிந்தும் சில்லென்றிருக்காதா என்று ஏக்கப் பெருமூச்சுடன் கை விட்டுப் பார்க்கும் காங்கிரசின் முழு மூடத்தனத்தைத் தலையங்கத்திலும், கார்ட்டூனிலும் சு(கு)ட்டிக் காட்டியிருந்த விதம் அருமை!

ஆதமங்கலம் புதூர், கே. சண்முகம்.

## மகிமை

✉ 'கணேஷ் - வசந்த்' கூட்டணியின் மகிமையைச் சிதைக்காமல்... சுஜாதாவை சங்கடப்படுத்தாமல் இந்த 'இருவர்' கூட்டணியாவது வெற்றி பெறட்டும்!

புனே, ஜெ. ரஜினி ராம்கி.

## பார்வை புதிது

✉ மதுரையில் நடந்த கல்கி நூற்றாண்டு விழாவில் நேரில் பார்த்தது ஒரு முகப் பார்வையென்றால், கட்டுரைத் தகவல்கள் பன்முகப் பார்வை - மிகச் சிறப்பு!

மதுரை-9, இரா. கல்யாணசுந்தரம்.

# பொருத்தமான எச்சரிக்கை!

## உள்ளம் காணோம்!

✉ 'பணம்' பகுதியில் சிவகுமார் எழுதிய கட்டுரை உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

சென்னை-28, அஸ்வதிமணாளன்.

## காவியம்

✉ வாரம் தோறும் கார்கில் பிரச்னை குறித்து கல்கி வழங்கி வரும் செய்திகளும், கட்டுரைகளும் நேரில் சென்று பார்த்த உணர்வினை ஏற்படுத்தியது மறுக்க முடியாத உண்மை! ஈரோடு தமிழன்பன் எழுதிய 'உங்கள் பின்னால் இந்தத் தேசம்!'- என்னும் கவிதை வெறும் வார்த்தைகள் மட்டுமன்று! நூறு கோடி இந்தியர்களின் இரத்தத்தினால் வரையப்பட்ட ஓர் உணர்ச்சி மிகு காவியம் அது!

பிச்சாண்டார்கோவில், எம். காமராஜ்.

## மறக்க முடியவில்லை!

✉ மனதில் நிற்கும் சம்பவங்கள், மனதில் அசை போட வைக்கும் சுதா பாத்திரங்கள். நான்கே வாரங்கள்தான் என்றாலும் 'முதல்வர் மகள்' மறக்கவே முடியாதவள் ஆகி விட்டாள்.

சென்னை-39, சிம்மவாஹினி.





Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.

Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1900/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 950/- (Air Mail)


இல்லதரசிகளுக்கு புதிய துணை
சமையல் கலையில் திருப்புமுனை
மில்க் பாய்லர், இட்லி குக்கர்,
வாட்டர் ஃபில்டர், குழிகரண்டி
எல்லாம் தந்திடும்
Murugan
முருகன் மெட்டல் என்றாலே
முகம் மலரும் தன்னாலே
Murugan
முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்
21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை — 3.
போன்: 5350182, 5343412

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) ...
post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka